எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam எங்ஙல் தேஸம்

மலர்: 13 | இதழ்: 04 | 2014 பெப்ரவரி 15-28 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 263

RAFA EXPORTS (PVT)LTD

R & E அபாயா

ஏற்றுமதி தரத்தில் தயாரிக்கப்பட்ட Casual, Functional, Wedding, Coloured, Coat போன்ற அபாயாக்கள் விற்பனைக்கு உண்டு.

R & E அபாயாக்களின் சிறப்பம்சங்கள்

- அதி தரமான புடைவை
- குறைந்த விலை
- அனைவருக்கும் ஏற்ற அலங்காரம்

வியாபாரிகளுக்கு விஷேட கழிவு

126/7C, Kandy Road, Thihariya

(பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)

Tel: 0332293096 Mobile: 0777060950

Web: rafaexports.com

ஜெனீவா: அமெரிக்காவின் அறிக்கையும் அச்சத்தில் அரசாங்கமும்

07

நேர்காணல்: தமிழ் சமூகத்தைப் போல் முஸ்லிம் சமூகம் விழித்துக் கொள்ளவில்லை

- ஹஸன் அலி எம்.பி. -

10

சிரியா: ஜெனீவா வட்ட மேசையில் நின்று சுழலும் கொலை ராட்டினம்

13

இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வில் முஸ்லிம்களுக்கும் சம பங்கு வேண்டும்

மு.கா. செயலாளர் நாயகம் எம்.ரீ. ஹஸன் அலி எம்.பி.

ஏ.எம். பாயிஸ்

இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கான ஒரு இறுதித் தீர்வு, நிரந்தரத் தீர்வு எட்டப்படும்போது, முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களைப் போன்று தனியான ஒரு சமூகமாக அடையாளம் காணப்பட்டு எட்டப்படும் தீர்வில் சமமான அதிகாரம் அவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்என்பதே எமது நிலைப்பாடாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர்நாயகம்எம்.ரீ.ஹஸன் அலி எம்.பி. தெரிவித்தார்.

எங்கள் தேசத்துக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

யுத்த கால மதிப்பீடு இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு முந்திய காலத்திலிருந்து தொடங்க வேண்டும். இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் நமது நாட்டிலுள்ள இனப்பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு வருகின்றது. இரண்டு பெரும்பான்மை இனங்களுக்கிடையில் மட்டும்தான் பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர்கள் இரு தரப்பினர் மட்டும் பேசினால் தீர்வுகளை எட்டிவிடலாம் என்றும் கருதப்படுகின்றது. யுத்த பூமியாகிய வடகிழக்கில் கணிசமான தொகையினராக வாழ்ந்துவரும் முஸ்லிம் சமூகம் பற்றியும் பேசப்படுவதேயில்லை. நமது அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் நமது சமூகப் பிரச்சினைகள் அனைத்தையும் அரசாங்கம் ஒழுங்காகக் கவனித்து வருகின்றது என்ற ஒரு மாயை பரவலாக ஏற்படுத்தப்பட்டுள்ளதே இதற்கான காரணமாகும்.

நேர்காணலின் முழு விபரம் உள்ளே.

மேல், தென் மாகாண சபை தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு ஆப்பு?

பஷீர் அலி

எதிர்வரும் மார்ச் 29ஆம் திகதி நடைபெறவுள்ள மேல், தென் மாகாண சபைத் தேர்தல்களில் அதிகமான முஸ்லிம்கள் பல்வேறு கட்சிகளில் போட்டியிடவுள்ளமையினால் இம்முறை முஸ்லிம் பிரதிநிதித்துவம் மோசமாக குறைவடையும் என்று எதிர்வு கூறப்படுகிறது. இரு மாகாணங்களிலும் 155 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெறும் இந்த தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 3794 பேர் போட்டியிடுகின்றனர்.

16

நரேந்திர மோடியின் பித்தலாட்டம் அம்பலம்

இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் இந்திய பிரதமர் வேட்பாளராக போட்டியிடும்நரேந்திரமோடி தேர்தல்பிரச்சார பணிகளுக்காக பாவித்த புகைப்படம் ஒன்று தொடர்பான உண்மையான தகவல்கள் வெளியாகியுள்ளதை அடுத்து அவரது பித்தலாட்டம் அம்பலமாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொலைக்காட்சி ஒன்றினூடாக நரேந்திர மோடியின் உரையை உன்னிப்பாக அவதானிப்பது போன்ற ஒரு புகைப்படத்தை அண்மையில் நரேந்திர மோடி தனது தேர்தல் பிரசார பணிகளுக்காக பயன்படுத்தியிருந்தார்.

எனினும் குறித்த புகைப்படத்தின் உண்மைத்தன்மையை பி.பி.சி. செய்தி சேவை வெளியிட்டுள்ளது.

16

காணாமல் போன 5000 முஸ்லிம்கள் குறித்து முறைப்பாடு

கடந்த யுத்த காலத்தில் காணாமல் போன ஐயாயிரம் முஸ்லிம்கள் குறித்த முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாக காணாமல் போனோர்ஜனாதிபதிஆணைக்குழுவின்தலைவர் மெக்ஸ்வேல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் புலிகளினால் 120 பேர் காணமல் போன விடயமாகவும் 1990 களில் புனித ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பய 65 பேர் குருக்கல் மடத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை பற்றிய ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்காணாமல் போனோர்களின் உறவினர்களை தனித் தனியாக சந்தித்துப் பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டதுடன், காணாமல் போனோரின் புகைப்படங்கள், ஆவணங்கள் என்பன ஆணைக்குழுவினால் கோரப்பட்டது.

மாடறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்கள ராவய அமைப்பு கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஆரம்பித்துள்ள பேரணி

சிறைக்கு அனுப்பப்படும் பிச்சைக்காரர்கள் குற்றத் தடுப்பு பெயரில் நகர அபிவிருத்தியா?

பிச்சைக்காரர்கள், போதைப்பொருள் விற்பனை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகக் கூறியே, கொழும்பின் முக்கிய இடங்களில் அவர்களைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளபோதும் கொழும்பு நகரை அழகுபடுத்தும் அரசாங்க நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கட்டமாகவே,

16

பிற மத தடைச் சட்டம் வேண்டும் மாடு அறுப்பதை நிறுத்த வேண்டும்

நீதிமன்ற உத்தரவையும் மீறி சிங்கள ராவய அமைப்பினர் பேரணி

மாடு அறுப்பதை உடன் நிறுத்துமாறு கோரி சிங்கள ராவய இயக்கத்தினர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னாலிருந்து கொழும்பு வரையான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஆரம்பித்தனர்.

கடந்தவருடம்தலதாமாளிகையின்முன்உயிர்த்தியாகம் செய்த போவத்தே இந்திர ரத்ன தேரர் தெரிவித்தபடி மாடு அறுப்பதைநிறுத்துவதற்காகதாம்ஒருசங்கம்அமைத்துள்ளதாகவும் அதில்500பேர்அடங்கியுள்ளதாகவும் பேரணியில் ஈடுபட்ட சிங்கள ராவய அமைப்பினர் தெரிவித்தனர்.

இப்பேரணியின்போது இலங்கையில் பிற மத தடைச்சட்டமூலம் உடன்கொண்டுவரப்பட வேண்டும், இலங்கையிலுள்ளமுஸ்லிம்பயங்கரவாதம்ஒழிக்கப்பட வேண்டும், மாடறுப்பு உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

பிரதமர் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அமைதியின்மையைத் தோற்றுவித்த சிங்கள ராவய அமைப்புக்கு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கு நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவ் ஊர்வலத்தை நடத்தியிருந்தனர்.

நீங்களும் ஒரு Engineer ஆகலாம்...

City & Guilds World's top rated qualifications

Quantity Surveying (QS)
Civil Engineering
Automobile Engineering

For details: Type 'engineering' & sms to 077 3171 722

Chartered Engineer UK
City & Guilds Post Graduate Diploma
City & Guilds Graduate Diploma
City & Guilds Advance Technicain Diploma
City & Guilds Technician Diploma
GCE A/L

Entry requirement: (A/L) two passes in any stream

INSIGHT

தங்குமிட வசதிகள் உண்டு

Insight School of Engineering @ Mawanella Campus

Insight Institute of Management and Technology
18A, Palmyrah Avenue, Colombo - 03

Hotline: 077 3171 722
Email: insight.soe@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தால் எங்களைப் பின்பற்றிக் காட்டுங்கள்

ஐ.தே.க. இற்கு ஜே.வி.பி. சவால்

மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவத்தை மாற்றி வழங்கிய முன்னுதாரணத்தை முடிந்தால் ஐக்கிய தேசியக் கட்சி செய்து காட்டட்டும். அக்கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுக்க மாட்டார். ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சி பயனுள்ள கட்சி அல்ல என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிப்பதனால் எதிர்ப்பு வெளிப்படாது. ஏனெனில், ஐக்கிய தேசிய கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வேறுபாடு இல்லை. எமது கட்சியின் முன்னாள் தலைவர் சோமவங்ச அமரசிங்கவின் யோசனையின் பிரகாரம் புதிய தலைவராக அநுரகுமார திஸாநாயக்கவை அனைவரது விருப்பத்துடன் தெரிவு செய்திருக்கின்றோம். ஆனால், ஐக்கிய தேசிய கட்சியினால் இதனை செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

சஊதி அரேபிய நிதியுதவியுடன் காத்தான்குடியில் புதிய பள்ளிவாசல் திறப்பு

பழுலுல்லாஹ் பர்ஹான்

கிழக்கு பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய கற்கை பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷெய்க் எம். அலியார் றியாதியினால் விஷேட சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது.

ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தினால் சஊதி அரேபிய நிதாஉல் கைர் சர்வதேச இஸ்லாமிய அமைப்பின் 45 இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதுல் ஹிதாயா எனும் புதிய பள்ளிவாசல் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது இப்பள்ளிவாசல் நினைவுக் கல்லை சஊதி அரேபிய பேராசிரியர் அஷ்ஷெய்க் ஹுஸைன் அல்குறைஷ் மற்றும் ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் பணிப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இங்கு பள்ளிவாசல்களின் முக்கியத்துவம் தொடர்பில் தென் காத்தான்குடி மஃஹதுஸ்ன்னா அந்நபவிய்யா மகளிர் அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் செய்னுலாப்தீன் (மதனி) தலைமையில் இடம் பெற்ற இப்பள்ளிவாசல் திறப்பு விழாவில் சஊதி அரேபிய பேராசிரியர் அஷ்ஷெய்க் ஹுஸைன் அல் குறைஷ், ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் பணிப்பாளரான பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், சஊதி அரேபிய நிதாஉல் கைர் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அபு ஸாலிஹ் ஹாலித் அத்தாவுத் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை
(Cataract Surgery)

கட்டணம் → ரூபா 9500.00

விஷேட வில்லை தேவைப்படின்

கட்டணம் → ரூபா 15000.00

குவைத் வைத்தியசாலை புத்தளம்

தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107, 071 8183833

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும்
2950.00 மட்டுமே

பெப்ரவரி 27ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு கும்பகோணத்தில் நடைபெறுகிறது

ஐ. ஏ. காதிர் கான்

சென்னை இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் ஏற்பாட்டில், ஆறாவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு இம்முறை தமிழ் நாடு, தஞ்சாவூர் மாவட்டம் கும்ப கோணத்தில் பெப்ரவரி 14,15,16 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது.

இம்மூன்று நாள் மாநாட்டில் ஆய்வரங்கு, கருத்தரங்கு, இஸ்லாமிய இசைப்பாடல் அரங்கு, சொற்சுவை மன்றம், உமறுப்புலவர் விருது, இலக்கியச் சுடர், சமுதாயச் சுடர் விருதுகள் வழங்கல், சிறப்புரைகள், தொடக்க, நிறைவு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் எனப் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

மாநாட்டில் மாநாடு சிறப்பு மலர், ஆய்வரங்கக் கோவை, ஆலிப்புலவன் மிஃறாசு மாலை, கவிக்கோ அப்துர் ரகுமான் அவர்களின் இலட்சியக் காவியமான பாலை நிலாவின் முன்னோட்டப் பிரதி, மூன்றாவது மாநில மாநாட்டில் நடைபெற்ற படைப்பிலக்கியப் பயிலரங்கு, கருத்துரைத் தொகுப்பு, நூல் மற்றும் பல்துறை சார்ந்த நூல்கள் வெளியிடப்படுகின்றன.

மாநாட்டில் தமிழக முஸ்லிம்களின் இசைப் பாடல் மரபுகள் என்ற பொதுப் பொருளில் ஆய்வரங்கு நடைபெறும். இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் சார்பில் எழுதுகோல் காலாண்டிதழின் முதற் பிரதி மாநாட்டில் வெளியிடப்படும். இவ்விதழ் இஸ்லாமிய சமய, கலை, இலக்கியம், வரலாறு, பண்பாடு சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், நவீன படைப்பிலக்கியங்களின் செழுமையான பதிவுக் களஞ்சியமாக அமையவுள்ளது.

இலங்கையிலிருந்து கலந்து கொள்ளும் குழுவில், மூத்த கல்விமான் எஸ்.எச். எம். ஜெமீல், பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி ரமீஸ் அப்துல்லாஹ், டாக்டர் தாஸிம் அஹமட், மூத்த பத்திரிகையாளர் எம்.ஏ.எம். நிலாம், மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் உட்பட 12 பேர் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

இலங்கையிலிருந்து புரவலர்களான அல்ஹாஜ் பாயிக் மக்கீன், கலாநிதி ஏ.பி. அப்துல் கையூம் ஆகியோர் மாநாட்டு நூல் வெளியீட்டு வைபவத்தில், முதற் பிரதிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இம் மாநாட்டுக் கவியரங்கில், தமிழ்த் தென்றல் அலி அக்பர், கவிதை படிக்கத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இங்கு இலங்கைப் பாடகர் கலைக்கமல் கௌரவமளித்து பாராட்டப்படவிருக்கிறார்.

கிண்ணியா தளவைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை

ஏ.எஸ்.எம்.தாணீஸ்

கிண்ணியா தளவைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்து தருமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

கிண்ணியா தள வைத்தியசாலையை சுமார் ஓரிலட்சம் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். கிண்ணியா மக்கள் மட்டுமன்றி, அதன் அயல் பிரதேசங்களான வெள்ளைமணல், சீனக்குடா, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை போன்ற பகுதி மக்களும் தமது சுகாதாரத் தேவைகளுக்காக இவ்வைத்தியசாலையையே நாடி வருகின்றனர்.

எனினும், அண்மைக் காலமாக இவ்வைத்தியசாலையில் நிலவி வரும் பற்றாக்குறைகள் காரணமாக பொது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். சிறிய சிறிய விடயங்களுக்கும் கூட நோயாளிகள் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர். இதனால் பாமர மக்கள் பொருளாதார ரீதியாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மயக்க மருந்து கொடுக்கும் ஒருவர் இங்கு இல்லாததால் கடமையிலிருக்கின்ற பெண் நோயியல் விஷேட வைத்தியர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்களின் சேவைகளை பொது மக்களால் பெற முடியாதுள்ளது. இதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கே நோயாளிகள் மாற்றப்படுகின்றனர். எனவே, மயக்க மருந்து கொடுப்பவரை இங்கு நியமித்து குறித்த நிபுணர்களின் சேவையை பொதுமக்கள் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வைத்தியசாலைக்காக உருவாக்கப்பட்டுள்ள ஆளணி பட்டியல் போதுமானதல்ல. எனவே, இங்கு சேவைபெறும் மக்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு புதிய ஆளணி பட்டியல் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதோடு முடியுமானவரை அதன்படி ஆளணி நிரப்பப்பட வேண்டும். தாதியர், சுகாதார தொழில்நுட்பவியலாளர்கள், சிற்றூழியர் பற்றாக்குறைகள் இங்கு காணப்படுவதால் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

இவ்வைத்தியசாலையில் நிலவும் இடநெருக்கடியைப் போக்க அருகிலுள்ள ரீ.பி. ஜாயா வித்தியாலயத்தை இடமாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்படி இடமாற்றத்தை துரிதப்படுத்தி அப்பகுதியில் தேவையான பிரிவுகளை நிர்மாணிக்கநட வடிக்கை எடுக்க வேண்டும். எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

எம்.பைஷல் இஸ்மாயில்

ஒலுவில் 4 ஆம் குறிச்சியைச் சேர்ந்த மீராலெப்பை முஹம்மது பாரிஸ் அம்பாறை மாவட்ட நீதி நிருவாகத்திற்கான சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், ஒலுவில் சுப்பர்லக் விளையாட்டுக்கழகத்தின் உபதலைவராகவும் அந்நூர் இளைஞர் கழகத்தின் உப தலைவராகவும் மற்றும் முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளராகவும் செயற்படுகிறார். இவரின் சமூகசேவைப் பணியைப் பாராட்டி 2006 ஆம் ஆண்டு சாமஸ்ரீ சாமசக்தி தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஒலுவில் பிரதேசத்தின் பிரபல சமூக சேவையாளரான எம்.ஏ. மீராலெப்பை (ஜே.பி.) மற்றும் வை.எல். சுபைதா நாச்சி தம்பதிகளின் புதல்வராவார்.

கண்டி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ராஜகவி ராஹிலின் 'மொழி ஒளி' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் கண்டி இந்துக் கலாசார மண்டபத்தில் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் பேராசிரியருமான துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஊடகத்துறை மேம்பாட்டுக்காக இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பங்களிப்புச் செய்துவரும் தினகரன் பத்திரிகையின் இணை ஆசிரியர் மர்லின் மரிக்காருக்கு கண்டி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நூலாசிரியர் ராஜகவி ராஹில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் மேடையில் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் அமர்ந்திருப்பதையும் விழாவில் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமியுங்கள்

அரசாங்கத்தை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை

வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தி வடமாகாண முஸ்லிம்களிடம் பத்தாயிரம் கையெழுத்துக்கள் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்தது பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கான பிரஜைகள் குழுவினால் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

குறித்த ஆணைக்குழுவை நியமிக்க வலியுறுத்தி வடமாகாண முஸ்லிம்கள் சார்பாக ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்திய சிவில் சமூக செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலருமான யாழ். சுகூத் பஸ்லீமுக்கு சிவில் சமூகம் சார்பாக வரவேற்பளிக்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் எம்.எஸ். ரஹீம் மற்றும் பிரஜைகள் குழுவின் இணைத் தலைவர் யாழவன் நசீர், செயலாளர் சுகூத் பஸ்லீம் ஆகியோர் குறித்த மகஜரில் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தனர்.

விவசாயிகளுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்

புதிய விவசாய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க கூறியுள்ளார்.

விவசாய ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள விவசாயிகளின் வயதின் அதிகரிப்பிற்கு அமைய கொடுப்பனவு அதிகரிக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு கமநல காப்புறுதி சபை உத்தேசித்துள்ளது.

யாழில் காத்திருந்த முஸ்லிம்களுக்கு ஏமாற்றம்

பா.சிகான்

யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்த உகண்டாவின் பிரதம பாதுகாப்புச் செயலாளர் ஒடொன்கோ ஜெஜி தலைமையிலான குழுவினர் முஸ்லிம்களை சந்திப்பதாக முன்னாயத்தங்கள் செய்யப்பட்டபோதும் அவர்கள் அங்கு செல்லாமல் வேறு இடங்களுக்குச் சென்றமையினால் முஸ்லிம்கள் ஏமாற்றமடைந்தனர்.

இவ்விஜயத்தை முன்னிட்டு யாழ். முஸ்லிம்களை சந்தித்த இராணுவத்தின் உயர் அதிகாரிகள், யாழ். முஹம்மதிய்யா ஜுமுஆ பள்ளிவாசலில் வைத்து உங்கள் பிரச்சினைகள் குறித்து வரும் பிரதிநிதிகளிடம் தெரிவியுங்கள் என கூறியிருந்தனர். இதனையடுத்து அப்பிரதிநிதிகளை சந்திக்க வென முஸ்லிம்கள் ஆயத்தமாக இருந்தனர். ஆனாலும் யாழ். வந்த மேற்படி பிரதிநிதிகள் யாழ். முஸ்லிம்களை சந்திக்காமல் நல்லூர் கோயில், யாழ். பொது நூலகம், யாழ். கோட்டைப் பகுதிகளுக்குச் சென்று விட்டு தமது விஜயத்தை நிறைவு செய்து கொண்டனர். தாம் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டு விட்டதாக யாழ். முஸ்லிம்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

கல்முனை மாநகர ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

எஸ்.எம்.எம்.றம்ஸான்

கல்முனை மாநகர சபையில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாநகர முதல்வர் நிசாம் காரியப்பர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகளை சந்தித்து அவர் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

அண்மையில் கிழக்கு மாகாண சபைக்கு விஜயம் செய்த முதல்வர் நிசாம் காரியப்பர், மாகாண சபையின் பிரதம செயலாளர் சரத் அபேகுணவர்த்தன, முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. சலீம், பிரதிப் பிரதம செயலாளர்களான எஸ். குமரகுருபரன், கலாமதி ஆகியோரை சந்தித்து கல்முனை மாநகர சபையில் நிலவிவருகின்ற ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் நீண்ட காலமாக பணியாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி அவை தொடர்பில் தாம் எடுத்து வருகின்ற முயற்சிகள் குறித்து தெளிவுபடுத்தியதுடன் மாகாண சபையின் ஒத்துழைப்பையும் வேண்டியுள்ளார்.

இதன்போது மாநகர சபை வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் உடன்பட்டுள்ளனர்.

வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொண்டேன்

இஸ்லாத்தை தழுவிய யுவன் சங்கர் ராஜா

இஸ்லாத்தை மார்க்கமாக ஏற்றுக் கொண்டமை திடீரென்று எடுத்த முடிவல்ல. கடந்த ஒரு வருடமாக இஸ்லாம் சம்பந்தமான புத்தகங்களை அதிகம் படித்து இஸ்லாத்தை உளப்பூர்வமாக புரிந்து கொண்டேன். இதன் பின் பல சிறந்த கனவுகள் எனக்குள் வர ஆரம்பித்தன. இதற்கு முன் எனக்கு அவ்வாறு நிகழ்ந்ததில்லை. எனக்குள் என்ன நிகழ்கிறது என்பதை என்னால் விவரித்து சொல்ல இயலாது. ஏதோ ஒரு இறை சக்தி என்னை ஆட்கொள்கிறது என்பதை மட்டும் விளங்கிக் கொண்டேன். அதன் பிறகு புனித குர்ஆனை படிக்க ஆரம்பித்தேன். எனக்குள் இருந்த சந்தேகங்கள், கனவுகளுக்கான விடைகளை குர்ஆனில் நான் கண்டு கொண்டேன். வாழ்க்கை என்றால் என்ன என்பதையும் விளங்கிக் கொண்டேன். இதுதான் நான் இஸ்லாத்தை ஏற்க முழு காரணமாக இருந்தது. இறைவன் என்னை தேர்ந்தெடுத்துக் கொண்டான் என்றே நினைக்கிறேன் என இஸ்லாத்தை தனது மார்க்கமாக ஏற்றுக் கொண்ட பிரபல இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா தெரிவித்துள்ளார்.

என்னை யாரும் இஸ்லாத்தை ஏற்கச் சொல்லி வற்புறுத்தவில்லை. இது அவரவர் மனம் சம்பந்தப்பட்ட விஷயம். இந்த மன மாற்றத்தை முதலில் எனது அப்பாவிடம்தான் சொன்னேன். முதலில் அவர் அதிர்ச்சியடைந்தார். அதன் பிறகு எனது முடிவை ஒத்துக் கொண்டு என்னையும் ஏற்றுக் கொண்டார். தனது மகன் மகிழ்ச்சியாக இருப்பதையே அவர் விரும்பினார். எனது தங்கை பாவனாவிடமும் எனது அண்ணன் கார்த்திக்கிடமும் இதைப் பற்றி கூறினேன். அவர்கள் இருவரும் கூட என்னை நன்கு புரிந்து கொண்டு எனது முடிவை ஏற்றுக் கொண்டார்கள். நானும் எனது குடும்ப அங்கத்தினர்களும் எப்போதும் போலவே சந்தோஷமாக இருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் ஒரு முஸ்லிம் பெண்ணை மூன்றாவது திருமணம் செய்து கொண்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி வெறும் வதந்தி எனவும் அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். யுவன் சங்கர் ராஜா என்ற தனது பெயரை மாற்றுவது குறித்த செய்தியை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுவனின் இந்த மதமாற்றம் தென்னிந்திய சினிமாவில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்ற அதே வேளை அவரைப் பின்பற்றி இன்னும் சில முன்னணி நடிகர், கலைஞர்களும் இஸ்லாத்தை ஏற்கவுள்ளதாக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

சபீக் ஹுசைன்

புலிகளால் கடத்தப்பட்ட ஹஜ்ஜாஜிகள் தொடர்பில் விசாரணை செய்யவும்

ஐ.நா. சபை செயலாளருக்கு மர்சூக் கடிதம்

1990ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் காத்தான்குடியைச் சேர்ந்த 162 முஸ்லிம் ஹாஜிகள் அம்பலாந்துறையில் வைத்து கடத்தி கொலை செய்யப்பட்டது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பு விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரி, காத்தான்குடியைச் சேர்ந்த சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஐ.எம். மர்சூக் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

காத்தான்குடியிலிருந்து 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அம்பலாந்துறையில் வைத்து முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டமையானது மிகப் பெரிய மனித உரிமை மீறலாகும்.

இது விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு விசாரணை செய்ய வேண்டுமென அக்கடிதத்தில் அவர் கோரியுள்ளார்.



ஏ.நஸ்புள்ளாஹ்வின் நான்காவது தொகுதியான காவி நரகம் சிறுகதை நூல் வெளியீடு அ.கௌரிதாசன் தலைமையில் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் பேனா பப்ளிகேஷனின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சிரேஷ்ட சட்டத்தரணி ஆறுமுகம் ஜெகசோதி கவிஞர் சட்டத்தரணி கிண்ணியா சபறுள்ளாவுக்கு சிறகுகள் கலை இலக்கிய விருது மற்றும் மக்கள் எழுத்தாளன் பட்டத்தை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

தகவல். ஜே. பிரோஸ்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 04 பெப்ரவரி 15 - 28

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு– 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

தேர்தல் சட்டங்களை மீறுவோரை என்ன செய்யலாம்?

இலங்கை மக்கள் வாக்களிப்பின் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் உரிமையை 100 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருகின்றனர். 1911ஆம் ஆண்டில் சட்ட நிரூபண சபைக்கான இலங்கைப் பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் நடைபெற்றது. குறிப்பிட்ட உயர் வர்க்கத்தினருக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தாலும், அது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு நிகழ்வாகும். அன்று முழு இலங்கைக்குமான பிரதிநிதியாக சேர் பொன்னம்பலம் அருணாசலம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தெரிவானார். தொடர்ந்து வந்த அரசாங்க சபை, பாராளுமன்ற ஆட்சிமுறை, உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபை என்று வாக்களிப்பில் பழுத்த அனுபவம் பெற்ற மக்களாக நாம் உள்ளோம்.

ஜனநாயகத்தின் முக்கிய கருப்பொருள் வாக்களிப்பு மூலமாக தம் பிரதிநிதியைத் தெரிவு செய்வதாகும். ஜனநாயக ரீதியான நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஒளிவு மறைவின்றி நேர்மையான, நீதியான முறையில் தேர்தல் நடைபெற வேண்டுமானால் அதற்கான சட்டதிட்டங்கள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். சட்டதிட்டங்களை ஏடுகளில் வைத்துவிட்டு அரசியல்வாதிகள் நினைத்தபடி தேர்தல் நடைபெறுமாயின் அதனை முறையான தேர்தலாக ஏற்றுக் கொள்ள முடியாது.

அண்மைக் காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை நாம் சீர்தூக்கிப் பார்த்தால், விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலான சில தேர்தல்கள் மட்டுமே நீதியாக நடந்துள்ளதை அறியலாம். நூறுவீதம் தேர்தல் சட்டங்கள் பின்பற்றப்படும் ஒரு தேர்தலை நாம் காண முடியாதுள்ளது. நிறைவேற்று நிர்வாக ஜனாதிபதி முறையின் கீழ் அதிகார பீடங்களில் அமர்ந்து கொண்டே பொலிஸாரையும் ஏனைய சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அதிகாரிகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தேர்தல் நடத்துவது இதற்கான பிரதான காரணமாகக் கருதப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது அமைச்சரவை பூரண அதிகாரத்துடன் இருக்கும். பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும்போது நிறைவேற்று ஜனாதிபதி பூரண அதிகாரத்துடன் இருப்பார். இதற்கமைய பொலிஸார் மற்றும் அதிகாரிகள் நடுநிலையாக நடப்பதற்கான சாத்தியக்கூறு மிகக் குறைவு. தேர்தல் அல்லாத காலங்களில் கூட கள்ளத்தனமான சூதாட்ட நிலையங்களைக் கண்டுபிடித்து சட்டத்துக்கு முன் நிறுத்திய பொலிஸ் அதிகாரிகள் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமையை அறிவோம்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் தேர்தல் ஆரம்பித்த மிக சில நாட்களிலேயே பல முறைகேடுகள், சட்டமீறல்கள் நடைபெறுகின்றமை ஊடகங்களில் வெளியாகியுள்ளன. தேர்தல் வேட்புமனு கையளித்து விட்டு பதாதைகள், ஒலிபெருக்கிகளுடன் நெடுஞ்சாலையில் ஊர்வலங்கள் நடைபெறுகின்றமை ஊடகங்களில் புகைப்படத்துடன் வெளிவந்தன. அவற்றை மிகச் சாதாரணமாக கண்டுகளிக்கும் பொலிஸாரையும் அதே படங்களில் காண முடிந்தது. பொலிஸாருடன் நேரடியாக மோதி அவர்களுடன் கைகலப்பில் ஈடுபட்ட இரண்டொரு வேட்பாளர்கள் கைது செய்யபட்டிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், அது வெறும் கண்துடைப்பாகவே காணப்படுகின்றது. உண்மையான ஜனநாயகத்தை, மக்களாட்சியை, நீதியான, பாரபட்சமற்ற தேர்தலை விரும்பும் வாக்காளர்களினால் சட்டங்களை மீறுவோருக்கு நல்ல தண்டனை வழங்க முடியும். பொலிஸார் கண்டு கொள்ளாமல் இருந்தாலும் அரசாங்கமும் சட்ட ஏற்பாடுகளும் மௌனம் சாதித்தாலும் வாக்களிப்புக் கூண்டுக்குள் இரகசியமாக புள்ளடியிடக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை வாக்காளர்கள் புத்திசாலித்தனமாக பயன்படுத்த முடியுமாயின் சட்டத்தை மீறுபவர்களுக்கு உரிய தண்டனையை வழங்கலாம். எந்தக் கெடுபிடியுமின்றி பொலிஸாரின் துணையின்றி நீதிமன்றங்களின் விசாரணையின்றியே தமது புள்ளடி மூலம் தண்டனை வழங்க முடியும். ஆனால், எத்தனை பேர் அது பற்றி யோசிக்கிறார்கள்.

சோஷல் வெட்டு

■ நான் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த நாடு சிறியதாகியுள்ளது.

– ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ –

அதாவது 'குட்டி' சுவராகியுள்ளது என்று மொழிபெயர்க்கலாமா சேர்?

■ ஜனாதிபதி மாடறுப்பை ஒரு வாரத்துக்குள் தடைசெய்யா விட்டால் 499 பேரும் உயிர்த்தியாகம் செய்வோம்.

– சிங்கள ராவய அமைப்பு –

சொல்லி இரண்டு வாரங்களாச்சே!

■ நாட்டைக் கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி மன்றங்களின் அர்ப்பணிப்பு மிக முக்கியம்.

– அமைச்சர் அதாவுல்லா –

உள்ளூராட்சி முறைமையாலதான் நாடே குட்டிச்சுவராகிக் கொண்டிருப்பதாக உங்க சக அமைச்சர்மாரே சொல்றாங்களே சேர்.

■ ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை என்பதுபோல அரசியல்வாதிகளின் கருத்து இருக்கிறது.

– நகர சபை உறுப்பினர் ஆர். விஜயகுமார் –

அதுக்குத்தான் அடிக்கடி எலக்ஷன் வச்சி மேடபோட்டு ஆடிப் பழக்குறாங்களோ?

■ பொருட்களுக்கான விலைகளை அரசாங்கம் அதிகரிக்கவில்லை. உலக சந்தையில் விலை அதிகரிப்பாலே இங்கும் விலை அதிகரிக்கிறது.

– பிரதியமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் –

எந்த உலகத்துல பால்மாவ ஒழிச்சி வச்சி மாதாந்தம் நூறு ரூபா விலை கூட்டினாங்கன்னு சொல்ல முடியுமா?

■ அரசாங்கத்தின் கூட்டுக் கட்சியாக இருந்தாலும் நாம் தன்னிச்சையாகவே செயற்பட்டு வருகிறோம்.

– மு.கா. செயலாளர் நாயகம் ஹஸன் அலி எம்.பி. –

அப்போ அரசாங்கத்தின் 'வீட்டுக்கட்சி' என்று விமர்சிக்கிறாங்களே அது பொய்யா?

■ பிரிவினைவாதம் குறித்து ஒரு வார்த்தை கூட வெளியிட முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

– அமைச்சர் விமல் வீரவன்ச –

அப்போ முதலில் உங்கள் வாய்க்கு பிளாஸ்டர் போடனும்!

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLIEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண சபையில் வருமா? வடக்கு முஸ்லிம்கள் துரத்தியடிப்பு



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில், அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வடமாகாண சபை உறுப்பினர் அனந்திகூட தனது கணவரான புலிகளின் தளபதி எழிலன் காணாமல் போனமை தொடர்பில் இராணுவத்தினரை குற்றம் சாட்டி வாக்கு மூலம் அளித்துள்ளார். அதேவேளை அவர் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்போ மேலும் ஒருபடி சென்று இந்த காணாமல் போனமை மற்றும் படுகொலைகள் தொடர்பாக சர்வதேசத்தின் விசாரணையை கோருகிறது. முள்ளி வாய்க்கால் இறுதி யுத்தத்தின் போதான அழிவுகள் குறித்து வடமாகாண சபை கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது. இவையெல்லாம் எமது மக்களின் மீதான கரிசனையின் பாற்பட்டது என்று யாராவது நம்பினால் அதுபோன்ற முட்டாள்தனம் வேறில்லை.

ஏனெனில், கூட்டமைப்பினர் ஒரு போதும் புலிகளால் நிகழ்த்தப்பட்ட கடத்தல்கள், படுகொலைகள், மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து வாய் திறப்பதேயில்லை. புலிகள் இருந்தபோதும் சரி அழிந்தபோதும் சரி புலிகளின் துப்பாக்கிகள் பதம்பார்த்த உயிர்கள் பற்றியெல்லாம் கூட்டமைப்பு வருத்தப்படுவதில்லை. அப்படி புலிகளின் மீதான விசாரணையையும் சர்வதேசத்திடம் ஒப்படைக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வருமானால் இறுதி யுத்தத்தின்போது தப்பித்து புகலிட நாடுகளில் வாழும் முன்னாள் புலி பொறுப்பாளர்கள் பலர் கைதாக நேர்வது மட்டுமன்றி தண்டனைக்கும் ஆளாக நேரிடும்.

உண்மையிலேயே நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் முஸ்லிம்களின் நலன் சார்ந்துதான் காத்தான்குடி நகரசபையில் பிரேரணையை முன்வைத்தது என்பது உண்மையானால் 2006 இல் சமாதான காலத்தில் நடந்த முஸ்லிம்களின் மூதூர் வெளியேற்றம் பற்றியும் அதன் சூத்திரதாரியான புலித் தளபதி எழிலனின் முடிவுகள் பற்றியும் அவரது மனைவி ஆனந்தியிடம் விசாரணை கோருமாறு அடுத்த நகரசபை கூட்டத்தில் பிரேரணை கொண்டுவர வேண்டும்.

பல்லாயிரம் சிறுவர்களை குழந்தை போராளியாக கட்டாயப்படுத்தி யுத்தத்துக்குள் தள்ளியவர்களும் அப்பாவி மக்களின் உயிர்களை குடித்த குண்டு வெடிப்புகளுக்கு சூத்திரதாரியாக இருந்து செயல்பட்டவர்களும் புகலிட நாடுகளில் இன்று தப்பித்து வாழுகின்றார்கள். தமிழ் மக்களின் பெரும் தலைவர்கள் அனைவரையும் கொன்று வீசிய முன்னாள் புலிகள் கூட இன்று வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழுகின்றார்கள். ஆனால், இவர்களுக்கெல்லாம் விசாரணையில் இருந்தும் தண்டனைகளில் இருந்தும் விதிவிலக்கு அளிக்க கூட்டமைப்பு விரும்புகிறது.

ஆக எமது மக்களின் அழிவுகள் பற்றி நாம் கவலை கொண்டுள்ளோம் என்பதெல்லாம் ஒருதலைபட்சமாகவே இருக்கிறது. கொல்லப்பட்டவர்களும் கடத்தப்பட்டவர்களும் எமது மக்களே ஆயினும் அதற்கு காரணமான இராணுவத்தை மட்டுமே குறிவைப்போம் என்பதுவே கூட்டமைப்பின் தாரக மந்திரமாயிருக்கிறது.

ஆனால், கிழக்கு மாகாணத்தில் மட்டும் இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேறு விதமாக காய்களை நகர்த்த முனைகின்றது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதமொன்றின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்னும் புலிகளின் பாதையிலேயே பயணிக்கிறது என்ற உண்மையை திசைதிருப்ப சம்பந்தர் முனைந்தார். தாமல்ல, அரசே முன்னாள் புலிகளை ஆதரிக்கிறது. கருணா, பிள்ளையான் போன்றோரை அரசு பாதுகாக்கிறது என குற்றம் சாட்டினார். இதனூடாக புலிகளது மனித உரிமை மீறல்களுக்கு கருணாவையும் பிள்ளையானையும் பொறுப்பாக்கி விடுகின்ற ஒரு சதிக்கு அவர் சுழி போட்டார். இன்று அந்த சுழிக்கு காத்தான்குடி நகரசபையில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் முழு வடிவம் கொடுத்திருக்கிறது.

அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடமும் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கூறுகின்றது. முஸ்லிம்கள் மீதான எல்லா விதமான படுகொலைகளும் இன சுத்திகரிப்புகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதில் முழு நியாயங்களும் உண்டு. ஆனால் இந்த குற்றசாட்டுக்கள் ஏன் இப்போதுதான் அதுவும் மட்டக்களப்பை மட்டும் மையமாக கொண்டு எழுப்பப்படுகிறது என்பதே கேள்வியாகும். அபோதுதான் இந்த கோரிக்கைகளின் பின்னால் உள்ளது முஸ்லிம் மக்கள் மீதான கருசனை அல்ல. நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் அரசியல் சூழ்ச்சி என்பது புலப்படும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தகவல் கோரிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் இந்த நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கருணா, பிள்ளையான் போன்றோர் மீது இந்த குற்றச்சாட்டுகளை முன்வைக்கவில்லை. ஏனெனில், அப்போது அவர்கள் கூட்டமைப்புடன் கரம்கோர்க்கவில்லை.

எழுகதிரோன்

முஸ்லிம்களை கொண்டு தங்கள் அரசியல் போட்டியாளர்களாக செயல்படும் கருணா, பிள்ளையான் போன்றோரை சிக்கலில் மாட்டிவிட கூட்டமைப்பினர் செய்யும் முயற்சியே இதுவாகும். இதனை மிக தெளிவாக காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர் சுட்டிக் காட்டியுள்ளார்.

➡17

கல்முனையில் இனங்களுக்குள் பிளவை ஏற்படுத்தும் அரசியல் காய் நகர்த்தல்கள்

கல்முனைப் பிரதேசம் மூவினங்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசம். இங்கு அண்மைக் காலமாக சில முரண்பாடுகள் நிலவி வருகின்றன. கல்முனையில் தமிழ் மக்களுக்கென்று முழு அதிகாரமுடைய தனியான தமிழ் பிரதேச செயலகம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்திலிருந்து தரவைப் பிள்ளையார் கோயில் வீதியை கடற்கரை பள்ளிவாசல் வீதியாக பெயர் மாற்றம் செய்வது வரை இந்த முரண்பாடு தொடர்கின்றது.

கல்முனையில் 46 ஆயிரத்து 682 முஸ்லிம்களும் 26 ஆயிரத்து 630 தமிழர்களும் 355 சிங்களவர்களும் வாழ்கின்றனர். இங்கு முஸ்லிம் மற்றும் தமிழர்களுக்



கென்று இரண்டு பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்றன. கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகம் காணி அதிகாரம் மாத்திரமன்றி, தமிழ் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இயங்கி வரும் உப பிரதேச செயலாமாகும். இருப்பினும், அப்பிரதேச செயலகத்தை முழு அதிகாரமுடைய தனியான பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு தமிழ் தரப்பு முயற்சித்து வருகிறது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைப் பிரதேசத்தில் சிறுபான்மையாகக் காணப்படும் தமிழ் மக்கள் நிலத் தொடர்பற்ற பிரதேசங்களை இணைத்து தனியான பிரதேச செயலகமொன்றை கோருவதை நியாயப்படுத்த முடியாது என்றாலும் அவர்களுடைய தேவைகளை இனப் பாகுபாடின்றி நிறைவேற்ற வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

கல்முனைத் தமிழ் பிரதேச செயலக விடயத்தில் ஏட்டிக்குப் போட்டியான அறிக்கைகள் ஊடகங்களில் வலம் வந்த போதும் முஸ்லிம் மற்றும் தமிழ் தரப்பு நேருக்கு நேர் பேசி பேச்சுவார்த்தையூடாக தீர்வொன்றைப் பெற முனையவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். இதுபோன்ற ஒருவிடயம்தான் தரவைப் பிள்ளையார் கோயில் வீதி பெயர் மாற்றமுமாகும்.

இந்த இரண்டு விடயங்களும் கல்முனை மக்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக மாறியிருக்கின்றன. இது மக்கள், களத்தில் இறங்கி தீர்வைப் பெற்றுக் கொள்ளும் விடயமல்ல. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையினூடாக தீர்வினைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். அதை விடுத்து மக்கள் பிரதிநிதிகள் ஊடகங்களில் இனவாதக் கருத்துக்களை அள்ளிவீசி மக்களை அதன்பால் திசை திருப்புகின்ற அறிக்கை மன்னர்களாக மட்டும் காணப்படுவதால் தீர்வு கிட்டப் போவதில்லை.

தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்ற விடயத்தில் உடன்பாடு கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் ஒருபொது மேடையில் அமர்ந்து இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவர்களுக்கு என்ன தடையிருக்கிறது? இருகட்சிகளும் மக்களிடத்தில் இனவாதத்தை வளர்த்து தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக செயற்படுவதாகவே இவர்களுடைய செயற்பாடுகளை பார்க்கும் போது எண்ணத் தோன்றுகிறது.

கல்முனை தரவைப் பிள்ளையார் கோயில் வீதி மிக நெடுங்காலமாக வழக்கத்தி லிருந்து வருவதுடன் அப்பெயரே வர்த்த மானியிலும் பதியப்பட்டுள்ளது. ஆனால், இவ்வீதியில் 99 வீதமானவர்கள் முஸ்லிம்களே வசித்து வருகின்றனர். இவர்கள் இவ் வீதியின் பெயரை கடற்கரைப் பள்ளிவாசல் வீதியாக மாற்றித் தருமாறு கல் முனை மாநகர சபையைக் கோரியுள்ள னர். இதனையடுத்து கல்முனை மாநகர சபையின் முதல்வர் நிசாம் காரியப்பர் தலைமையிலான குழு வீதியின் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இப்பெயர் மாற்றத்திற்கு எதிராக அண்மையில் கல்முனை விகாராதிபதி சங்கமுத்துவே தேரர் தலைமையில் அமைதிப் பேரணியொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் மாநகர சபைக்கு மஹஜர் ஒன்றையும் கையளிக்கப்பட்டது.

இதில் விகடம் என்னவென்றால், மூன்றாந் தரப்பின் கைவரிசையும் இதிலுள்ளது என்பதுதான். கல்முனை விடயத்தைப் பெரிதுபடுத்தி அதில் ஒரு பிரிவு குளிர் காய நினைக்கிறது. இந்த வீதி பெயர் மாற்றம் மற்றும் தமிழ் மக்களுக்கான தனியான பிரதேச செயலகம் என்பவற்றில் சம்பந்தப்படாத ரண்முத்துக்கல தேரர், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் சிரேஷ்ட அமைச்சரான தயாரத்ன ஆகியோர் இதில் தலையிட்டு வருகின்றனர். இப்பிரச்சினையில் சம்பந்தமில்லாத இவர்களது தலையீடு குறித்து முஸ்லிம்களிடத்தில் பலத்த விமர்சனம் காணப்படுகின்றது.

இவ்வீதிப் பெயர் மாற்றத்திற்கான எதிர்ப்பையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமை தற்காலிகமாக அவ்விடயத்தை இடை நிறுத்துமாறு கோரியுள்ள போதும் அதற்கான நடவடிக்கை காங்கிரஸ் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கல்முனை தமிழ் மக்களுக்ககான தனியான பிரதேச செயலகக் கோரிக்கை தொடர்பான பிரச்சினை சென்று கொண்டிருக்கும் நிலையில் வீதிப் பெயர் மாற்ற விடயத்தை கையிலெடுத்திருப்பது 'எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமையுமென நலன்விரும்பிகள் கருதுகின்றனர்.

ஏ. முஹம்மத் பாயிஸ்

கல்முனையில் மூவினமும் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். இதற்கு இரு தரப்பு அரசியல் தலைவர்கள் கல்முனை மக்களின் தேவைகளை நன்குணர்ந்து அரசியல் விருப்பு வெறுப்புக்களை கைவிட்டு பேச்சுவார்த்தையினூடாக தீர்வினைப் பெறுவதன் மூலம் மக்களிடையே அமைதியைக் கொண்டு வரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்

புதிய விவசாய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான வர்த்தமானி விரைவில் வெளியிடப்பட்டவுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க கூறியுள்ளார்.

விவசாய ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள விவசாயிகளின் வயதின் அதிகரிப்பிற்கு அமைய கொடுப்பனவு அதிகரிக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு கமநல காப்புறுதி சபை உத்தேசித்துள்ளது.

திருமலையில் ஊடகவியலாளர் செயலமர்வு

கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான முரண்பாடும் தீர்வுகளும் எனும் தலைப்பில் மூன்று நாள் செயலமர்வு உப்புவெளி ஜேகாப் ஹோட்டலில் நடைபெற்றது.

'சேர்ச் போ கொமண்ட் கிரவுன்' நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் எம். சதாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் இருபது பேர் கலந்து கொண்டார்கள்.

மவாட்டத்தில் காணப்படும் மூன்று முக்கிய பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டு அவை குழுக் கலந்துரையாடலுக்கு விடப்பட்டது.

இதில் திருகோணமலை அரிசிமலை காணிப் பிரச்சினை, கழகம் களப்பு பிரச்சினை மற்றும் கோமரங்களவலி மக்களின் நீர் மற்றும் சிறுநீரகப் பிரச்சினை பற்றி ஆழமாக ஆராயப்பட்டது.

இதற்கு வளவாளராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் ரகுராம் கலந்து கொண்டு முரண்பாடும் தீர்வுகளும் என்ற தலைப்பில் தெளிவுபடுத்தினார்.

சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

ஏ. கே. ஏ. ரவூப்

சாய்ந்தமருது 15 ஆம் பிரிவைச் சேர்ந்த ஏ.கே.எம். ஜலீல் அண்மையில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.பி. மொஹைதீன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் கமு/ மழ்ஹறுஷ்ஷம்ஸ் மஹா வித்தியாலயத்தில் கல்வி கற்றார்.

இவர் சமூக சேவையில் ஈடுபாடு காட்டிவருவதுடன் செறோ அமைப்பின் இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றி வருகிறார். கல்முனை தொழில் திணைக்களத்தில் கடமையாற்றி வரும் இவர், எம். அப்துல் காதர்- அ. அவ்வா உம்மா ஆகியோரின் புதல்வராவார்.

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு ஹகீம் பீசி வீதியைச் சேர்ந்த இஸ்மா லெப்பை அப்துல் ஹகீம் அகில இலங்கை சமாதான நீதவானாக அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி ரீ. சரவணராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

1979ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட இவர், 1996ஆம் ஆண்டு வரை கடமையாற்றியுள்ளார். 1995ஆம் ஆண்டு விஷேட ஜனாதிபதி ஆணைக்குழுவில் விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றிய இவர், 2006ஆம் ஆண்டு அக்கரைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் வெற்றிபெற்று பிரதேச சபையின் உறுப்பினரானார். கடந்த 2011ஆம் ஆண்டு இதே சபைக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டு உதவித் தவிசாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவர் சாமஸ்ரீ, மக்கள் நேசன், தேசமான்ய, கருங்கொடியான் என பல விருதுகளைப் பெற்றுள்ளார். பல அமைப்புக்களின் தலைவராக தெரிவாகிய இவர், பல சமூக சேவைகளைச் செய்து வருவதுடன் 'ஹகீம் பீசி நற்பணி மன்றம்' என்ற அமைப்பின் தலைவருமாவார்.

தேசபக்தன் ஒருவனின் துயரம்!

கடந்த சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்த சங்கரி அனுப்பி வைத்துள்ள உருக்கமான கடிதம் இங்கு பிரசுரமாகிறது.

59ஆவது சுதந்திர தின நிகழ்வில் நீங்கள் உறுதியளித்தபடி எதுவித தாமதமுமின்றி மிக முக்கியமான இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவீர்கள் என்ற நம்பிக்கையோடு பெப்ரவரி 4ஆம் நாளாகிய இன்றைய தினத்தை தெரிவுசெய்து தங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

இன்றைய தினம் எனக்கு மிக முக்கியமான நாளாகும். 66ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனிடமிருந்து எமது நாடு சுதந்திரம் அடைந்ததென்பதோடு இன, மத வேறுபாடின்றி சகல மக்களும் மிக உற்சாகமாக கொண்டாடிய தினமாகும். 59ஆவது சுதந்திர நினைவு தினத்தைக் கொண்டாடிய இன்றைய நாளில்தான் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம்களின் உள்ளங்களில் மிக நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் நீங்கள் இப்படிக் கூறியிருந்தீர்கள். தமிழ், இஸ்லாமிய மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாத்து அவர்களின் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை வளம்பெறச் செய்ய வேண்டும். மொறகஹகந்த சமுத்திரத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தபோது கூறியது போல பயங்கரவாதத்தை அழிப்பதற்கு மிகச் சிறந்த ஆயுதம் அப்பாவி தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதே என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன். இதற்கு தென்னே வாழுகின்ற சிங்கள மக்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதனை நான் அறிவேன். இரத்த வெறிபிடித்த விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை நாம் நிறைவேற்றத் தயாராக இல்லை. இருப்பினும், குறைந்தபட்சமாக திரு. ஆனந்த சங்கரி அல்லது டக்ளஸ் தேவானந்தா கூறுவதற்கு இசைய வேண்டியதே நியாயமானதும் நேர்மையானதுமாகும்.

இந்தப் பேச்சை நீங்கள் நிகழ்த்திய வேளையில் திரு. டக்ளஸ் தேவானந்தா உங்கள் மந்திரி சபையில் அமைச்சராக இருந்தவர். ஆனால், நானோ பாராளுமன்ற உறுப்பினராகவோ அன்றி எந்த ஓர் உள்ளூராட்சி மன்றத்திலோ உறுப்பினராகவோ இருக்கவில்லை. நான் எனது நாட்டை எவ்வளவு நேசிக்கிறேன் என்பதையும் என்னுடைய தியாகத்தையும் நீங்கள் விளங்கிக் கொண்டிருந்ததை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். சில நபர்கள் சமஷ்டி ஆட்சி முறையும் ஒற்றையாட்சி முறையும் தமக்கு ஒவ்வாது எனக் கூறிய காலத்தில் நான் இந்திய முறையிலான ஆட்சி முறையே பொருத்தமான ஒரேயொரு மாற்றீடு என பிரசாரம் செய்துவந்தேன். அந்த நேரத்தில் நீங்கள் நியாயமாகவும் விசுவாசமாகவும் செயற்படுவதாக இருந்தால் நாங்கள் குறைந்தபட்சம் ஆனந்த சங்கரி அல்லது டக்ளஸ் தேவானந்தா ஆகியோரது வேண்டுகோளுக்காவது இணங்கிப் போகவேண்டும் என்றீர்கள். அதனால் நான் நீங்கள் ஒரு நியாயமான தீர்வுக்கு இணங்குவீர்கள் என திடமாக நம்பியிருந்தேன். இத்தோடு சமஷ்டி ஆட்சி என்ற சொற்பிரயோகத்தை விடுத்து இந்திய அமைப்பிலான முறை என்ற வார்த்தையை உங்கள் இஷ்டம் போல உபயோகியுங்கள் என்று நீங்கள் ஒருநாள் என்னிடம் கூறியது எனக்கு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

15.11.2011 திகதி என்னால் எழுதப்பட்ட கடிதத்தின் பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன். நான் குறிப்பிட்ட பல விடயங்களில் சிங்கள, தமிழ் மக்களின் பூர்வீக தொடர்பு என்ற தலைப்பிட்ட கருத்துமொன்றாகும். கடிதத்தில் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் தனது மகளாகிய அரச குமாரியை அரசிளங்குமரர் விஜயனுக்கு மணமுடித்துவைத்ததோடு, விஜயனின் தோழர்கள் 700 பேருக்கும் தகுதியான மதுரைக் கன்னியரை மணமுடித்துவைத்து பல்வேறு தரப்பட்ட அவர்களது தேவைகளைப் பூர்த்செய்யும் அத்தனை வசதிகளையும் கொடுத்ததுடன், பதினெட்டு வகையான தொழில் புரியும் இனக் குழுக்களைச் சேர்ந்த 1000 தமிழ்க் குடும்பத்தினரையும் அனுப்பி வைத்தார். எமக்குள்ள பிரச்சினை என்னவென்றால், அனைவருக்கு தமது சரித்திரம் தெரியாது. உண்மையில் பதியப்பட்ட இலங்கையின் வரலாற்றுச் சரித்திரமாகிய மகாவம்சத்தில்தான் இக்கூற்று உள்ளது. இலங்கைத் தமிழருக்கும் தமிழ் நாட்டுத் தமிழருக்கும் இடையிலான தொப்புழ்கொடி உறவைப் போன்றே சிங்கள மக்களுக்கும் மதுரைத் தமிழருக்கும் தொடர்புகள் உண்டு. மதுரை இன்றுவரை தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கிறது.

ஜனாதிபதி அவர்களே! மேலும் பல விடயங்கள் நிரந்தர தீர்வு கோரும் ஒரு தேசாபிமானியின் துணிச்சல்மிக்க கோரிக்கை என்ற தலைப்பில் எழுதப்பட்ட கடிதத்தில் அடங்கியுள்ளது. பொது மக்களின் காணிகளை அரச படையினர் சுவீகரிப்பது, இராணுவத்தின் பலத்தையும் முகாம்களின் எண்ணிக்கையையும் குறைப்பது, புலிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்ட குற்றமற்ற அப்பாவிப் பொதுமக்களை விடுவிக்க வேண்டும். மேலும் கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் போன்றவற்றை உடைத்து சேதமாக்குவோர், மற்றும் இனத் துவேஷத்தை தூண்டுவோர் உடன் கைதுசெய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன, மத வேறுபாடின்றி எவருக்கும் விஷேட சலுகை இன்றி, சம உரிமையோடு வாழ சட்டங்களை ஏற்படுத்தி மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்.

15.11.2011 எழுதிய கடிதத்தில் எழுதப்பட்ட மேலும் பல விடயங்களும் அதற்கான பரிகாரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய சகல பிரச்சினைகளையும் தேசியப் பிரச்சினையாகக் கவனத்திலெடுத்து மக்களையும் நாட்டையும் பாதிக்கும் விடயங்கள் சீர்செய்யப்பட வேண்டும்.

ஒடுக்கப்பட்ட இனமான சிறுபான்மைத் தமிழ் மக்கள், சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் மகிழ்வோடு பங்கு கொள்ளும் உரிமையை இழந்துவிட்டதாகக் கருதி பங்கு கொள்ளாது தவிர்த்து வருவது, நாட்டுப்பற்றுமிக்கவனாகவும், 1948 பெப்ரவரி 4ஆந்திகதி முதல் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் தீவிரமாகக் கலந்து கொண்ட எனக்கு தாங்க முடியாத வேதனையைத் தருகிறது.

இந்நாட்டில் நான் 80 வருடங்களாக வாழ்ந்திருக்கிறேன். கடைசியாக நான் எந்த வருட சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டேன் என்பது எனக்கு ஞாபகமில்லை.

அன்புடன்,
வீ. ஆனந்த சங்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் பார்வை



எம்.செ.எம். உஸன்

ஜெனீவா: அமெரிக்காவின் அறிக்கையும் அச்சத்தில் அரசாங்கமும்

ஜெனீவா மனித உரிமை மாநாடு பற்றிய கலந்துரையாடல்கள் இலங்கையிலும் அதற்கு வெளியேயும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கையில் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர் தயாரித்த அறிக்கை இம்முறை மனித உரிமைகள் அமர்வில் முன்வைக்கப்படுவதற்கு மேலதிகமாக, ஐக்கிய அமெரிக்காவின் புதிய பிரேரணையை இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் புதிய பிரேரணையின் உள்ளடக்கம் பற்றி உத்தியோகபூர்வ அறிவிப்புகள் இதுவரை வெளியிடப்படவில்லை. ஆயினும், தொடர்ந்து அமெரிக்கா வெளியிட்டுவரும் கருத்துக்கள் மற்றும் இலங்கைக்கு அவ்வப்போது விஜயம் மேற்கொண்ட அமெரிக்க உயர் அதிகாரிகளின் கூற்றுகளில் இருந்தும் பிரேரணையின் உள்ளடக்கத்தை ஊகிக்க முடியுமாக இருப்பதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். யுத்த குற்றம், இறுதிநிலை யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் போன்றன இலங்கைக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டுக்களாக இருந்த நிலைமாறி அமெரிக்காவின் புதிய பிரேரணை புதிய உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

யுத்தம் நடைபெறும் காலத்திலும் இறுதி நேர யுத்தத்திலும் நடைபெற்றவை என்று கூறப்படும் விடயங்களை விட, யுத்தம் முடிந்தபின்னர் கடந்தஐந்துவருடங்களின் போதான இலங்கையின் நடவடிக்கை குறித்தே அப்பிரேரணை முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சட்டத்தின் ஆட்சிக்குஏற்பட்டுள்ளமிகப்பாரியபின்னடைவு, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பன இதுவரை தோற்றுவிக்கப்படாமை, தீவிரவாத சமயச்செயற்பாட்டாளர்களினால் நாட்டில் கட்டவிழ்த்துவிடப்படுகின்ற சிறுபான்மைக்கெதிரான வன்முறைகள், ஊடகத்துறையினர் மீதான பல்வேறு விதமான கெடுபிடிகள் என்பவை முக்கிய இடத்தைப்பிடித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முயற்சிகளை முறியடிக்கும் செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டு வருவதும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வெளிநாட்டமைச்சர் மட்டுமன்றி, ஜனாதிபதியும்கூட முன்னெப்போதுமில்லாத வகையில் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு விஜயங்கள் மேற்கொண்டு நட்புறவை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இலங்கை அதிக வட்டிக்கு கடன் பெற்றுள்ள நிலையில்கூட சில உறுப்பு நாடுகளுக்கு இலங்கையின் செலவில் அபிவிருத்திச் செயற்திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் முன்வந்துள்ளமையும் கோடிட்டுக் காட்டக்கூடிய விடயமே. இலங்கையின் அன்றாட பொருளாதார நடவடிக்கைகள் பெரும் கடன் சுமையால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், வள்ளல் வேஷம் போட்டு நட்புறவை வெளிப்படுத்தும் அளவுக்கு அரசாங்கத்துக்கு இப்பிரச்சினையின் தாக்கம் விளங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கும் அரசாங்கம் பெருந்தொகையான பணத்தை செலவிட்டது. அதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்ததும் சர்வதேச உறவும் உதவியும் தான். ஆனால், இவற்றினூடாக மனித உரிமைப் பேரவை உறுப்பு நாடுகளின் வாக்களிப்பல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமைக்கான சான்றுகள் இதுவரை தென்படவில்லை. ஆனால், ஒரு விடயத்தில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளதைக் குறிப்படவேண்டும். புலிகளைத் தோற்கடித்து இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிய பெரும் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்கும் சதியில் மேற்குலகம் ஈடுபட்டுள்ளதாகவும் அதனை முறியடிக்க தேசப்பற்றுள்ள இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் தேர்தல்களில் அரசாங்கத்திற்கு சார்பாக வாக்களித்து தலைவரின் கரத்தை பலப்படுத்தி அரசுக்கான விசுவாசத்தைப் பறைசாற்ற வேண்டும் என்றும் முன்வைத்த கோரிக்கை மக்களிடையே பெருமளவு எடுபட்டுள்ளமையே அந்த வெற்றியாகும். புலிகளைத் தோற்கடித்துப் பிரபாகரனை கொலை செய்ததன் மூலம் சிங்கள மக்களிடையே ஏற்படுத்திய தேசிய அலையின் வேகத்தில் பல தேர்தல்களை வென்றெடுத்த அரசாங்கம் ஜெனீவாப் பரேரனையை வைத்து அடுத்த சில தேர்தல்களில் வெற்றிபெறும் நோக்கில் செயற்படுவதனைக் காணலாம். சுருக்கமாகச் சொன்னால், உள்நாட்டுத் தேர்தல் அறுவடைக்கான ஒரு முதலீடாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை அரசாங்கம் மிகவும் சாணக்கியமாகக் கையாள்கிறது.

அமெரிக்காவின் தலைமையிலான மேலைத்தேய நாடுகள் இலங்கைக்கு எதிரான ஒரு பலத்த அணியாக இருக்கும்போது, ஏனைய ஆசிய ஆபிரிக்க நாடுகளின் நிலை எதுவாக இருக்கும் என்று யோசிக்க வேண்டியுள்ளது. மனித உரிமைப் பேரவையின் 47 உறுப்பு நாடுகளின் 34 ஆசிய, ஆபிரிக்க வலயங்களைச் சேர்ந்தவை. அதாவது 72 வீதமான நாடுகள் நட்பு வலயங்களுக்குள் தான் காணப்படுகின்றன. 2009 இல் இந்நாடுகளின் மொத்த வாக்கு்களில் 62 வீதத்தைப் பெற்று இலங்கையினால் வெற்றி பெற முடிந்தது. தொடர்ந்து வந்த காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட தளர்வு நிலை, வெளிநாட்டு உயர் தூதுத்துவ சேவைகளில் தகைமையுள்ளவர்கள் நியமிக்கப்படாமை, தேர்தலில் தோல்வியடைந்த அரசியல்வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் அரசின் உயர் மட்டங்களின் சொந்தபந்தங்களும் நியமிக்கப்பட்டமையே இலங்கை நட்பு நாடுகளின் ஆதரவை இழக்கக் காரணம் என்று அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்.

மேலைத்தேய அணி ஒரு புறம் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை முன்னெடுக்கும்போது நவநீதம் பிள்ளையின் முன்னேற்ற அறிக்கை மறுபுறம் தாக்கம் செலுத்தும்போது மற்றுமோர் அணியும் களமிறங்கியிருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இம்மாதம் (2014 பெப்ரவரி) ஆறாம்திகதி இலங்கைக்கு எதிரானமிகவும் ஆபத்தான ஒரு நிகழ்வு இடம்பெற்றுள்ளது. சர்வதேச குற்றவியல் சான்றுகள் செயற்திட்டம் என்ற அமைப்பு இலங்கை தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. மார்ச் மாதம் நடைபெறுகின்ற மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்காகவே இது தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 250 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையின் உள்ளடக்கம் பற்றி இதுவரை பூரண விளக்கம் அறியப்படவில்லையாயினும் இலங்கைக்கு இன்னொரு தலையிடியாகவே அது அமையும் என்றே தெரிகிறது. அந்த அறிக்கையை வெளியிட்ட குழுவின் தலைவர் யூகோஸ்லாவியா தொடர்பான சர்வதேச குற்றவியல் விசாரணைக் குழுவின் பிரதான புலனாய்வாளர். இந்த அறிக்கை மூன்று அடிப்படைகளில் தயாரிக்கப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டுள்ளது. அதாவது சர்வதேச மானிட நேய சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் மனித வர்க்கத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவையே அம்மூன்றுமாகும்.

இலங்கை இராணுவம் வேண்டுமென்றே தமிழ் மக்களைக் கொலை செய்ததாகவும் தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தின் ஆரம்ப இலக்காக அமைந்தது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இராணுவத்தின் இறுதி இலக்காகவிடுதலைப்புலிகள் காணப்பட்டது உண்மை எனினும் ஆரம்ப இலக்காக பொதுமக்கள் காணப்பட்டனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளும் பல குற்றங்களைப் புரிந்துள்ளார்கள் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பினும் பாரியளவு குற்றங்களைப் புரிந்திருப்பது இலங்கை இராணுவம்தான் என்றும் அறிக்கை கூறுகின்றது. இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொலைக்காட்சிக் கலந்துரையாடல் அல்ஜஸீராவில் இடம்பெற்றுள்ளது. அதனை நெறிப்படுத்தியவர் சர்வதேச நீதிமன்றம் பற்றிப் பல பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் நிகழ்த்தும் பேராசிரியரான சபாஸ் என்பவர். அவர் அந்த நிகழ்ச்சியின்போது இலங்கை சர்வதேச நீதி விசாரணை சமவாயத்தில் கையொப்பமிடாவிட்டாலும் விசாரணைக்குட்படுத்த முடியும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழும்

➡ 16

இலங்கை அதிக வட்டிக்கு கடன் பெற்றுள்ள நிலையில்கூட சில உறுப்பு நாடுகளுக்கு இலங்கையின் செலவில் அபிவிருத்திச் செயற்திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் முன்வந்துள்ளமையும் கோடிட்டுக் காட்டக்கூடிய விடயமே. இலங்கையின் அன்றாட பொருளாதார நடவடிக்கைகள் பெரும் கடன் சுமையால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், வள்ளல் வேஷம் போட்டு நட்புறவை வெளிப்படுத்தும் அளவுக்கு அரசாங்கத்துக்கு இப்பிரச்சினையின் தாக்கம் விளங்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 33)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

மேலும், அது "ஆரம்பமாக தீங்கிழைக்கவும் கூடாது. பழிக்குப் பழிவாங்கும் வகையில் தீங்கிழைக்கவும் கூடாது" என்ற அல்லாஹ்வின் தூதரின் போதனையைப் பின்பற்றியதாகவும் அமையும். உடல்களுக்கு மருத்துவம் செய்வதற்காக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்படவில்லை. அதற்கென தேர்ச்சிபெற்றோர் உள்ளனர். உள்ளங்களுக்கும் மூளைகளுக்கும் மற்றும் ஆன்மாக்களுக்கும் மருத்துவம் செய்வதற்காகவே நபியவர்கள் தூதுவராக அனுப்பப்பட்டார்கள்.

இக்காலத்தில் பலத்த விவாதங்களுக்கு உட்பட்ட "ஈயை அமிழ்த்துதல்" ஹதீஸையும் இக்கண்ணோட்டத்தில் (வழிப்படுத்துதல் என்ற வகையில்) நோக்கியிருந்தால் பெரும் சர்ச்சைகளிலிருந்து நாமும் விடுபட்டிருக்கலாம்; பிறரையும் விடுவித்து இருக்கலாம்.

குறைவான வருமானத்தையும் வரையறுக்கப்பட்ட உணவு வளத்தையும் கொண்ட குறிப்பிட்ட ஒரு சூழலுக்குரிய உலகியல் விவகாரமொன்றிற்கான வழிப்படுத்தலையே இந்த ஹதீஸ் பிரதிபலித்து நிற்கின்றது. ஈமொய்த்த உணவுகள் அனைத்தையும் அவசரப்பட்டு உடனே எறிந்து விடக்கூடாது என அது எமக்கு உணர்த்துகின்றது. குறிப்பாக எளிமை,கடினம் மற்றும் ஜிஹாத் வாழ்க்கைக்காக தனது உறுப்பினர்களை தயார்படுத்துகின்ற சமூகத்திற்கு இப்படியான வழிப்படுத்தல் அவசியமாகும்.

இந்த ஹதீஸில் உள்ளடக்கியுள்ள, அதன் ஒரு சிறகில் நோயுள்ளது. மறு சிறகில் நிவாரணமுள்ளது என்ற விவகாரத்தைப் பொறுத்தவரை அது சூழலின் அறிவிற்கும் அரபிகளது அனுபவத்திற்கும் அப்பாற்பட்டதாகும். பகுத்தறிவினால் ஜீரணிக்க கஷ்டமாகவுள்ளது என்பதற்காக அதனை மறுதலிப்பது அல்லது பொய்ப்படுத்துவது பொருத்தமானதல்ல.

அறிஞர்கள் குறிப்பிடும் நபிகளாரது மருத்துவம் (அத்திப்புந் நபவி) குறித்து நாம் எவ்வளவுதான் பெருமைப்பட்டுக் கொண்டாலும் நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனக்கு மருத்துவ அறிவு இருப்பதாக வாதிடவும் இல்லை; அதற்காக அவர் தூதுவராக அனுப்பப்படவும் இல்லை என்ற விடயத்தை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இது அறிஞர்கள் அனைவராலும் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பேருண்மையாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், நம்பகமான ஹதீஸ்களில் வந்துள்ள குறிப்பிட்ட சிகிச்சை முறைகளை அப்படியே பொதுமையாகவும் முழுமையாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அங்கீகாரம் பெற்ற எந்த அறிஞரும் கூறவும் இல்லை. மாற்றமாக அவை சில வேளை பொதுமையான சொற்களில் வந்திருந்தபோதிலும் கூட அவை குறிப்பிட்ட அவ்விடத்திற்கும் அக்காலத்திற்கும் மற்றும் அந்நிலைமைக்கும் மாத்திரம் பிரத்தியேகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவம் குறித்து வந்துள்ள சில ஹதீஸ்களுக்கான இமாம் இப்னு கையிம் (ரஹ்மஹுல்லாஹ்) அவர்களின் விளக்கம்

திறனாய்வாளர் இமாம் இப்னு கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அத்திப்புந் நபவி பற்றியும் அதிலுள்ள பயன்கள், தத்துவங்கள் குறித்தும் அவரது அறிவிற்கும் அவரது கால அறிவியலுக்கும் ஏற்ப விளக்கியிருந்தும் கூட அவரது "ஸாதுல் மஆத் பீ ஹத்யி கைரில் இபாத்'' என்ற நூலில் எமது கவனத்தை ஈர்க்கும் வகையிலான கருத்துக்களை கூறியுள்ளார். இது குறித்து வந்துள்ள நபிகளாரின் அதிகமான ஏவல்களும் வழிப்படுத்தல்களும் எல்லா நிலைமைகளுக்குமுரிய அனைத்து மக்களுக்கும் பொதுமையாக வந்தவையல்ல. மாற்றமாக, குறிப்பிட்ட இடத்திற்கும் காலத்திற்கும் நிலைமைக்கும் உரிய வகையில் பிரத்தியேகமாக சொல்லப்பட்டனவாகும் என அவர் குறிப்பிடுகின்றார்.

இதற்கு உதாரணமாக, இடுப்புப் பிடிப்பு நிவாரணத்திற்கான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வழிமுறையைக் கூறலாம். நபிகளாரின் பின்வரும் ஹதீஸை எடுத்துக் கொள்ளுங்கள்: அனஸ் பின் மாலிக் அறிவிப்பதாக முஹம்மத் பின் சீரினிடமிருந்து பெற்று இமாம் இப்னு மாஜா அவரது சுனனில் கீழ் வருமாறு பதிவு செய்துள்ளார்.

''இடுப்புப் பிடிப்பு நோய்க்கான நிவாரணம் ஊறவைக்கப்பட்ட நாட்டுப் புறத்து ஆட்டின் தொடைப் பகுதியாகும்.

அறிஞர்கள் குறிப்பிடும் நபிகளாரது மருத்துவம் (அத்திப்புந் நபவி) குறித்து நாம் எவ்வளவுதான் பெருமைப்பட்டுக் கொண்டாலும் நபி(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் தனக்கு மருத்துவ அறிவு இருப்பதாக வாதிடவும் இல்லை; அதற்காக அவர் தூதுவராக அனுப்பப்படவும் இல்லை என்ற விடயத்தை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

தொடர்ந்து அது மூன்றாகப் பிரிக்கப்படும். பின்னர் ஒவ்வொரு நாளும் வெறும் வயிற்றில் ஒரு பகுதி அருந்தப்படும். (சுனனு இப்னி மாஜா 3463ஆவது ஹதீஸ்)

தொடர்ந்து இமாம் இப்னு கையிம் கூறுகின்றார்: இர்க்குன்நசா -இடுப்பு பிடிப்பு- இடுப்பின் நடுப்பகுதியில் ஏற்படும் வலி தொடையின் பின்புறமாக கீழ்வருவதை சில நேரம் கரண்டைக்கால் வரை வருவதைக் குறிக்கும். நாட்கள் செல்லச் செல்ல வலி கீழ் நோக்கி இறங்குவது அதிகரிக்கும். இதனால் காலிலும் தொடைப் பகுதியிலும் மெலிவு ஏற்படும். இந்த ஹதீஸில் மொழியியல்கருத்தும் உள்ளது மருத்துவியல் கருத்தும் உள்ளது; மொழியியல் கருத்தை பொறுத்தவரை இந்நோய்க்கு ''இர்க்குந்நசா'' என வழங்கப்படுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என்பதனை இந்த ஹதீஸ் எடுத்துக்காட்டுகின்றது.

உளத் தூய்மையும் சுவனப் பாக்கியமும்



மனிதன் வெறும் எலும்புகளாலும் தசைகளாலும் பின்னப்பட்ட படைப்பு மட்டுமல்ல; அவன் தன்னுள் ஆன்மாவையும் உள்ளத்தையும் சுமந்துள்ளான். இவை இரண்டுமே அவனை இயக்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் இயக்கம் இல்லாதபோது அவன் வெறும் ஜடமாகவே பார்க்கப்படுகிறான். ஒரு காட்டு விலங்கை அதன் போக்கில் வளர விட்டால் காலப் போக்கில் அது ஒரு கொடிய மிருகமாக மாறும். அதனைப் பயிற்றுவிக்கின்றபோது அக்கொடிய மிருகம்கூட மனிதனிடம் வசப்பட்டுவிடும்.

உள்ளமும் இவ்வாறுதான். அதனை அதன் போக்கிலே விட்டுவிட்டால் தான் விரும்பியவாறு வாழவே முயற்சிக்கும். ஆசைகளுக்கும் உணர்வுகளுக்கும் கட்டுப்பட்டு வாழப் பழகிக் கொள்ளும். அது தானாக தன்னை நெறிப்படுத்தி மாற்றிக் கொள்ள முயற்சிக்காது. எனினும், மனிதன் அதனைப் பயிற்றுவிக்கின்றபோது அது தன்னுள் இருக்கின்ற அழுக்குகளை அகற்றி தூய்மை பெறுகின்றது. அழகிய குணங்களாலும் நற்பண்புகளாலும் அலங்கரித்துக் கொள்கின்றது. அதன் விளைவாக அந்த உள்ளத்தைச் சுமந்த மனிதன் புனிதனாக மாறுகின்றான்.

எனவேதான் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக உடலில் ஒரு சதைப்பிண்டம் இருக்கின்றது. அது சீர்பெற்று விட்டால் முழு உடலும் சீர் பெற்றுவிடும். அது சீர்கெட்டு விட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் உள்ளம் ஆகும்.''
(புகாரி, முஸ்லிம்)

இஸ்லாம் இதனை ஒரு கடமையாகவே ஆக்கியுள்ளது. அதுதான் தஸ்கியா என்பதாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் தன்னுடைய தூதர்கள் செய்ய வேண்டிய பணிகளில் ஒன்றாகவே தஸ்கியா என்ற அம்சத்தையும் குறிப்பிடுகின்றான்.

''அவன்தான் உம்மிகளிடையே ஒரு தூதரை அவர்களிலிருந்து தோற்றுவித்தான். அவர் எத்தகையவர் எனில் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காட்டுகின்றார். மேலும் அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைத்து அவர்களுக்கு வேதத்தையும் தீர்க்கமான அறிவையும் (ஸுன்னாவையும்) கற்றுக் கொடுக்கின்றார். அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டில் இருந்தனர்.'' *(62: 2)*

தஸ்கியா என்பது அல்குர்ஆனில், ஸுன்னாவில் நாம் கற்றுக் கொண்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளத்தில் எதுவெல்லாம் தடையாக இருக்கின்றனவோ அவற்றை நீக்குவதாகும். அதாவது, இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும் சட்டங்களுக்கும் அதன் நடைமுறைக்கும் முரணாக உள்ளத்தில் எதுவெல்லாம் இருக்கின்றனவோ அவற்றை அகற்றி உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதாகும்.

இன்று முஸ்லிம் சமூகத்தில் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற அடிப்படைக் கடமைகூட அருகிப் போனதற்குக் காரணம் தஸ்கியா என்கின்ற கடமையை மறந்து போனமையாகும். இதனை ஒரு முஸ்லிம் புறக்கணிக்கின்றபோது அவனுடைய உள்ளம் பாழடைந்து விடுகிறது. மறுமையில் கூட அவன் வெற்றி பெறமாட்டான். இதனை அல்லாஹுத் தஆலா ஸூரதுஷ் ஷம்ஸில் தெளிவாகக் குறிப்பிடுகின்றான்.

"எவர் (ஆத்மாவாகிய) அதை பரிசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர் திட்டமாக வெற்றி அடைந்து விட்டார். இன்னும், எவர் அதனை (பாவத்தைக் கொண்டு) களங்கப்படுத்துகின்றாரோ அவர் திட்டமாக நஷ்டமடைந்து விட்டார்.'' *(91: 9,10)*

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் சுவனத்தை அடைய விரும்புகின்ற ஒரு முஸ்லிம் இறையச்சத்துடன் வாழ வேண்டும். தீய செயல்களை விட்டும் முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும். ஷைத்தானிய அடிச்சுவடுகளை ஒரு போதும் பின்பற்றக் கூடாது. அவனுடைய ஏவுகணைகளாகிய வக்கிரம், குரோதம், பேராசை, பொறாமை போன்ற இன்னோரன்ன தீய குணங்களுக்கு மனதிலே இடம் கொடுக்காது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் ஏவல்களுக்கும் அடிபணிந்து அவன் விருப்பங்களைத் தன் விருப்பங்களாக மாற்றிக் கொண்டு நற்பண்புகளாலும் நல்லமல்களாலும் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹுத் தஆலா அல்குர்ஆனிலே இதனை வலியுறுத்திக் கூறுகின்றான்.

"மேலும், எவர் தன் இரட்சகனின் (சன்நிதியில் அவன்) முன் நிற்பதைப் பயந்து மனோ இச்சையை விட்டு (தன்) ஆத்மாவைத் தடுத்துக் கொண்டாரோ அப்போது நிச்சயமாக அவர் ஒதுங்குமிடம் சுவனமாகும்.'' *(79: 40,41)*

இவ்வாறு ஒரு மனிதன் தனது உள்ளத்தைப் பட்டைதீட்டுகின்றபோது இறை நினைவாலும் மறை சிந்தனையாலும் சூழ்ந்திருக்கின்ற அவ்வுள்ளம் ஈமானிய ஒளியால் பிரகாசிக்கும். இத்தகைய உள்ளம் தான் அனைத்து நன்மைகளினதும் தலைவாசலும் மறுமையின் வெற்றிக்கான பாதையுமாகும். இப்படிப்பட்ட உள்ளத்தைப் பார்த்து அல்லாஹ்,

"(அல்லாஹ்வின் கட்டளையை உண்மைப்படுத்துவது கொண்டு) அமைதி பெற்ற ஆத்மாவே! நீ உன் இரட்சகனின் பக்கம் (அவனைத்) திருப்தியடைந்த நிலையிலும் (அவனிடம்) பொருந்திக் கொள்ளப்பட்ட நிலையிலும் மீள்வாயாக! நீ எனது அடியார்(களான) நல்லோர்களின் (கூட்டங்)களில் பிரவேசிப்பாயாக! மேலும், என்னுடைய சுவனத்தில் நீ நுழைந்து விடுவாயாக!" *(89: 27-30)* என்று கூறுவான்.

எமது உள்ளத்தை இவ்வாறான அமைதி பெற்ற ஆத்மாவாக (நப்ஸுன் முத்மஇன்னா) மாற்றுவதே தஸ்கியாவின் நோக்கமாகும். எனவே, நாளை மறுமையில் சுவனம் என்கின்ற நிகரில்லாத அந்த வெகுமதியைப் பெற்றுத் தருகின்ற உள்ளங்களாக எமது உள்ளங்களை மாற்றுவோம்.

சஜீர் முஹைமீன், இறக்காமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி தேசம்

-மலைஞானி

மலையகக் கட்சிகளின் நிலாச்சோறு அரசியல்

இன்றைக்கு இலங்கையில் ஜன நாயகத் தேர்தல் என்றால் மக்களுக்கு அதில் சுரத்தில்லாமல் போய்விட்டது. தேர்தல் என்பது போலித்தனம், கபடம், மோசடி என்று பெரும்பாலான மக்கள் கருதுவதால் செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கை நகர்ப்புற சாவடிகளில் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது. மேலும், 1994 முதல் இன்று வரை இருபது ஆண்டுகளாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான கூட்டணியே வெற்றி பெற்று வருவதாலும் ஐக்கிய தேசிய கட்சி கடுமையான உட்கட்சிப் பூசல்களினால் பலவீனமடைந்து காணப்படுவதாலும் நாம் வாக்களித்தாலும் வாக்களிக்கா விட்டாலும் வெற்றி பெறப்போவது என்னவோ ஆளுந்தரப்பு தானே என்ற மனப்பான்மை வாக்காளர் மத்தியில் பரவலாகக் காணப்படுவதாலும், தேர்தல் இன்றைக்கு சுரத்தில்லாமல் போய்விட்டது. மேலும், ஆளும் தரப்பு தோல்லியடையச்செய்ய முடியாத ஒரு கூட்டணி என்று மக்கள் நம்பவும் தொடங்கி விட்டார்கள், குறிப்பாக சிறுபான்மை சமூகத்தினர்.

சிறுபான்மை இனத்தவரின் இந் நம்பிக்கைக்கு காரணம் இருக்கிறது.

ஏனெனில், மிகப் பெரும்பாலான சிறுபான்மையினக் கட்சிகள் அரசுக்கு ஆதரவாகவே உள்ளன. தேர்தல்களில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு ஆதரவு தேடித் தருகின்றன. வெற்றிலை சின்னத்தில்தான் நிற்க வேண்டும் என்றாலும் அப்படியே செய்கின்றன. ஜனாதிபதியின் தாளத்துக்கு அட்சரம் பசகாமல் ஆடுகின்றன.

இதனால் இக்கட்சிகள் அனைத்துமே தமது சுய அடையாளத்தையும் கொள்கைகளையும் (ஏதேனும் இருக்குமானால்) இழந்து, அரசியல் களத்திலே நிராயுதபாணியாக நிற்கின்றன. அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிகளுக்கு வாக்கு சேகரித்துக் கொடுக்கும் இயந்திரங்கள் என்பதைத் தவிர வேறு அடையாளங்கள் இச் சிறுபான்மையின கட்சிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இது முன்னெப்பொழுதும் காணப்படாத ஓர் அரசியல் வங்குரோத்து நிலைமை. இந்த அரசு அதிகாரத்தில் இருக்கும் வரை இந்நிலை இன்னும் தீவிரமாகத் தொடரத்தான் போகிறது.

சிறுபான்மையினக் கட்சிகள் இதற்கு முன்னரும் ஆளும் கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்துள்ளன. ஆனால், கௌரவமான உடன்பாடுகளுடன், அடிமைத்தனமாக அவை நடத்தப்படவில்லை. பிளவும் பிரிவுகளும் ஏற்பட்டன. எனினும், அவை கொள்கை ரீதியானவையாகவே இருந்தன.

இன்று காணப்படுவதோ முற்றிலும் மாறுபாடான ஒரு புதிய சூழல். தமிழ், முஸ்லிம் கட்சிகள் இந்தளவுக்கு கீழிறங்கிப் போனதற்கு அவற்றினிடையே கடுமையான மோதல்கள் (கொள்கை ரீதியானவை அல்ல) நிகழ்வதே காரணம். இதை அரசாங்கம் நன்கு பயன்படுத்திக் கொள்கிறது.

ஆனால், சிறுபான்மையின மக்கள் தெளிவாகவே உள்ளனர். அவர்கள் மத்தியில் கட்சி ரீதியான மோதல்கள் இல்லை. தாம் படிப்படியாக உரிமைகளை மற்றும் குரல் எழுப்பும் சுதந்திரத்தை இழந்து வருவது அவர்களுக்குப் புரிகிறது. தொழிற்சங்க உரிமைகள் மெதுவாக நசுக்கப்படுவதையும் கொடுப்பதை வாங்கி வாய்பொத்தி இருக்கும்படி வற்புறுத்தப்படுவதையும் அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. பொருளாதார நெருக்கடி கடுமையாகி வருகிறது. உரிமைகளையும் தாம் இவ்வளவு காலமாக அனுபவித்துவந்தவற்றையும் இழந்து வருகிறோம் என்பது நன்றாகவே அவர்களுக்கு புரிகிறது. ஆனால், அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஒருங்கிணைந்து ஒரு கொள்கையை நோக்கி அழைத்துச் செல்லத்தான் எவரும் இல்லை.

பிரிந்திருக்கும் வரை எதிரிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். மலையகக் கட்சிகள் இந்த அளவுக்கு துவேஷ உணர்வுகளுடன் இதற்கு முன்னெப்பொழுதுமே தமக்குள் மோதிக் கொண்டதில்லை. எனவே, இன்றைய சூழலில் இக் கட்சிகளை ஒரு பொதுத் தளத்துக்குள் கொண்டுவருவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும், இத்தனையும் தெரிந்து கொண்டிருக்கும் மலையக தமிழ் வாக்காளர்கள் ரத்திழந்திருப்பதில் ஆச்சரியமில்லை. வாக்களிப்பதன்மூலம் ஒருவாக்காளன் எதையும் சாதித்துவிடப் போவதில்லை என்பதையும் அறியாமையினாலேயே தமது வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகின்றன என்பதையும் வாக்காளன் உணர்ந்திருக்கின்றான். வாக்களிப்பதனால் எதுவும் ஆகப்போவதில்லை என்பதை தெரிந்து கொண்டிருப்பதால்தான் காசு மற்றும் பொருட்களை பெற்றுக் கொண்டு வாக்களிக்கவும் பலர் தயாராக இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க வேதனைதரும் அம்சம்.

இந்தச் சூழலில் மலையகக் கட்சிகளுக்கும் அவற்றை ஆளும் கட்சிகளுக்கும் உவப்பானதாக இருக்கலாம். பணத்தை செலவு செய்து வாக்குகளை அறுவடைசெய்ய முடியும் என்பது இனிப்பான விஷயம்தானே! ஆனால், வாக்களிப்பில் அக்கரையின்மை, பணத்துக்கு விலைபோகும் நிலை, தேர்தல் விஞ்ஞாபனம், கொள்கை அறிவிப்புகளின்றி தேர்தல்களுக்கு முகம்கொடுக்கும் போக்கு எந்தத் தனித்துவமுமின்றி சிங்கள கட்சிகளின் அடிவருடிகளாக தமிழர் வாக்குகளை அக்கட்சிகளுக்கு கொண்டு சேர்க்கும் வேலையை ஏவல்போல செய்து கொடுக்கும் நிலை என்பன இப்படியே தொடர்ந்தால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கப்போகிறது.

மலையகக் கட்சிகள் அடிவருடி வேலைகளை இத்தனை ஆண்டுகளாக செய்து வருவதால் மலையகத் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகள் என்று பார்த்தால், சொல்லிக் கொள்கிறமாதிரியாக எதுவும் இல்லை. கோரிக்கை விடுத்து அல்லது வற்புறுத்தி ஒரு விஷயத்தை சாதிக்கும் வலுவை இக் கட்சிகள் இழந்து பல வருடங்களாகி விட்டன. ஆனால், ஒரு நன்மை மட்டும் உள்ளது.

பதவிகளை பிடிப்பதாலும், தேசிய கட்சிகளுக்கு கால் மடித்து சேவகம் செய்வதாலும் மக்களுக்கு எந்த இலாபமுமில்லை. என்றாலும், கட்சிகளுக்கு அதன் தலைவர்களுக்கு ஏகப்பட்ட நன்மைகள் இருக்கின்றன. இதனால் கட்சித் தலைமைகள், தொடர்ந்து அரசுகளுக்கு ஆதரவாக நடந்து கொள்கின்றன என்பதில் எவருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம்.

இதை குறுகிய அரசியல் என்பதா அல்லது மிகக் குறுகிய அரசியல் என்பதா?

அரசியலில் சுயநலம் இருப்பதில் தவறில்லை. ஆனால், முற்றுமுழுதாக சுயநலத்துக்காகவே அரசியல் நடத்துவது சமூகத்துக்கு கேடாகவே முடியும் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அரசியல் கட்சிகள் தாம் சார்ந்த மக்களை அல்லது சமூகத்தை வழிநடத்துபவை. அந்த வழிநடத்தல் செயலில் இல்லாமல் வெறுமனே பேச்சில் மட்டும் இருந்தால் நிச்சயம் அது அச்சமூகத்தை விரக்தி நிலைக்கு இட்டுச் செல்லும். இந்த விரக்தி நிலைக்கு பல உலக சான்றுகள் உள்ளன. ஏன், 1971,78 ஜே.வி.பி. கிளர்ச்சிகளை உள்ளூர் உதாரணமாக குறிப்பிடலாம். வடக்கு, கிழக்கில் 1948 முதல் தொடங்கிய இந்த இளைஞர் விரக்தி நிலை 85 களின் பின்னர் ஆயுத போராட்டமாக வெடித்ததையும் குறிப்பிட முடியும். இந்த அரசு யுத்த நிலையைத்தான் முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறதே தவிர, இளைஞர்களின் விரக்தி நிலைக்கு காரணமாக இருந்தவற்றை அகற்றுவதற்கு முயற்சிப்பதாகத் தெரியவில்லை. எனவே, இப்பரச்சினை இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது.

ஆனால், மலையக மக்கள் குட்டக் குட்டக் குனியக் கூடியவர்கள்; துரை மனப்பான்மையைக் காட்டினால் அடங்கிப் போகக்கூடியவர்கள் என்றுதான் இன்றைக்கும் மலையகத் தலைமைகள் கணக்கு போட்டுக் கொண்டிருக்கின்றன. இருக்கின்ற பிரச்சினைகள் போதாதற்கு இன்று மலையகக் கட்சிகள் சாதி ரீதியான வாக்குகளை குறிவைத்து சாதி வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளன. இ.தொ.கா. மேல்மாகாண சபைத் தேர்தலில் களமிறக்கியுள்ளவர்களை எடைபோட்டுப் பார்க்கும்போது அதன் சாதி ரீதியான அணுகுமுறைகளைக் கண்டுகொள்ள முடிகிறது.

தொழிலதிபரான கொழும்பு இராதாகிருஷ்ணன், மறைந்த சந்திரசேகரன் மூலமாகவே அரசியலுக்கு நேரிடையாக பாராளுமன்றத்துக்கு வந்தவர். ம.ம. முன்னணியை ஒடுக்க இ.தொ.கா. என்னவெல்லாம் செய்தது என்பதை நன்கு அறிந்தவர். ஆனால், ஏதேனும் ஒரு அரசியல் பதவியில் அமர வேண்டும் என்பதற்காக மட்டும் (பதவி சுகம் மாதிரி வருமா என்ன!) இன்றைக்கு இ.தொ.காவில் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் இ.தொ.கா. வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். இவர் பாடு இப்படி என்றால், கொழும்பு மாவட்ட வேளாளர் குலத்தவர்களின் வாக்குகளை குறிப்பாக, கணிசமான வேளாளர் வணிக சமூகத்தின் வாக்குகளைக் கொத்தலாம் என்பதற்காகவே தொண்டமான் இவரைக் களமிறக்கி இருக்கிறார். இதைத் தவிர, இராதாகிருஷ்ணன் சாதாரண தமிழர் மத்தியில் சொல்வாக்கு பெற்றவரும் அல்ல; அந்தக் கவர்ச்சி கொண்டவரும் அல்ல. சாதி வாக்குகளையும் வர்த்தக சமூக வாக்குகளையும் அள்ளலாம் என்பதே தொண்டமானின் திட்டம்.

இன்றைக்கு மலையக அரசியல் இப்படித்தான் சுரத்தில்லாமல், எப்படியெல்லாம் வாக்காளர்களுக்கு நிலாச்சோறு ஊட்டி வாக்குகளைக் கவரலாம் என்ற திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. ■



> மலையக மக்கள் குட்டக் குட்டக் குனியக் கூடியவர்கள்; துரை மனப் பான்மையைக் காட்டினால் அடங்கிப் போகக்கூடியவர்கள் என்றுதான் இன்றைக்கும் மலையகத் தலைமைகள் கணக்கு போட்டுக் கொண்டிருக்கின்றன. இருக்கின்ற பிரச்சினைகள் போதாதற்கு இன்று மலையகக் கட்சிகள் சாதி ரீதியான வாக்குகளை குறிவைத்து சாதி வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சமூகத்தைப் போல் முஸ்லிம் சமூகம் விழித்துக் கொள்ளவில்லை

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரீ. ஹஸன் அலி

இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் நமது நாட்டிலுள்ள இனப் பிரச்சினை பற்றி பேசப்பட்டு வருகின்றது. தமிழ் சமூகம் விழித்துக் கொண்டது போல் நமது சமூகம் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. இழப்புக்கள், இன்னல்கள் எல்லாவற்றையும் அவர்களது சார்பில் பலவகையான பொது இயக்கங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சில நலன்விரும்பிகள், புத்திஜீவிகள் போன்றோர் பதிவு செய்து வந்துள்ளனர். இழப்புக்களை அதிகமாக சந்தித்தவர்கள் என்ற யதார்த்தமான ஒரு நிலைமை அவர்களை இம்முயற்சியில் முனைப்புடன் ஈடுபட வைத்தது என்பது உண்மைதான். அவ்வாறான ஒரு கூட்டு முயற்சி எமது சமூகத்தினரால் மேற்கொள்ளப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான எம். ரீ. ஹஸன் அலி தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

கேள்வி: எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது. இத்தேர்தலில் உங்களது கட்சியின் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றன?

பதில்: முஸ்லிம் காங்கிரஸ் வழமை போல தனித்தே இம்முறையும் களமிறங்கியுள்ளது. அரசாங்கத்திலிருந்து கொண்டு தனித்துவம் பேணும் எமது கட்சி இன்று பல் முனைத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான சவால்கள் எமக்குப் புதிதல்ல. பலமான தளத்தை ஏற்கனவே கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் அதனது பிரச்சார மேடைகளில் எம்மை நோக்கி வீசப்படும் கேள்விகளுக்கெல்லாம் சஞ்சலமின்றி விடைகொடுத்து அதன் ஆளுமையைத் தக்க வைத்துக் கொள்ளும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

கேள்வி: இம்மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் வேட்பாளர்கள் பலர் பல கட்சிகளிலிருந்து களமிறங்கியிருப்பதால் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறையும் சாத்தியம் உள்ளது என்ற கருத்து சமூகத்தில் நிலவுகிறது. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: முஸ்லிம்களின் வாக்குகளை சிதறடிப்பதற்கென்றே சிலரை பெரும்பான்மைக் கட்சியினர் வளர்த்தும் பராமரித்தும் வருகின்றார்கள். தங்களது ஏவல் பணிவிடைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு சகலவிதமான வளங்களும் வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. எல்லாத் தேர்தல்களிலும் இவ்வாறான சூட்சுமங்கள் அரங்கேற்றப்பட்டு வருவது இந்நாட்டில் உள்ள தேர்தல் கால மரபு. எனினும், மக்கள் இவ்வாறான சதி வலைகளில் முழுமையாக சிக்கிவிடாமல் தப்பித்தே வருகின்றார்கள். பொதுவாக சிறுபான்மை சமூகங்களின் வாக்குகள் பெரிய அளவில் சிதறுவது குறைவு. பெரும்பான்மை இன வாக்குகளே அதிகளவில் இடமாறுவது ஒரு வழமையான நிகழ்வாகும். கடந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகளில் வடக்கு, கிழக்கில் இது நன்றாக வெளிப்பட்டது. வடகிழக்கிற்கு வெளியில் முஸ்லிம்கள் அதிகமாக செறிந்துவாழும் மேல்மாகாணத்தில் சிறுபான்மை சமூகம் மிகவும் நிதானமாக இம்முறை சிந்தித்து வாக்களிக்கும் என்பது திண்ணம்.

கேள்வி: மேல்மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் ரிஷாட் பதியுத்தீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்து களமிறங்கியிருப்பது உங்களது கட்சிக்கு போட்டியாக அமையுமென்று நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: இல்லவேஇல்லை. எமக்கு யாரும் சவாலாக வருவார்கள் என்று நாம் எண்ணவில்லை. பல [illegible] மரச் சின்னத்தை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் நன்றாக வேரூன்ற வைத்த கட்சி இது. மறைந்த தலைவர் அஷ்ரப். பினால் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் மனதில் இன்னும் பசுமை மாறாது பதிந்துள்ள மரச் சின்னத்துக்கு எவரும் சவாலாக முடியாது. அவ்வப்போது ஏற்ற இறக்கங்களை சந்தித்து வந்தாலும் நிலை குலையாத, விலை போகாத திடமான போராளிகளின் பாசறை எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாகும். தேர்தல் காலங்களில் வீசும் நச்சுக்காற்றுகளில் அள்ளுண்டு செல்லும் சில பதர்கள் ஈற்றில் காணாமல் போய் விடுவது முண்டு. ஆனால், இவர்கள் ஒரு வீதத்துக்கும் குறைவானவர்களே!

கேள்வி: யுத்த காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியைக் கோரியுள்ளது. இக்கோரிக்கை தொடர்பாக தெளிவு படுத்த முடியுமா?

பதில்: யுத்த கால மதிப்பீடு என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு முந்திய காலத்திலிருந்து தொடங்க வேண்டும். இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் நமது நாட்டிலுள்ள இனப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு வருகின்றது. இரண்டு பெரும்பான்மை இனங்களுக்கிடையில் மட்டும்தான் பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர்கள் இரு தரப்பினர் மட்டும் பேசினால் தீர்வுகளை எட்டி விடலாம் என்றும் கருதப்படுகின்றது. யுத்த பூமியாகிய வடகிழக்கில் கணிசமான தொகையினராக வாழ்ந்துவரும் முஸ்லிம் சமூகம் பற்றியும் நமது இழப்புக்கள், இறப்புக்கள், வாழ்வாதாரம் வறிதாக்கப்பட்ட வர்லாறுகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் தொடர் இன்னல்கள் போன்ற விடயங்கள் பேசப்படுவதேயில்லை. நமது அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் நமது சமூகப் பிரச்சினைகள் அனைத்தையும் அரசாங்கம் ஒழுங்காகக் கவனித்து வருகின்றது என்ற ஒரு மாயை பரவலாக ஏற்படுத்தப்பட்டுள்ளதே இதற்கான காரணமாகும்.

தமிழ் சமூகம் விழித்துக் கொண்டது போல் நமது சமூகம் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. இழப்புக்கள், இன்னல்கள் எல்லாவற்றையும் அவர்களது சார்பில் பலவகையான பொது இயக்கங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சில நலன் விரும்பிகள், புத்திஜீவிகள் போன்றோர் பதிவு செய்துவந்துள்ளனர். இழப்புக்களை அதிகமாக சந்தித்தவர்கள் என்ற யதார்த்தமான ஒரு நிலைமை அவர்களை இம்முயற்சியில் முனைப்புடன் ஈடுபட வைத்தது என்பது உண்மைதான். அவ்வாறான ஒரு கூட்டு முயற்சி எமது சமூகத்தினரால் மேற்கொள்ளப்படவில்லை.

முஸ்லிம்களின் இழப்புகள் ஒழுங்காக நெறிப்படுத்தப்பட்ட வகையில் பதியப்படாததாலும் முறையாக பகிரங்கப்படுத்தப்படாததாலுமே நாம் இன்றைய கால கட்டத்தின் நினைவலைகளிலிருந்து மறக்கப்பட்டிருப்பதற்கான காரணமாகும். நமது சமூகத்தைச் சேர்ந்த சில சமூக சிந்தனையுள்ள தனியார்களும் நிறுவனங்களும் தம்மால் இயன்றவரையில் கணிப்புகளை செய்திருந்தாலும் அவை ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு நம்பகத்தன்மையுள்ள ஆவணமாக அரசமட்டத்திலும் சர்வதேசமட்டத்திலும் உறுதிப்படுத்தப் [illegible] அந்தப் பணியை நாம் இன்று வரையில் ஆரம்பிக்கவுமில்லை. எனவே தான் அவ்வாறான பணியை உடனே ஆரம்பிப்பதற்கான ஏதாவது ஒரு பொருத்தமான பொறிமுறையை இப்போதாவது அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும். இக்கோரிக்கை யாரையும் சவாலுக்குட்படுத்துவதற்கோ அல்லது இனரீதியான ஒரு புதிய கீறலைத் தோற்றுவிப்பதற்காகவோ எம்மால் முன்வைக்கப்படவில்லை. இந்நாட்டில் இனப் பிரச்சினைக்கான ஒரு இறுதித் தீர்வு, நிரந்தரத் தீர்வு எட்டப்படும்போது, முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களைப் போன்று தனியான ஒரு சமூகமாக அடையாளம் காணப்பட்டு எட்டப்படும் தீர்வில் சமமான அதிகாரம் அவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

யுத்த காலத்தில் மட்டுமல்ல, யுத்தம் முடிந்ததற்கு பின்பு உள்ள இறுதி 5 வருட காலத்திலும்கூட முஸ்லிம்கள் இழப்புக்களை சந்தித்துள்ளார்கள். கடந்த 5 வருட காலத்துள் அம்பாறை, திருமலை மாவட்ட முஸ்லிம்கள் தங்களது காணிகளை இழந்துள்ள [illegible] னர். யுத்த காலத்தில் செய்கை பண்ணப்படாமல் தரிசாக கிடந்து காடு வளர்ந்த அவர்களது காணிகள் வன இலாகாவினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஒட்டுத் தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை போன்றவற்றின் பாவனைக்காக சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகள் எவ்வித நஷ்ட ஈடுகளுமின்றி பறிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றத்தை நாடி தமக்கு சாதகமாகப் பெற்றுக் கொண்ட தீர்ப்புக்கள்கூட முஸ்லிம்கள் விடயத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. யுத்த காலத்தில் விவசாயிகள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்குத் தெரியாமல் வர்த்மானி அறிவித்தல்களை வெளியாக்கி ஒரு தலைப்பட்சமாக காணி அபகரிப்புக்கள் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளன.

> யுத்த காலத்தில் மட்டுமல்ல, யுத்[illegible] இறுதி 5 வருட காலத்திலும் [illegible] சந்தித்துள்ளார்கள். கடந்த 5 [illegible] திருமலை மாவட்ட முஸ்லிம் [illegible] இழந்துள்ளனர். யுத்த காலத்தி[illegible] தரிசாக கிடந்து காடு வளர்ந்த [illegible] இலாகாவினரால் ஆ[illegible]

புதிய பிரதேச சபை சட்டம் 1986 இல் நிறைவேற்றப்பட்ட போது முஸ்லிம், தமிழ் பிரதேசங்களில் காணிகள் பெரும்பான்மை பிரதேச சபை எல்லைகளுக்குத் தாரை வார்க்கப்பட்டன. அதனால் எல்லைப் புறங்களில் இருந்த முஸ்லிம்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்று இனரீதியான கழுகுப் பார்வைக்குள் சிக்கியுள்ளன. முஸ்லிம் விவசாயிகள் தீர்வைத் தேடி எங்கெல்லாம் சென்றாலும் அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகளாக மதிக்கப்படுவதில்லை. யுத்த காலத்தில் செய்வதறியாது நீதி தேடி ஆயுதக் குழுக்களிடம் சென்று முறையிட்டபோது பெறும்தி வாய்ந்த பல ஆவணங்களை அவர்கள் பறிகொடுத்துமுள்ளார்கள். இவ்வாறானவர்கள் இன்று கள்ளத்தனமாக காணிபிடித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு முள்ளனர். புதிய இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு முஸ்லிம் கிராமங்கள் விழுங் கப்பட்டு வருகின்றன. உக்கிரமான யுத்த சூழலில் கூட அமைதியாக இருந்த முஸ்லிம் கிராமங்களில் இன்று பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு முஸ்லிம் களின் வேதனைகளையும் சோதனைகளை யும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

யுத்தம் முடிந்த பின்னர் தமது காணிகளை வழமைபோல் அனுபவிக்கலாம் என்ற நப் பாசையில் நம்பிக்கையுடன் இருந்த முஸ்லிம் விவசாயிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு அரச நிறுவனங்களும் மதவாதி களும் அவர்களது காணிகளை ஆக்கிர மித்து வரும் இக்காலகட்டத்தில் நாம் அவ தானமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

யுத்தத்தின் எச்சங்களில் இருந்து இந் நாட்டில் பெரும் தேசிய கடும்போக்குவாத சிந்தனைகள் காளான்கள் போல் தற்போது முளைக்கத் தொடங்கியுள்ளன. எனவே

ஸ்லிம் வில்லை

தான் இப்போதாவது நாம் விழித்துக் கொள்ள வேண்டியுள்ளது. 1986களின் பின் னர் அவ்வப்போது இருந்த அரசியல் தலை வர்கள் விட்ட தவறுகளை நாமும் விடக் கூடாது. ஏற்கனவே நாம் பல தவறுகளை விட்டுள்ளோம். அவற்றையெல்லாம் ஆவ ணப்படுத்தி நமது அடுத்த தலைமுறைக்கு ஒரு சோகமயமான வரலாற்றை படிப்பினைக் காக விட்டுச் செல்ல வேண்டும்.

கேள்வி: இனப் பிரச்சினைக்கான தீர்வு களைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக் கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழு வில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் நியமிக் கப்படாமைக்கு காரணம் என்னவென்று கூற முடியுமா?

பதில்: இந்நாட்டில் புரையோடிப் போயி ருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி இடம்பெற்ற எல்லாவிதமான பேச்சு வார்த்தைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

தம் முடிந்ததற்குப் பின்பு உள்ள கூட முஸ்லிம்கள் இழப்புக்களை வருட காலத்துள் அம்பாறை, கள் தங்களது காணிகளை தில் செய்கை பண்ணப்படாமல் அவர்களது காணிகள் வன க்கிரமிக்கப்பட்டுள்ளன.

மட்டும்தான் தொடர்ந்து பங்குபற்றி வந்துள் ளது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ் வொரு நகர்வு மட்டத்திலும் வெளிவந்த ஆவ ணங்களில் எல்லாம் நாம் சம்பந்தப்பட்டுள் ளோம். மறைந்த தலைவர் அஷ்ரஃப் தொடக்கம் தற்போதைய தலைவர் ரவுப் ஹக்கீம் வரை இந்த முயற்சி தொடர்ந்தே வந்துள்ளது.

- நேர்காணல் : ஏ. முஹம்மத் பாயிஸ்

இடையிடையே சந்திரிகாவின் ஆட்சி, ஐ.தே.கட்சியின் ஆட்சி, தற்போதைய ஜனாதி பதியின் ஆட்சியின் போதெல்லாம் உத்தி யோகபூர்வமாக பரிமாறிக் கொண்ட ஆவ ணப் பரிமாற்றங்கள் எல்லாவற்றிலும் எமது

நிலைப்பாட்டினை ➡ 16

கிழக்கில் வளங்களை முறையாக முகாமை செய்யாததால் உற்பத்தியை அதிகரிப்பது கடினமாகவுள்ளது

கிழக்கு மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ். எம். ஹுஸைன்

குளங்கள் திருத்தப்படாமலும் இருக்கின்ற வளங்களை முறையாக முகாமை செய்யாததாலும் உற்பத்தியை அதிகரிப்பது கடினமாக உள்ளது. இவை முறை யாக மேற்கொள்ளப்படுமானால் எமது உற்பத்தியை தற்போது இருப்பதை விட இரு மடங்காக அதிகரிக்க முடியும் என கிழக்கு மாகாண விவசாய திணைக்களப் பணிப்பாளர் எஸ். எம். ஹுஸைன் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவர் கிண்ணியாவைப் பிறப்படமாகக் கொண்டவர். 1992ஆம் ஆண்டு இலங்கை விவசாய சேவைப் போட்டிப்பரீட்சையினூடாக விவசாய உத்தியோகத்தராக இணைந்து கொண்ட இவர், விவசாயத் திணைக்களத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். இவர் தற்போது கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். நெதர்லாந்து வஜன்கன் விவசாய பல்கலைக்கழகத்தில் M.S.C பட்டம் பெற்றுள்ளதுடன் தாய் லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் விவசாயத் துறையில் விஷேட பயிற்சி களையும் பெற்றுள்ளார். இவருடனான நேர்காணலை எங்கள் தேச வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் விவசா யத் துறையின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது?

பதில்: இலங்கையில் தேசிய நெல் உற்பத் தியில் கிழக்கு மாகாணம் 28%-30% வரை யான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இலங்கை தற்போது நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதால் அரசாங்கத் தின் தற்போதைய கொள்கை உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் தன்னிறைவை அடைய உள்ளது. இதனூடாக உப உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைக்க அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது. மலரித்த சிந்தனையின் பிரகாரம் இலங்கை 2015 ஆம் ஆண்டு உப உணவுப் பயிர்ச் செய்கையில் தன்னிறைவு அடைதல் வேண் டும். இந்த இலக்கை அடைய கிழக்கு மா காண விவசாய திணைக்களம் விவசாய உற் பத்திகளை அதிகரிக்க முயற்சித்து வருகின் றது.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 173565 ஹெக்டயர் வயல் நிலங்கள் பயிர் செய்கைக் காகப் பயன்படுத்தப்படுகின்றன இவற்றில் கோடை காலங்களில் மாத்திரம் நீர்ப்பாசன வசதியின்றி 2/3 பங்கு வயல் நிலங்கள் தரிசுநிலங்களாக விடப்படுகின்றன. எனவே, தரிசாக விடப்படும் நிலங்களில் உப உண வுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள நாம் ஊக்குவிக்கின்றோம்.

கேள்வி: யுத்தத்திற்கு முன்னர் வயல் நிலங்கள் பயிர் செய்யப்படாமல் கைவிட ப் பட்டு இருந்தன. தற்போது அவ்வாறு கை விடப்பட்ட விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றதா?

பதில்: அரசாங்கத்தின் கிழக்கின் உதயம் திட்டத்தின்கீழ் 2008 இலிருந்து 2011 வரைகை விடப்பட்ட நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டது. இத னால்தான் எங்களால் தேசிய உற்பத்தியில் 30% ஐ எட்ட முடிந்தது.

யுத்த காலத்தில் பயிரிடப்படாதிருந்த சுமார் 90 ஆயிரம் ஹெக்டயர் விவசாயக் காணிகள் தற்பொழுது மக்களுக்கு கையளிக் கப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதன் மூலம் விவசாய உற்பத்திகள் அதிகரித்துள்ளன.

விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக அர சாங்கம் "ஒரு கிராமம்; ஒரு பயிர்", "நாம் பயிரிடுவோம்; நாட்டை பாதுகாப்போம்" போன்ற பல திட்டங்களை அறிமுகம் செய் துள்ளது. அது மாத்திரமின்றி மறு பயிர்ச் செய்கைக்கு பல்வேறு உதவிகளை அரசாங் கம் செய்து வருகின்றது. இதனால் வெங் காயம், சோளம், நிலக்கடலை, பாசிப்பயறு, கௌபி போன்ற மறு வயல் பயிர்கள் அதிக மாக பயிரிடப்படுகின்றன. இவை எல்லாம் யுத்தத்திற்கு பின்னரான வளர்ச்சியாகும்.

கேள்வி: பாரம்பரிய முறைமைகளை கை விட்டு விவசாயத் துறையில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் நவீனவிவசாய முறைமைகள் பயன்படுத்தப் படுகின்றனவா?

பதில்: நாம் பாரம்பரிய முறைமைகளை இலகுவாக கைவிட முடியாது. ஏனெனில், நவீன முறைமைகளைக் கையாண்டு இர சாயன பசளைகள், கிருமி நாசினிகளை அதிகம் பயன்படுத்தும்போது உற்பத்திகள் அதிகரித்தாலும் சூழல் மாசடைதல், தொற் றாத நோய்கள் போன்ற இன்னோரன்ன பாதிப்புக்கள் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளன. எனினும், நாம் தேவைக்கேற்ப நவீன முறை களைக் கையாண்டு உற்பத்தி ஊக்குவிப்பு களை வழங்கி வருகின்றோம். 2009ஆம் ஆண்டு முதற்தடவை நெல் மற்றும் மறுவயல் பயிர்களை அறுவடை செய்வதற்காக 'சுனாமி' எனும் அறுவடை இயந்திரத்தை அறிமுகப் படுத்தினோம். இன்று ஒரே தடவையில் முழுமையாக அறுவடை செய்யும் இயந்திரங் கள் (Combined Harvvester) இங்கு பயன் படுத்தப்படுகின்றது. இதன் மூலம் விவசாயி கள் வேலையாட்களின் கூலியை சேமிப்ப தோடு ஓர் ஏக்கருக்கான அறுவடை நேரமும் ஒரு நாளிலிருந்து ஒரு மணித்தியாலமாக குறைந்துள்ளது.

பரசூட் முறையையும் இங்கு அறிமுகப் படுத்தினோம். இதனால் நாற்று மேடையில் பயிரிடப்பட்ட நாற்றுக்களை வீசுவதன் மூலம் விரயமாகும் விதைகளின் அளவைக் குறைக்க முடிவதுடன் உற்பத்திச் செலவை யும் குறைக்க முடிகிறது.

விவசாயிகள் வீச்சு விதைப்பன் மூலம் நெல் விதைக்கும்போது களைகட்டுவது அவர்களுக்கு கடினமாக இருந்தது. அத்துடன் களைநாசினிக்கான செலவும் அதிகரித்திருந் தது. இதனை நிவர்த்தி செய்வதற்கு நெற் பயிர் மற்றும் மறு வயல் செய்கைக்காக 2013இல் வரிசை விதைப்புக்கான இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் ஓர் ஏக்கருக்கான பயிர்செய்கைச் செலவு 50% ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் சேதனப் பயிர்ச் செய்கையையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் விவசாயிகள் வீட்டுத் தோட்ட மட்டத்தில் கிருமி நாசினிகள் பாவிப்பதை முற்றாக தவிர்த்துள்ளோம். இதன் மூலம் நஞ்சற்ற உற்பத்திகளை பெற முடியும். எதிர்காலத் தில் இப்பயிர்ச் செய்கை முறை வர்த்தக ரீதியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் விவசாயத் துறைக்கான வளங்கள் எவ்வாறுள்ளன. அவ்வளங்கள் உற்பத்தித் துறையில் முழு மையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா?

பதில்: கிழக்கு மகாகாணம் ஏனைய மா காணங்களுடன் ஒப்பிடும்போது நில வளங்க ளையும் நீர் வளங்களையும் கொண்டுள்ளது. இங்கு 39 பெரிய நீர்ப்பாசன குளங்களும் 949 இடைத்தர, சிறிய நீர்ப்பாசன குளங்களும் இருக்கின்றன.

நில வளங்கள் மாரிகால போகங்களில் ஓரளவு முழுமையாக பயன்படுத்தப்பட் டாலும் கோடை கால போகங்களில் நீர் தட்டுப்பாட்டினால் இந்நிலங்களைப் பயன் படுத்துவது கடினமாகவுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் அடிப்படையில் விவ சாயக் கிணறுகளை மானிய முறையில் நாம் வழங்கி வருகின்றோம். 2009ஆம் ஆண்டி லிருந்து இன்று வரை 1500க்கும் அதிகமான விவசாய கிணறுகளை வழங்கியுள்ளோம். கிணறு ஒன்றைக் கட்டுவதற்காக 50,000 ரூபா பெறுமதியான உதவி விவசாயிகளுக்கு வழங் கப்படுகின்றது.

இங்கு அதிகமான விவசாயிகள் இருக் கின்றனர். இருந்தும் இவர்களுக்கு முக்கிய தடைகளாக இருப்பது உற்பத்திகளை சந் தைப்படுத்துவதுதான்.

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் விவசாயி கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் என்ன?

நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ், சஜாத் முஹம்மத்

பதில்: மறு வயல் பயிர்களுக்கான விதை கள் மற்றும் விவசாய உள்ளீடுகளைப் பெறுவ தில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக் கு கின்றார்கள். அத்தோடு தூய விதை நெல் கிடைக்காமை, அவை காலம் பந்தி கிடைக் கின்றமை போன்றவையும் கிழக்கு மாகாண விவசாயிகள் முக்கியமாக எதிர்கொள்கின்ற பிரச்சினைகளாகும். எம்மால் விவசாயிகளது விதைத் தேவையில் 5%-10% நிறைவு செய்ய முடியுமாகவுள்ளது. ஏனெனில், விதைகள் அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப் படுவதால் உரிய காலத்திற்கு கிடைப்ப தில்லை. அரச பண்ணைகள் மத்திய அரசின் கீழ் இருக்கின்றன. இதனால் மத்திய அர சின் ஒதுக்கீட்டுக்கு ஏற்ப உற்பத்தி செய்கின் றார்கள். விவசாயிகள் பயிர்களுக்கான விதை களைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சி னைகளை நிவர்த்தி செய்ய எதிர்வரும் காலங் களில் விதை உற்பத்திப் பண்ணையொன்றை மட்டக்களப்பு கரடியன் ஆறு பகுதியில் ஆரம் பிக்க முயற்சி செய்து வருகின்றோம். அதற் கான நிதி மூலத்தையும் தேடி வருகின்றோம்.

கேள்வி: அண்மையில் கிழக்கில் முதலீடு செய்யுங்கள் என்ற முதலீட்டாளர்களுக்கான மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இம் மாநாட்டின் பின்னர் விவசாயத் துறையில் முதலீடுகள் அதிகரித்துள்ளனவா?

➡ 16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உலகில் வேகமாக அதிகரித்து வருகிறது

World Health Organization

புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உலகில் வேகமாக அதிகரித்து வருவதாக World Health Organization திடுக்கிடும் அறிக்கை ஒன்றை லண்டன் நகரில் வெளியிட்டுள்ளது. 600 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில், 2030 ஆம் ஆண்டளவில் நூற்று நாற்பது லட்சம் மக்கள் புற்று நோயால் பாதிக்கப்படுவரென்றும், பதின்மூன்று லட்சம் பேர் இறக்க நேரிடுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகைப்பழக்கத்தாலும் மாசுபடுத்தப்பட்ட சுற்றாடலாலும் ஏற்படக்கூடிய நுரையீரல் புற்று நோயானது அந்நோய்களின் வரிசையில் முதலிடத்தைப் பெறுகிறது.

தவறான உணவுப் பழக்கம், பரம்பரைகள் மூலம் கடத்தப்படுதல், அதிகூடிய உடற் பருமன், புகைத்தல் போன்றவற்றால் பெண்களின் மத்தியில் மார்பகப் புற்றுநோய் இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றது. கொழுப்புக் கூடிய உணவு வகை, Fast Food, புகைக்கும் பழக்கமுள்ளவர்கள் வெளியிடும் புகைக் காற்றை சுவாசிக்கும் Passive Smoking எனும் காரணிகளால் ஒருகோடி ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் குழந்தைகள் பல தரபட்ட புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட, மதுப் பழக்கத்தால் கல்லீரல், இன்சுலீன் சுரக்கும் கணையச் சுரப்பி போன்றவற்றிலும், காலை உணவு தவிர்க்கப்பட்டு மதிய உணவு மிகவும் நேரம் தாமதித்து அருந்தப்படுவதாலும் நார்ச் சத்து குறைந்த உணவு வகைகளை அதிகமாக உண்பதாலும் குடற் பகுதிகளிளும் புற்று நோய் தோன்றுகிறது.

நவீன மருத்துவ வசதிகள் மட்டும் இந்நோயின் வளர்ச்சியையும் மக்களின் இறப்பு வீதத்தையும் கட்டுப்படுத்த முடியாதென எடுத்துரைக்கும் அந்த அறிக்கையானது, புகையிலை வரியைக் கடுமையாக உயர்த்தி புகைத்தலை தடுக்கும் வழிமுறைகளை ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் முன்னெடுக்க வேண்டுமென்றும், மது அருந்தும் பழக்கத்தையும் சீனி அதிகமாகவுள்ள இதர பானங்களை அருந்தும் வழக்கத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சமூக ஆர்வலர்களும் அரசாங்கங்களும் அக்கறை எடுத்துக்கொள்வது அவசியமென்றும் கூறுகிறது.

புற்றுநோய் ஏற்படாத உணவுப் பழக்கம் பற்றியும், அந்நோயைத் தடுக்கும் உடற்பயிற்சி முறைகள் பற்றியுமான விழிப்புணர்வை அரசாங்கங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் அவசியமெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசரின் ஆணைக்குப்பின் 320 கிலோ எடையை குறைத்த நபர்

சஊதி அரேபியாவில் 610 கிலோ எடை கொண்டிருந்த நபர் ஒருவர் மன்னரின் ஆணையின் பிறகு 320 கிலோ எடையை குறைத்துள்ளார். சஊதியின் ஜீசான் மாகாணத்தில் உள்ள ஜசான் நகரைச் சேர்ந்தவர் காலித் மொஹ்சன் அல் ஷயேரி. இவரது உடல் எடை 610 கிலோவாக இருந்தது.

அதிக உடல் எடையால் அவதிப்பட்ட இந்த நபர் வீட்டிலிருந்து வெளியேறக்கூட முடியாமல் தவித்தார். இவரது நிலையை அறிந்த சஊதி மன்னர் அப்துல்லாஹ், இவருக்கு முறையான சிகிச்சை அளித்து உடற்பருமனை குறைக்க உத்தரவிட்டார். இதன்பின் அவர் தனது உடல் எடையை குறைத்துள்ளார்.

வங்காளதேசம்: ஜமாஅத்தே இஸ்லாமி தலைவர் சிறையில் மரணம்



வங்காளதேசத்தின் ஜமாஅத்தே இஸ்லாமியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஏ.கே.எம். யூசுஃப் சிறையில் வைத்து மரணமடைந்தார். 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போரின்போது அந்நாட்டிற்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணையை சந்தித்து வந்தார் யூசுஃப் (வயது 87) காஷிம்பூர் சிறையில் கடந்த பெப்ரவரி 09 ஆம் திகதி காலை மயங்கி கீழே விழுந்த அவர் பங்கபந்து ஷேக் முஜீப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை என்று சிறைத் தலைவர் ஃபர்ஹான் அலி தெரிவித்தார். மாரடைப்பு மூலம் மரணம் நேர்ந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

15 போர்க் குற்றங்கள் சுமத்தி கடந்த ஆண்டு மே மாதம் ஷேக் ஹஸீனா அரசு யூசுஃபை சிறையில் அடைத்தது. அவரது வயதை கவனத்தில் கொண்டு பிணை வழங்கவேண்டுமென வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறுந்தகவல்களை உளவு பார்க்கும் பேஸ்புக்

facebook

சமூக வலைத்தளமான பேஸ்புக், தனது மொபைல் பயனாளர்களின் எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ். களை உளவு பார்ப்பதாக பிரபல கணணிப்பொறி பாதுகாப்பு நிறுவனமான ஸ்பேர்ஸ்கை குற்றம் சாட்டியுள்ளது.

சமூக வலைத்தளமான பேஸ்புக்கை பயன்படுத்துபவர்கள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறார்கள். இந்தியாவில் மட்டும் 8.3 கோடி பேர் பேஸ்புக்கைப் பயன்படுத்துவதாகவும், அவர்களில் 7.5 கோடி பேர் மொபைல் மூலமாக பயன்படுத்துவதாகவும் அந்நிறுவனம் பெருமிதம் கொண்டு வருகிறது.

மொபைல் வாடிக்கையாளர்களுக்காக பேஸ்புக் சாட் என்ற சேவையும் வழங்கப்படுகிறது. இந்த சேவையில் பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு எஸ்.எம்.எஸ். வசதி போன்றே பேஸ்புக்கில் சட் செய்யும் வசதி அளிக்கப்படுகிறது. பதிவு செய்த தொலைபேசி இலக்கம் வலைத் தளத்தில் தங்கி விடுகிறது. அதை அழிப்பதற்குரிய வசதிகள் இல்லை.

இந்நிலையில் பேஸ்புக் வலைத்தளம், தனது வாடிக்கையாளர்களின் கையடக்க தொலைபேசிக்கு வரும் குறுந்தகவல்களையும், தனிப்பட்டத் தகவல்களையும் உளவு பார்ப்பதாக பிரபல இணைய கண்காணிப்பு நிறுவனமான காஸ்பெர்ஸ்கை குற்றம் சாட்டியுள்ளது. இக்குற்றச்சாட்டு குறித்து பேஸ்புக் இதுவரை பதிலளிக்கவில்லை.

அமெரிக்காவின் உளவு ரகசியங்களை வெளியிட்ட உளவாளி எட்வர்ட் ஸ்னோடன், உளவு ரகசியங்களை அறிவதற்கு பேஸ்புக் வலைத்தளம் பயன்படுவதாகக் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பாவில் அதிகம் சுதந்திரமுள்ள நாடு துருக்கி

அர்துகான்

ஐரோப்பாவில் அதிகம் சுதந்திரமுள்ள நாடு துருக்கிதான் என அந்நாட்டின் பிரதமர் அர்துகான் தெரிவித்தார். ஜேர்மனியும் பிரிட்டனும் அங்கு போராட்டம் நடத்தியவர்கள் மீது கையாண்ட அணுகுமுறையையே துருக்கியும், காஸி பார்க் போராட்டக்காரர்கள் மீது கடைப்பிடித்தது என்று அர்துகான் அல்ஜஸீரா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது காஸி பார்க் சம்பவத்தை ஐரோப்பிய நாடுகளும் சில ஊடகங்களும் ஊதிப் பெருப்பிக்குகின்றன. ப்ராங்க் பேர்ட் மற்றும் ஹம்பேகில் போலீஸ் நடவடிக்கையை ஏன் பலரும் கேள்வி எழுப்புவதில்லை? இங்கிலாந்தில் நடப்பவற்றை ஊடகங்கள் வெளியிடுவதில்லை. இங்கெல்லாம் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக வீதியில் இறங்கி போராடுபவர்களை அரசு கொடூரமாக எதிர்கொள்கிறது. தவறுகளை நியாயப்படுத்தவில்லை. பொதுச் சொத்துக்களை அழிக்க யாரையும் அனுமதிக்கமாட்டோம். சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதே அரசின் பணி எனவும் அர்துகான் கூறினார்.

துருக்கியில் போராட்டக்காரர்களை அரசு அடக்கி ஒடுக்குவதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சாட்டியிருந்தன. துருக்கி அரசு நிறைவேற்றிய புதிய இணையதள சட்டத்திற்கு எதிராக எதிர்ப்பு கிழம்பியுள்ளது. அந்தரங்கத்தை அத்துமீறும் இணையதளங்களை தடைச்செய்ய அரசுக்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை என்பது புதிய சட்டமாகும்.

பாராளுமன்றம் நிறைவேற்றிய இச் சட்டத்தில் அதிபர் அப்துல்லாஹ் குல் கையெழுத்திடக் கூடாது என்று எதிர் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இணையதள பயனீட்டாளர்களின் அந்தரங்கத்தை பாதுகாப்பதே அரசின் நோக்கம் என்று அர்துகான் கூறுகிறார்.

ஐரோப்பாவில் சட்டவிரோதமாக குடிபுக முயன்ற 1100 பேரை இத்தாலிய கப்பற்படை காப்பாற்றியது

வறுமை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உயிரை துச்சமென மதித்து, கடுமையான குளிர் நிலவும் மிகவும் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக புகுந்து வருகின்றனர். குறிப்பாக ஆசியா மற்றும் ஆபிரிக்காவை சேர்ந்த மக்கள் அப்பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் வடக்கு ஆபிரிக்காவை சேர்ந்த 1123 பேர் தட்டையான படகுகள் மூலம் இத்தாலி கடல்வழியாக ஐரோப்பாவிற்குள் சட்டவிரோதமாக இடம்பெயர முற்பட்டனர். 8 படகுகள் மற்றும் பெரிய படகொன்றின் மூலம் அவர்கள் அனைவரும் இத்தாலியின் லாம்பெடுசா தீவிற்கு அருகே 120 கிலோ மீட்டர் தூரத்தில் பயணித்து வந்தபோது கப்பற்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டனர்.

இதில் நான்கு கர்பிணிகள் உட்பட 47 பெண்களும், 50 குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். இதனிடையே மொராக்கோ நாட்டிலிருந்து ஸ்பெயினின் செடாகடல் பகுதி வழியாக ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற நூற்றுக்கணக் கானோரில் ஒரு பெண் உட்பட 7 பேர் கட லில் மூழ்கி உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யைத் தேடினால், சிரிய மக்கள் சர்வதேசத் தால் நீண்ட காழ்ப்புணர்வுக்கு உட்படுத்தப் படுவதன் பின்புலத்தைப் புரிந்து கொள்ள லாம்.

பயங்கரவாதமும் சிரியப் புரட்சியும்

சிரியப் புரட்சியை ஒரு சிவில் யுத்தமாக மாற்றினால் மட்டுமே ஆட்சியில் நிலைக்க முடியும் என அஸத் ஆரம்பத்திலேயே திட்டமிட்டு விட்டார். இதுதான் ஆயுதம் தூக்குவதற்கு நிர்ப்பந்திக்கும் வகையில் புரட்சியாளர்களை அஸத் கடுமையாக அடக்கியதன் பின்னணியாகும். அஸதின் ஒரே நோக்கம் அரச படைகளை நோக்கி ஒரு துப்பாக்கி ரவையாவது பாய்ந்து வர வேண்டும் என்பது மட்டுமே. கடைசியில் அஸதின் மனிதப் படுகொலைகளைத் தாங் கிக் கொள்ள முடியாமல் சிரியாவின் அரச படை இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட் டன. அவர்களில் சிலர் அஸதுக்கு எதிராக புரட்சியாளர்களுடன் இணைந்து கொண்ட னர். மாத்திரமன்றி, அஸதின் ஆயுதங்களை தங்களிடமிருக்கும் ஆயுதங்களால் எதிர்க்க ஆரம்பத்தனர். உண்மையில் ஆரம்பத்தில் அஸதுக்கு எதிராக ஆயுதம் தூக்கியவர்கள் தூய்மையான எண்ணத்தில்தான் செயற் பட்டனர். சிரிய மக்களின் ஜனநாயக அபி லாசைகள் வெற்றிபெற வேண்டும் என்ற இலக்கைத் தவிர வேறு நோக்கங்கள் அவர்

பினர்களுக்கும் அஸதுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக துருக்கியின் வெளி நாட்டமைச்சர் அஹ்மத் தாவுதுக்லு சமீபத் தில் குறிப்பிட்டதன் பின்புலமும் இது வாகும். சுருக்கமாகச் சொல்வதாயின், சிரி யாவில் பயங்கரவாதம் உருவாகவில்லை மாற்றமாக தனது திட்டத்திற்காக டமஸ் கஸும் தெஹ்ரானும் மொஸ்கோவும் பயங் கரவாதத்தை உருவாக்கியிருக்கிறது. அன்றி லிருந்து சிரியப் புரட்சியை சர்வதேசம் புதிய கண்ணோட்டத்தில் நோக்க ஆரம்பித்தன. அதாவது, சிரிய மக்களின் எதிர்பார்ப்புக் களை நிறைவேற்றுவதற்கு முன்னர் பரவி

கள் என்ற போலி நியாயத்தை அரசு முன்வைக்கிறது. இவ்வாறு அகதிப் பிரச்சி னையைக் கூட பஷர் அல்அஸத் பயங்கர வாதம் என்ற சுலோகத்தில் அரசியற் கேடய மாகப் பயன்படுத்துவதுதான் கேவலமான தாகும்.

முதலாம், இரண்டாம் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள்:

இந்தத் தொடரில் மூன்று வருடங் களாகத் தொடரும் சிரியாவின் கொடுமை களுக்கு தீர்வு காணும் நோக்கில் சர்வ தேச நிறுவனங்களால் ஜெனீவா நகரில்

சிரியா: ஜெனீவா வட்ட மேசையில் நின்று சுழலும் கொலை ராட்டினம்

ஸகி பவ்ஸ் (நளீமி)

நேர்மையான மேற்கத்தேய அரசியல் விற்பன்னர்களும்கூட சிரியாவில் என்ன நடக்கிறது? எனவிரக்தியுடன்கேட்கின்றனர். சிரியாவின்சக்கராதிபத்திய அரசுக்கும்புரட் சிப்படைகளுக்குமிடையிலானசிவில்யுத்தம் மூன்றாவது வருடமாகத் தொடர்கின்றது. இரண்டு தரப்பினரும் வெற்றிக் கம்பத்தை விட்டும் வெகு தூரத்தில் இருப்பதனையே களநிலவரங்கள் உறுதி செய்கின்றன. மறு புறத்தில், 23 மில்லியன் மக்கள் தொகை யைக் கொண்ட சிரியாவில் ஓர் இலட்சத்து 40 ஆயிரம் பேர் இதுவரை சிவில் யுத்ததால் தமது உயிர்களை இழந்துள்ளனர். இன் னும் ஆறு மில்லியன் மக்கள் அகதிக ளாக உத்தியோகபூர்வமாக பதியப்பட்டுள் ளனர். பல இலட்சம் பேர் யுத்தத்திற்குள் சிக்கி உணவின்றி, நீரின்றி குற்றுயிராய் கிடக்கின்றனர். சிரியாவின் மனிதப் படு கொலைகள் 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் மனிதப் பேரவலம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சம் மேளம் கூறியிருக்கிறது. ஆனால், தொட ரும் அழுகுரல்களை செவிமடுப்பதற்கு ச ர்வதேச அரசியல் சமூகம் (International political actors) பின்நிற்கும் பாவத்தை என்னவென்று சொல்வது?

அரபுப் புரட்சியைத் தொடர்ந்து மக்க ளின் உள்ளங்களில் பாய்ச்சப்பட்ட சுதந்திர வேட்கையை சிரிய மக்களும் வெளிப் படுத்தினர். 40 வருட அஸத் குடும்பத்தின ரின் சர்வதிகார ஆட்சியைக் கவிழ்ப்பது டன், தேசியவாத தனிக் கட்சி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 2011ஆம் ஆண்டு ஹோம்ஸ் நகர வீதிகளில் சிரிய மக்கள் குதித்தனர். அப்போது சிரிய மக்களின் போராட்டத்தை சர்வதேசமீடியாக்கள் சிரியப் புரட்சி என்றே அழைத்தன. ஆனால், மூன்று வருடங்கள் கழிந்த நிலையில் சிரிய சிவில் யுத்தம் என அச்சுதந்திரப் போராட்டம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் பேரலை ஏன், எவ்வாறு ஒரு சிவில் யுத்தமாக பரி மாணம் பெற்றது என்ற கேள்விக்கு விடை

கைதா உறுப்பனர்கள் ரகசியமாக விடுவிக் கப்பட்டனர். இவர்கள் விடுவிக்கப்பட்ட தன் பின்னால் மறைமுக நோக்கமொன்று இருக்கிறது. அதாவது, அல்கைதா என்ற சுலோகத்தில் சிரிய மக்களின் சுதந்திர வேட்கையைப் பெற்றுக் கொடுப்பதற்காக போராடும் சுதந்திர சிரிய படையின் சட்ட பூர்வத் தன்மையை இழக்கச் செய்வதும், அதனூடாக மனித சமூகத்திற்கு எதிராக அஸத் மேற்கொள்ளும் படுகொலைகளை நியாயப்படுத்துவதும் சிரியாவில் அ[illegible] சுக்கு எதிராக போராடும் அல்கைதா உறு[illegible]

களிடம் இருக்கவில்லை. பின்னர், புரட்சி யாளர்களுக்கு சார்பான அரச படைகள் (Free Syrian army) சிரிய மக்களின் பிரதி நிதிகள் என சர்வதேசத்தினால் அங்கீகரிக் கப்பட்டன.

எனவே, அடுத்த கட்டமாக சிரிய சிவில் சமூகத்தை பயங்கரவாதமாக்கும் திட்டம் ஈரானுக்கும் ரஷ்யாவுக்கும் விடப்பட்டது. அவர்களின் ஆலோசனையின்படி, 2011 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் எவ் வித முன்னறிவித்தலும் இல்லாமல் அஸ தின் சிறைகளில் இருந்த ஏராளமான அல்

இடைவிடாத குண்டு மழைகளினால் கிழக்கு டமஸ்கஸ், ஹோம்ஸ் மற்றும் அலப்போ நகரங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான உணவு, குடிபானங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களைக் கொண்டு செல்லும் சர்வதேச நலன்புரி அமைப்புக்களின் பணியை அரசு அப்படியே முடக்கியுள்ளது.

ருக்கின்றனர். அவர்களுக்கான உணவு, குடி பானங்கள் மற்றும் மருத்துவப் பொருட் களைக் கொண்டு செல்லும் சர்வதேச நலன் புரி அமைப்புக்களின் பணியை அரசு அப் படியே முடக்கியுள்ளது. அரச படையினர் யாரையும் அப்பிரதேசங்களுக்குள் நுழை வதற்கு அனுமதிவழங்குவதில்லை. பட்டினி யாலும் மிக மோசமான நோய்களினாலும் மக்கள் தினமும் மரணித்துக் கொண்டிருக்கி றார்கள். மேலும், அல்கைதா பயங்கரவாதி [illegible] மக்களாக மேற்குறிப் [illegible] நகரங்களில் இயங்கி வருகின்றார்

வரும் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என அமெரிக்காவும் ரஷ்யாவும் சர்வதேச த்தின் முன்னால் பேச ஆரம்பித்தன. பயங்கர வாத்தை ஒழித்தோமோ இல்லையோ பயங் கரவாதம் என்ற சுலோகம் பல இலட்சம் மனிதர்களைக் கொன்று குவித்த அஸதின் ஆட்சியைக் காப்பற்றிவிட்டது என்பது மட்டும் பட்டவர்த்தனமானது.

அத்துடன், இடைவிடாத குண்டு மழை களினால் கிழக்கு டமஸ்கஸ், ஹோம்ஸ் மற்றும் அலப்போ நகரங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகப்பட்டுக் கொண்டி

2012ஆம் ஆண்டு ஒரு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் சிரிய விவகாரத் தில் கரிசனையுள்ள நாடுகளின் வெளி நாட்டமைச்சர்கள் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர். அப்பிரகடனத்தின் கரு சகல அதிகாரங்களுடனும் கூடிய இடைக் கால அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்பதாகும். ஆனால், உடன்படிக்கை சாத்திடப்பட்ட அடுத்த நிமிடமே உடன் படிக்கை வடிவமைப்பாளர்களான அமெரி க்காவும் ரஷ்யாவும் எதிர்கால இடைக் கால அரசில் அஸதின் வகிபாகம் என்ன என்பதில் கருத்து முரண்பட்டுக் கொண் டன. இறுதியில் அஸதின் சர்வதிகாரத் திற்கு முடிவு காண்பதற்காக ஏற்பாடு செய் ய்ப்பட்ட ஜெனீவா பேச்சுவார்த்தைகள் அஸதின் மனிதப் படுகொலைகளின் எரி கொள்ளியாக மாறிவிட்டன.

இதனால், ஐக்கிய நாடுகள் சபை இரண் டாம் ஜெனீவா மாநாட்டை ஏற்பாடு செய்வ தற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. என்றாலும், மீண்டும் ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு அரச தரப்பினரும் புரட்சியாளர்களும் பல்வேறு நிபந்தனை களை விதித்தனர். குறிப்பாக, முதலாம் ஜெனீவா மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர் மானங்களை செயற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களைப் பற்றி பேசுவ தற்கு சர்வதேச நாடுகள் தயார் என்றால் மட்டுமே தாம் பேச்சுவார்த்தைகளில் பங் கேற்பதாக புரட்சியாளர்கள் குறிப்பிட்ட னர். மறுபுறத்தில், பயங்கரவாத்தை ஒழிப்ப தற்கான செயற்திட்டங்களைப் பற்றி பேசு வதற்கே ஜெனீவாவுக்கு வரவுள்ளதாக அரச தரப்பினர் குறிப்பிட்டனர். ஆனால், அமெ ரிக்காவினதும் ரஷ்யாவினதும் நிர்ப்பந்தத் தால் இரண்டு தரப்பினரும் ஜெனீவாப் பேச்சுவார்தத்தையில் கலந்துகொண்டனர். ஆனால், எத்தகைய தீர்வுகளும் எட்டப் படாத நிலையில் பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளன. மீண்டும் பெப்ரவரி 10 ஆம் திகதியிலிருந்து ஜெனீவாப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

வழமைக்கு மாற்றமாக தற்போதைய களநிலவரங்கள் பேச்சுவார்த்தைக்கு சார் பானதாக மாறிவருகின்றன.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Google Drive

நீங்கள் பயன்படுத்தும் MS Office இன் Word, Power point, excel... என்பவற்றை இணையதளத்தில் இலவசமாக பயன்படுத்த முடிந்தால் எப்படியிருக்கும்? அப்படியொரு வசதியையே தருகிறது Google இன் Google Drive. பொதுவாக Microsoft இன் MS Office ஆனது அலுவலகப் பயன்பாட்டிற்கான அடிப்படையான சில மென்பொருட்களை உள்ளடக்கியதாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அதிகம் என்பதால் சந்தையில் Open office கள் தோற்றம் பெற்று இலவசமாகவே அனைவருக்கும் கிடைக்கின்றன. இவற்றை விட பல படிகள் மேலே சென்று சிறப்பான வசதிகளுடன் தனது சேவைகளை வழங்கி வருகிறது Google Drive.

1. Google docs

Live & Collaborate

இதில் காணப்படும் Share, Edit, View & Comments போன்ற வசதிகள் மூலம் பலர் இணைந்து பணியாற்றலாம்.

Share - எமது Document ஐ பிறர் பார்க்கும் வண்ணம் Share பண்ணலாம். இதனை Gmail, Google+, Facebook, Twitter ஆகிய சமூக வலைத்தளங்களிலும் Share பண்ணலாம்.

Collaborate Editing - ஒரு Document ஐ Edit பண்ண முடியும்.

View & Comments - உங்களது Document ஐப் பிறருடன் பகிர்ந்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டு செம்மைப் படுத்தலாம். மேலும் குறிப்பிட்ட வசனம் அல்லது கருத்து தொடர்பாக பிறரின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள விரும்பினால், அந்த வசனம் அல்லது கருத்தை select பண்ணி insert comment என்பதை click பண்ணினால் குறிப்பிட்ட பகுதி தொடர்பான எமது கருத்தை பிறர் அறிய முடிவதுடன் அவர்களின் கருத்துக்களையும் தெரிவிக்கலாம்.

Auto Save - இதில் நாம் Save பண்ணத் தேவையில்லை. Auto ஆகவே Save ஆகும்.

Docs - Ms office இன் Word போன்றது.

Sheets - Ms office இன் Excel போன்றது.

Slides - Ms office இன் Powerpoint போன்றது.

Languages & Translate

இதில் கூகுளின் சேவையில் உள்ள மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியைத் தெரிவு செய்து பயன்படுத்தும் வசதி உள்ளது. மேலும் குறிப்பிட்ட Document ஐ மொழி பெயர்க்கும் வசதியும் இதிலுள்ளது. இது கூகுளின் மற்றொரு தயாரிப்பான Google Translate உடன் இணைக்கப்பட்டுள்ளது. என்றாலும் Google Translate இல் உள்ள அனைத்து மொழிகளும் இன்னும் இதில் இணைக்கப்படவில்லை.

2. Drive Apps

Quick office

இதனை இணையதளத்தில் பயன்படுத்துவது போன்று இலவசமாக Google இனால் வழங்கப்படும் மற்றுமொரு சேவைதான் Quick office ஆகும். இதன் செயற்பாடுகளும் Google Drive இல் சேமிக்கப்படும். மேலும் Keep, Forms, Drawings, Apps Script போன்ற Apps களும் கிடைக்கப் பெறுகின்றன.

3. Connect more Apps

MS office இன் சேவைகளுக்கு அப்பால் வேறு பல சேவைகளையும் அள்ளி வழங்குகிறது Google இன் Web store இல் உள்ள அப்ளிகேசன்கள். இதற்கு நீங்கள் Create என்பதின் கீழ் உள்ள Connect more Apps என்பதைக் கிளிக் செய்து உங்களுக்குத் தேவையான அப்ளிகேசனை இணைத்துப் பயன்படுத்த முடியும்.

4. Upload & Download

உங்களுக்கு விருப்பமான File களை இதில் பதிவேற்றி சேமிக்கலாம் என்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சம். அதில் உங்களுக்கு விருப்பமான முறையில் File ஆகவோ அல்லது Folder ஆகவோ பதிவேற்றி பாதுகாக்கலாம்.

உங்களது Document ஐப் பல்வேறு வடிவங்களில் Download செய்யலாம். இணையத்தில் பல வகையான File Formats களில் பதிவேற்றலாம். மேலும் Email இலும் அனுப்பலாம்; பதிவேற்றலாம்.

5. Offline

இணைய இணைப்பு இல்லையா? கவலை வேண்டாம். இணைய இணைப்பு இல்லாதபோதும் offline இலும் பயன்படுத்தலாம் என்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சம். இதற்கு நீங்கள் முதலில் உங்கள் Google Drive உடன் உங்கள் கணினியை இணைத்திருக்க வேண்டும். அதற்கு Connect Drive from your Computer என்பதைக் கிளிக் செய்து Download ஆகும் google drive sync ஐ install செய்து கொண்டால் சரி.

6. Drive Storage

Google இனால் அதன் சேவைகளைப் பயன்படுத்த இலவசமாக 25GB வழங்கப்படுகிறது. அதில் Gmail, Google + Photo மற்றும் Google Drive என்பன உள்ளடங்குகின்றன. அதில் Google Drive இற்கு 15GB இலவசமாக வழங்கப்படுகிறது. மேலதிகமான Storage ஐப் பெறுவதென்றால் அதற்குக் கட்டணம் செலுத்தி அச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

7. Gmail + Drive - Sent Large Files

உங்கள் Gmail உடன் Google Drive இணைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக Gmail இல் 25Mb அளவான File களையே அனுப்ப முடியும். தற்போது Google Drive இன் ஊடாக அதை விட அதிகமான File களை அனுப்ப முடியும் என்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும்.

இவ்வாறு பல பயன்களை உள்ளடக்கிய Google Drive ஐ நீங்களும் பயன்படுத்தி பயன்பெற்றுப் பாருங்களேன்.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

ஒரு சொல் பல பொருள்



மனிதர்களில் ஒரே பெயரில் பலரைப் பார்த்திருப்போம். அதேபோல ஒரே பெயரில் இருவேறு பொருட்களோ, உயிரினங்களோ கூட இருக்கின்றன. அதாவது ஒரே உச்சரிப்பில் வரும் வார்த்தைகள், இருவேறு பொருளைத் தரலாம். ஆங்கிலத்தில் இதை ஹோமோபோன் என்று சொல்வார்கள். தமிழிலும் பல பொருள் தரும் சொற்கள் இருக்கின்றன. இதை பல பொருள் ஒரு மொழி என்று சொல்வார்கள். உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

ஆங்கிலத்தில் கிவி (kiwi) என்னும் சொல் ஒரு பழத்தையும் பறவையையும் குறிக்கும். வார்த்தையோடு அந்தப் பழத்தையும் பறவையையும் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

நியூசிலாந்தின் தேசியப் பறவை கிவி. இந்தப் பறவைக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இறக்கைகளே இல்லாத பறவை இது. வீடுகளில் வளர்க்கப்படுகிற கோழியின் அளவுதான் கிவியும் இருக்கும். ஆனால், மற்ற பறவைகளின் முட்டைகளோடு ஒப்பிடும்போது, கிவியின் உடல் அளவுக்கு அதன் முட்டை மிகப் பெரியது. கிவி, ஆந்தையைப் போல பகலில் தூங்கி, இரவில் விழித்திருக்கும். இவை காடுகளில் வாழும் பறவையினம் என்பதால், காடுகள் அழிப்பு இவற்றைப் பெருமளவில் பாதித்து இருக்கிறது.

இத்தாலி, நியூசிலாந்து, சிலி, கிரீஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பயிரிடப்படும் பழவகை கிவி. கோழி முட்டை அளவில் இருக்கும் மேல் புறம் இளம் பச்சையும் பழுப்பும் கலந்த நிறமும் உள்ளே அடர்த்தியான பச்சை நிறமோ பொன்னிறமோ இருக்கும். நடுவே கடுகு போல சின்னச் சின்ன விதைகள் இருக்கும். இனிப்புச் சுவையுடனும் தனித்த மணத்துடனும் இருக்கும்.

புதிதாக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தும்போதோ தெரிந்து கொள்ளும் போதோ அதற்கு வேறு அர்த்தமும் இருக்கிறதா என்று தெரிந்து பயன்படுத்துவோம்.

அறிஞர்களின் பொன்மொழிகள்

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது, தடைகளற்ற வாழ்க்கையல்ல; தடைகளை வெற்றிகொண்டு வாழும் வாழ்க்கை.
-ஹெலன் கெல்லர்-

வீரன் ஒருமுறைதான் சாகிறான். கோழை ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டேயிருக்கிறான்.
-ஷேக்ஸ் பியர்-

கல்வியின் வேரானது கசக்கும். ஆனால் அதன் விளைச்சல் இனிக்கும்.
-அரிஸ்டோட்டில்-

சோம்பல் மாவீரனையும் வீழ்த்திவிடும்.
-பார்ட்டன்-

பழிவாங்குதல் வீரமன்று. ஆனால் பொறுமையாக இருப்பதே வீரம்.
-ஸ்ரீ ராமகிருஷ்ணர்-

ஊக்கத்தைக் கைவிடாதே! அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.
-அறிஞர் அண்ணா-

உயர்ந்த எண்ணங்களை உடையார் ஒரு நாளும் துன்பம் அடையார்.
-காந்தியடிகள்-

எம்.என். நஸ்பா நஜா
நிக/அபுக்காகம/முஸ்லிம் மகா வித்தியாலயம்

குட்டி யானையும் இரு குட்டிக் கரடிகளும்

ஓர் அடர்ந்த காட்டில், ஒரு குட்டி யானையும் இரு குட்டிக் கரடிகளும் வாழ்ந்து வந்தன. அன்று ஓர் இனிமையான காலை நேரம். குட்டி யானை உவகையுடன் குளத்தில் குளிக்கச் சென்றது.

யானையின் முகம் தங்கம் போல் ஜொலித்தது. சில மணித்துளிகள் சென்றன. இரு குட்டிக் கரடிகள் குளத்தில் தண்ணீர் அருந்த வந்தன. அந்த கரடிகளின் கண்களுக்கு அந்தக் குட்டி யானை தென்பட்டது.

கண் இமைக்கும் நேரத்தில், அந்த இரு குட்டிக் கரடிகளுக்கும் ஒரு யோசனை உதித்தது. அந்தக் கரடிகள் சற்றும் தாமதிக்காமல், அந்த யானையிடம் சென்றன. கரடிகளில் ஒன்று, "குட்டி யானையே! நீ பார்க்க மிகவும் பருமனாக இருக்கிறாய்!" என்று யானையை கேலி செய்தது. அதைக் கேட்டதும் யானையின் முகம் பூப்போல் வாடியது. அதன் கண்களிலிருந்தது கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. குட்டி யானை அந்த இடத்தை விட்டு ஓடிச் சென்றது.

அடுத்த நாள், யானை இலை தழைகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று, அதற்கு அலறல் சப்தம் கேட்டது. அதனுடைய மனம் பதைபதைத்தது. பிறகு, அது அலறல் சப்தம் வந்த திசையை நோக்கி, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல சென்றது. சப்தம் வந்த இடத்தை அடைந்தது. எல்லா மிருகங்களும் அங்கும் இங்கும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டது.

அந்த இடத்தில் காட்டுத் தீ எரிந்துக் கொண்டிருந்ததால், இரு குட்டிக் கரடிகளும் தீயில் மாட்டிக் கொண்டன. அந்தக் கரடிகளுக்கு குட்டி யானை உதவிக் கரம் நீட்ட முன்வந்தது. அது எதையும் பொருட்படுத்தாமல் அந்தக் குட்டி கரடிகளை காப்பாற்றியது. மற்ற மிருகங்கள் ஆச்சரியமடைந்து சிலை போல் நின்றன.

நல்லவேளை! அந்த குட்டிக் கரடிகளுக்கு காயம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், குட்டி யானையின் கால்களிலும் கைகளிலும் தீக் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அது பாலில் விழுந்த எறும்பைப் போல துடிதுடித்தது. அந்த இரு கரடிகள் தாங்கள் செய்த தவறை எண்ணி வருந்தின.

பின், அந்த இரு கரடிகளும் யானையை உச்சிக் குளிரப் பாராட்டியதுடன் நன்றியும் தெரிவித்தன. அந்த நாள் முதல் இரு குட்டிக் கரடிகளும் அந்த குட்டி யானையும் நகமும் சதையும்போல ஒற்றுமையாக இருந்தன.



நமக்குத் தீமை செய்தவரைத் தண்டித்தல் அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மை செய்தலே என்பதை இந்த சம்பவம் எமக்குத் தெளிவுபடுத்துகிறது அல்ல வா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி



நீங்கள் எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறீர்கள்? என்று கேட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்வார்கள். ஒருவர் தனக்குப் பிடித்த உணவை ருசித்துச் சாப்பிடுவது சந்தோஷம் தரும் என்பார். இன்னொருவரோ நன்றாக உடுத்துவது மனதிற்கு சந்தோஷம் தருகிறது என்பார். ஏன்? பிறர்படும் துன்பத்தைக் கூட சந்தோஷமாகப் பார்க்கும் ஒரு சிலர்

வாழ்க்கைக்குத் தேவையான ஐந்து

இருக்கும் இவ்வுலகில், வாழ்க்கைக்கு தேவையான சில விஷயங்களை இங்கு ஐந்தைந்தாக பட்டியலிடலாம்.

வாழ்வில் மகிழ்ச்சியுடன் இருக்க சில எளிய ஆலோசனைகள்

1. மற்றவர் செய்யும் தவறுகளை மன்னித்தல்
2. இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் எளிய வாழ்க்கை வாழ்தல்
3. நடப்பவை அனைத்தும் நல்லதுக்கே என்ற எண்ணத்துடன் கவலை கொள்ளாமல் இருத்தல்
4. தினமும் குறைந்தது ஒருவருக்காவது உதவி செய்தல்
5. அளவு கடந்து அதிக ஆசை கொள்ளாமல் இருத்தல்

வாழ்வில் ஆரோக்கியத்துடன் இருக்க சில எளிய ஆலோசனைகள்

1. தினமும் அதிகாலை சூரியன் உதயமாவதற்கு முன் உறக்கத்திலிருந்து மீண்டு விடுதல்
2. தினமும் குறைந்தபட்சம் இருவேளை (காலை மற்றும் இரவு படுக்கைக்கு செல்லும் முன்) பல் துலக்குதல்
3. தினமும் குறைந்தபட்சம் அரைமணி நேரம் நடத்தல்
4. பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களை தவிர்த்து காய்கறி, பழவகைகளை உணவில் அதிகம் சேர்த்தல்
5. இரவு முடிந்தவரை சீக்கிரமாகப் படுக்கைக்கு செல்லுதல்

வாழ்வில் பேணப்பட வேண்டியவற்றில் சில

1. மனதை ஒருமுகப்படுத்தி இறைதியானம் புரிதல்
2. சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இன்முகத்துடன் முகமன்கூறல்
3. யாரையும் துச்சமென கருதாமல் பிறர் கூறும் கருத்துக்களையும் செவிகொடுத்துக் கேட்டல்
4. எந்த செயலையும் செய்ய ஆரம்பிக்கும் முன் அதனால் விளையும் பயன் மற்றும் கெடுதல் குறித்து சிந்தித்தல்
5. முடிந்தவரை தேவையில்லாமல் பேசுவதைத் தவிர்த்து மௌனத்தை கடைப்பிடித்தல்

வாழ்வில் தவிர்க்கப்பட வேண்டியவற்றில் சில

1. ஒருவர் இல்லாதபோது அவரின் தவறுகளை மற்றவரிடம் கூறுதல்
2. அனுமதியின்றி மற்றவரின் வீடுகளினுள் நுழைதல்
3. பிறரின் முன்னேற்றத்தில் பொறாமை கொள்ளல்
4. மற்றவர்களின் பொருட்களை அனுமதியின்றி உபயோகித்தல்
5. தவறு செய்பவர்கள் எனத் தெரிந்த பின்பும் அதை அவர்களுக்கு உணர்த்தாமல் அவர்களோடு நட்பு பாராட்டுதல்

தனிப்போக்கு

உங்களைத் 'தனிப்போக்கு' என்று விமர்சிக்கிறார்களா சந்தோசப்படுங்கள். நூறோடு நூற்றியொன்றாய் இல்லாமல் தனித்துவமாய் உங்களை சிந்திக்கவைத்த அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லுங்கள். விமர்சிப்பது சுலபமான வேலை. அதிகம் விமர்சிப்பவர்களில் அதிகமானோர் குறைவாகச் செய்பவர்கள், குறைவாகச் சிந்திப்பவர்கள், கூடுதலாகப் பேசுபவர்களே. நீங்கள் முன்னெடுத்த பாதையில் உறுதியாக நில்லுங்கள். விமர்சனங்கள் எல்லாம் பாராட்டுக்களின் மாறுவேடங்கள்தான். நீங்கள் செய்கின்ற பணியில் உறுதியும் தெளிவும் கொண்டு இறையச்சம் தவிர்ந்த எந்த அச்சமுமின்றி முன்னே செல்லுங்கள்.

சில கேள்விகளுக்கு காலத்திடம் மாத்திரமே பதிலிருக்கிறது. பொறுத்திருங்கள். நிச்சயமாக இறைவன் உங்களுடன்தான் இருக்கிறான்.

மன அழுத்தத்தைக் குறைக்க சில வழிகள்

தொடர்: 21

மூச்சை ஆழமாக இழுத்து மெதுவாக வெளிவிடுங்கள்.

எழுதப் பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை, தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.

குழப்பம் மற்றும் கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் பகிருங்கள்.

தினமும் உங்கள் மனதை மகிழச் செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றைச் செய்யுங்கள். அதில் பொருளாதாரப் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூட.

பிறருக்காக எதையேனும் செய்யப் பழகுங்கள். செய்யும் அனைத்து செயல்களையும் ஆத்மார்த்தமான அன்போடு செய்யுங்கள்.

என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லையே எனும் முனகல்களைத் தவிர்த்து பிறரைப் புரிந்துகொள்ள முயலுங்கள்.

உங்கள் உடை, நடை பாவனைகளின் தன்னம்பிக்கை மிளிரட்டும். உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

நிறைய வேலைகளை ஒரேநாளில் முடிக்க நினைக்காதீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் இடையே சரியான இடைவெளி விடுங்கள்.

வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களை மிகச் சிறப்பாகச் செலவிடுங்கள். வெளியே செல்வது, கடற்கரைக்குச் செல்வது என மனதை புத்துணர்ச்சியாக்குங்கள்.

இன்றைய பணிகளை செவ்வனே செய்தால் நாளைய பணிகள் செவ்வனே நடைபெறும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

பிடிக்காத வேலை இருந்தால் அதை முதலிலேயே முடித்துவிடுங்கள். அப்போதுதான் தொடர்ந்து செய்யும் பிடித்தமான வேலைகள் மனதை இலகுவாக்கும்.

மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள், அடுத்தவர்களைக் காயப்படுத்தாமல் வாழப் பழகுங்கள்.

மாவனல்லை எம்.வை.எப். சியாமா
மெய்யியல் உளவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

குழந்தைகளைப் பாதிக்கும் பெருமூளைவாதம்

மூளை விருத்தி குன்றிய நிலையில் பிறக்கக்கூடிய குழந்தைகளையே நாம் Cerebral palsy (பெருமூளைவாதம்) என அழைக்கிறோம். உடல் அசைவுகளுக்கு பொறுப்பான மூளையின் விருத்தியானது பாதிக்கப்படும் நிலையில் தசைகளின் அசைவு (Muscle tone), உடலை சரியான நிமிர்ந்த நிலையில் பேண முடியாமை (Posture), கட்டுப்பாடின்றிய உடல் அசைவுகளைக் காட்டுதல் என்பன இந்நிலையின் பிரதான அறிகுறிகள் அல்லது பிரச்சினைகளாகும்.

இந்நிலை பிறப்பிலிருந்தே உருவாகின்ற ஒரு நோய் நிலையே அன்றி, இது குடும்ப ரீதியாக வருகின்ற பரம்பரை நோயன்று. இந்நிலை பிள்ளையின் வயது அதிகரித்துச் செல்லும்போது அதற்கேற்ப தீவிரமடைவதில்லை. மேலும், மூளை விருத்தி குன்றிய இக்குழந்தைகள் மிக இளவயதிலேயே இனங்காணப்பட வேண்டும். அவ்வாறு இனங்காணத் தவறும்பட்சத்தில், இக்குழந்தைகளை வளர்ந்த பின்னர் குணப்படுத்துவது மிக கடினமானது மட்டுமன்றி நீண்ட கால சிகிச்சைகளுக்கு இட்டுச் செல்லும்.

மூளையிலுள்ள மூளையம் புலனுணர்வுகளுக்குப் பொறுப்பான மூளைய மேற்பட்டை (Cortex) மற்றும் மூளி என்பன பாதிக்கப்படுவதன் காரணமாகவே இக்குழந்தைகள் சாதாரண குழந்தைகளின் விருத்தியிலிருந்து வேறுபட்ட அசைவுகளைக் காட்டக்கூடிய, கிரகிக்கும் ஆற்றல் குன்றிய நிலையை அடைகின்றனர்.

இந்நிலைக்கு கர்ப்பகால பிரச்சினைகள், கர்ப்பகாலத்தில் பிரசவத்தின்போதான சிக்கல் நிலைகள், குறைப் பிரசவம் போன்றன இக்குழந்தைகளின் நோய் நிலைமையில் பிரதான பங்கை வகிக்கின்றன.

மூளை வளர்ச்சி குன்றிய இக்குழந்தைகளில் பொதுவாக கட்டுப்பாடற்ற உடல் அசைவுகள், சிந்தனைக் குறைபாடுகள், பார்வைக் குறைபாடுகள், தெளிவாக பேச முடியாமை, உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமை, கற்றல், கிரகித்தல் என்பன பாதிக்கப்பட்டிருத்தல், அடுத்தவர்களுடன் தொடர்பாடலைப் பேண முடியாமை, உடலை நிமிர்ந்த நிலையில் பேண முடியாமை, நடந்தும் செல்லும் விதம் வேறுபட்டிருத்தல், முள்ளந்தண்டெண்பு வளைந்திருத்தல், தலையின் சுற்றளவு சிறியதாக காணப்படல் போன்ற இயல்புகளைக் கொண்டிருப்பதை எம்மால் இலகுவாக கண்டறிய முடியும். மேலும் பொதுவாக இக்குழந்தைகள் ஒருபக்கம் சாய்ந்த நிலையில் அல்லது உடற்பாகங்கள் இறுக்கமடைந்த நிலையிலேயே காணப்படுவர்.

இக்குழந்தைகளுக்கான சிகிச்சையானது நீண்ட காலம் தொடர்ச்சியாக செய்ய வேண்டியதும் வேறுபட்ட மருத்துவ அணுகுமுறைகளை உள்ளடக்கியதுமாகும். எனினும், சிகிச்சைகளானது 8 வயதுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட வேண்டியது மிக அவசியமான நிபந்தனையாகும். மருந்து மாத்திரைகள், இயன்மருத்துவம் (Physyio therapy), சத்திர சிகிச்சைகள், தொழில் முறை சிகிச்சை (occupational therapy), செயற்கை அவயவ உதவிகள் மற்றும் வீட்டில் மேற்கொள்ளத்தக்க சிகிச்சைகள் என்பன முக்கியமானவையாகும்.

மூதூர் யு.எம். லுத்பி
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் புதிய...

(07 ஆம் பக்கத் தொடர்)

தமிழ் டயஸ்போராவின் முன்னெடுப்புகளும் ஓயாத நிலையில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிரான போராட்டத்தை முடக்கி விட்டுள்ளார். இந்திய பாராளுமன்றத்தில் தி.மு.க சார்பில், இலங்கையில் கைதாகும் இந்திய மீனவர்களுக்கு எதிரான பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது. மேற்குநாடுகள் மற்றும் அமைப்புகள், தமிழ்நாடு, இந்தியா என்று பலதரப்பு எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை உள்நாட்டில் பலமான அரசாங்கத்தை கொண்டிருப்பது சர்வதேச முன்னெடுப்புகளில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தவும் போவதில்லை என்பதே விமர்சகர்களின் கருத்தாக உள்ளன. உலகின் வேறு பல நாடுகள் மனித உரிமைகளை மீறியுள்ளமை, இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகளே பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்மை போன்ற நிலைமைகள் சுட்டிக் காட்டப்படுவதன் மூலம் இலங்கைக்கு எவ்வித அனுகூலமும் கிடைக்கப் போவதில்லை. இஸ்ரேல் எதனைச் செய்தாலும் காப்பாற்ற அமெரிக்கா களமிறங்கும் நிலை இலங்கைக்கு இல்லை.

இலங்கை வடக்கு, கிழக்கு மக்களுக்கான தீர்வுத் திட்டமொன்றை நடைமுறைபடுத்துவதன் மூலம் 13 வது யாப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்நடத்த நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமும் மீண்டும் குறிப்பாக, வட மாகாண சபையின் செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள இடமளிப்பதன் மூலமும் தமிழ் மக்களின் ஆதரவை பெற முடியும். அத்தகைய ஆதரவு தென்னிலங்கை மக்களிடையே பிழையான புரிதலை ஏற்படுத்தாதிருக்கவும் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். யுத்த காலம் எப்படிப் போனாலும் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்களாகியும் சிறுபான்மையினர் திருப்திப்படும் நல்லாட்சி நடைபெறவில்லை என்ற உண்மையை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதே தீர்வாக அமையும்.

கிழக்கில் வளங்களை...

(11 ஆம் பக்கத் தொடர்)

பதில்: கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களின் முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட இம்மாநாட்டினூடாக கிழக்கில் விவசாயம் மற்றும் கால்நடை போன்ற ஏனைய துறைகளிலும் முதலீடுகளைச் செய்வதற்கு 40 முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கிறார்கள். இம்மாநாட்டின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு கட்டமைப்பு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து எதிர்காலத்தில் எமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்களையும் வகுத்து வருகின்றோம்.

இம்மாநாட்டினூடாக கிடைக்கப் பெறுகின்ற முதலீட்டினால் பல்வேறு அடைவுகளை எதிர்பார்த்துள்ளோம். இந்த முதலீட்டின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தேர்ச்சையான உற்பத்திகளை மேற்கொள்ளல், 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், இயற்கை வளங்களின் அதிக உச்ச பயன்பாட்டைப் பெறுதல், தேசிய உணவு உற்பத்தியில் கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பான 11.06 வீதத்தை 25 வீதமாக அதிகரிக்கச் செய்தல் போன்ற அடைவுகளைப் பெற எதிர்பார்த்துள்ளோம்.

மேல், தென்...

முன் பக்கத் தொடர்

முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய ஆளும் தரப்பு கட்சிகள் தனித்தனியாக வாக்குகளை கேட்பதுடன், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐ.ம.சு முன்னணியிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இது மேல் மாகாணத்தில் முஸ்லிம் வாக்கு வங்கி உடைக்கப்படும் என்ற அச்சம் ஏற்படுகிறது.

தென்மாகாணத்தில் ஏற்கனவே மாகாண சபைக்கான முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் முஸ்லிம் வாக்குகளும் மேலும் பிரிந்து போவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளமை இந்த முறையும் தென்மாகாணத்தில் முஸ்லிம்கள் மாகாண பிரதிநிதித்துவத்தை இழக்கும் நிலையையே கட்டியம் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைக்கு...

முன் பக்கத் தொடர்

பிச்சைக்காரர்கள் கைதுசெய்யப்படுவதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டு வருவதில் செல்வாக்கு மிக்க அமைச்சர்களும் செல்வந்தர்களும் தொடர்புபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலும் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்யவில்லை என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரியா: ஜெனீவா...

(13 ஆம் பக்கத் தொடர்)

ஏனென்றால், சிரியப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முடிவைக் காண வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ரஷ்யா உட்பட்டுள்ளதாக ஜோர்தானிய அரசியல் ஆய்வாளர் யாசிர் ஸஆதிரா குறிப்பிடுகிறார். இதுதான் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ரஷ்யா அமெரிக்காவுடன் இணைந்து சிரியாவின் அரசையும், புரட்சியாளர்களையும் வலுக்கட்டயாமாக பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வந்ததன் யதார்த்தம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அதற்கான முதலாவது நியாயம் என்னவென்றால், சிரியாவில் தொடரும் மனித அவலம் சர்வதிகாரி அஸதின் சட்டபூர்வத் தன்மையை கேள்விக்குறியாக்கி விட்டன. இதனை ஏற்கனவே பல நாடுகள் கூறியிருந்தாலும்கூட, அஸதின் நண்பர் ரஷ்யா அதனை மறுத்தே வந்தது. ஆனால், இன்று அஸதால் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதப் படுகொலைகள் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையிலும் எதிர்மறைப் பாதிப்புக்களை செலுத்த ஆரம்பித்து விட்டன. இதனால், ஏதோ ஒருவகையில் சிரியாவின் சமாதானத்திற்கு தான் பங்களிப்பதனை உறுதி செய்ய வேண்டிய நிலைக்கு மொஸ்கோ தள்ளப்பட்டுள்ளது. எனவே, ரஷ்யா தன்னால் முழுமையாக வடிவமைக்கப்பட்ட அஸதிற்கு பின்னரான இடைக்கால அரசை பற்றி சிந்திக்கின்றது. அதனை ரஷ்யா தெளிவாகச் சொல்லாவிட்டாலும்கூட, இரண்டாம் ஜெனீவா, மூன்றாம் ஜெனீவா அல்லது நான்காம் ஜெனீவா என்ற பெயரிலான தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் இறுதி இலக்காக தனது குறிக்கோளை ரஷ்யா அடைந்து கொள்ள முனைகிறது என்கிறார் ஸஆதிரா.

இரண்டாவது அம்சம், சிரிய விவகாரத்தில் அஸதுக்கு சார்பாக மூன்று வருடங்களாக முதலீடு செய்த தெஹ்ரானும் மொஸ்கோவும் இனியும் முதலிடுவதற்கு தயாராக இல்லை. காரணம், அவர்களது கணிப்பீட்டையும் தாண்டி சிரியாவில் உள்ளக சுமைகள் மோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் 40 வீதமான நிலத்தையே அஸத் தன் கைக்குள் வைத்திருக்கிறார். புரட்சியாளர்கள் 60 வீதமான பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்தக் கட்டத்தில் எதிர்காலத்திலும் அஸத் முழு சிரியாவையும் கைப்பறுவார் என்ற நம்பிக்கை தெஹ்ரானிடமோ அல்லது மொஸ்கோவிடமோ அறவே இல்லை. எனவே, இன்னும் சிரியாவில் முதலீடு செய்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. இதுதான் பேச்சுவார்த்தை என்ற விளம்பரத்தை மொஸ்கோ காட்சிப்படுத்தியன் பின்புலம்.

புரட்சியாளர்களுக்குள் பிளவுகள்:

இறுதியாக, ஒருவகையில் ஏகாதிபத்திய ஏஜன்டுகள் சிரியப் பிரச்சினையை தமது சுயநலத்திற்கு சார்பாக பயன்படுத்துவதற்கு புரட்சியாளர்களுக்கும் பங்கிருக்கிறது. ஏனென்றால், அஸதுக்கு எதிராக 20க்கும் மேற்பட்ட குழுக்கள் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து களத்தில் போராடி வருகின்றன. அவர்களுக்கு மத்தியில் ஒழுங்கான திட்டமிடலோ அல்லது தலைமைத்துவமோ இல்லை. சிலபோது பாரிய கருத்தியல் முறுகல் நிலைகள் கூட ஏற்பட்டன. அம்முரண்பாடுகள் சிரியாவின் புரட்சியாளர்களுக்கு மத்தியிலேயே பெரும் யுத்தமாக வெடித்த சந்தர்ப்பங்களும் உண்டு. புரட்சியாளர்களின் பிரதிநிதிகளில் சிலர் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளை நிராகிரிக்க, வேறு சிலர் அதனை அங்கீகரித்தனர். இது புரட்சியாளர்களுக்கு மத்தியிலான பிளவை மேலும் கூர்மையாக்கி விட்டது.

மாற்றமாக, அரச தரப்பினர் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளை தங்களது நிகழ்ச்சி நிரலுக்க ஏற்ப சாதுர்யமாகக் கையாள்கின்றனர். ஏற்கனவே பயங்கரவாதம் என்பதனை ஆதாரம் காட்டி சிரியாவின் சர்வதிகார சக்திகள் புரட்சியாளர்களை நசுக்கினார்கள். தற்போது சிரியாவின் புரட்சிக் குழுவினர்களுக்கு மத்தியிலுள்ள பிளவுகளை தமக்கு சார்பாக கையாள ஆரம்பித்துள்ளனர்.

நரேந்தி மோடி...

முன் பக்கத் தொடர்

அமெரிக்க ஜனாதிபதி 2011ஆம் ஆண்டு எகிப்து ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் ஆற்றிய உரையை அவதானிக்கும் புகைப்படம் செம்மையாக்கல் செய்யப்பட்டு மோடியின் புகைப்படம் உள்ளீடு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நரேந்தி மோடியின் பித்தலாட்டம் தோலுரித்து காட்டப்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் சமூகம்...

(10 ஆம் பக்கத் தொடர்)

நாம் தெளிவுபடுத்தி வந்துள்ளோம். அது தவிர 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிய எமது நிலைப்பாட்டைத் தனியான ஒரு கடிதமாகக் கூட ஜனாதிபதிக்கு எழுதியுமுள்ளோம்.

எனவே, ஒழிவு மறைவின்றி ஒரு உறுதியான நிலைப்பாட்டில் எமது கட்சி உள்ளதென்பது இன்றைய அரசாங்கத்துக்குத் தெரியும்.

அதிகாரப் பகிர்வு, பாரம்பரிய பிரதேசக் கோட்பாடு என்பவற்றில் அசையாத நம்பிக்கை வைத்தவர்கள் முஸ்லிம் காங்கிரஸினர். அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ள இறுதித் தீர்மான வடிவத்திற்கு முட்டுக் கட்டையாக முஸ்லிம் காங்கிரஸ் இருக்கும் என்ற ஒரு சந்தேகம் அவர்களுக்கு இருக்கலாம். இல்லாவிட்டால் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள், 13 மாகாணசபை உறுப்பினர்கள் 80 க்கும் அதிகமான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கொண்ட முஸ்லிம் காங்கிரஸை அவர்கள் ஏன் ஒதுக்கி வைக்க வேண்டும்?

ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை ஆட்சி செய்தும், கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை அமைக்க அரசுக்கு உதவியதுமான மக்கள் ஆணையைக் கொண்டுள்ள ஒரு அரசியல் சக்தியை ஒதுக்கி வைத்ததற்கான காரணம் அவர்களுக்கு நன்றாகப் புரியும். தீர்வு விடயத்தில் நழுவல் போக்கு இல்லாத ஒரு திடமான கொள்கையைக் கொண்ட கட்சியைச் சேர்த்துக் கொள்வதிலுள்ள சங்கடங்கள் அவர்கள் தரப்பில் மேலோங்கியுள்ளதே எம்மை ஒதுக்கி வைப்பதற்கான முக்கிய காரணம் என நான் நினைக்கின்றேன்.

கேள்வி: அண்மைக் காலமாக முஸ்லிம் களுக்கெதிரான பொதுபல சேனாவின் நட வடிக்கைகள் குறித்து முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு என்ன?

பதில்: நமது நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் தோன்றிய கோரமான பக்க விளைவுகளில் ஒன்றுதான் பெரும் தேசியவாதத்தின் கடும்போக்கான எழுச்சியாகும்.

விடுதலைப் புலிகள் எனும் மிலேச்சத் தனமான ஒரு பயங்கரவாத சமூக விரோத சக்தியை வீழ்த்துவதற்காக சர்வதேச சமூகங்களின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்பட்ட போர் இறுதிக் கட்டத்தை அடைந்து முடிவடைந்த பின்னர் அது சிறுபான்மை சமூகத்துக்கெதிராக பெரும்பான்மையினர் நடத்தி வெற்றி கொண்டதொன்றாக தோற்றப்படுத்தப் பட்டதே இதற்கான காரணமாகும்.

துட்டகைமுனு, எல்லாளன் யுத்தத்தோடு தொடர்புபடுத்தி பல கட்டுரைகள் அந்தக் காலகட்டத்தின் பின்னணியில் ஊடகங்களில் வெளிவந்த உண்மையை நாம் எப்படி இலகுவில் மறந்துவிட முடியும்? யுத்தத்தின் சாம்பலில் பீனிக்ஸ் பறவை போல் உயிர்த்தெழ வேண்டிய நல்லிணக்கம், சமாதானம் என்ற பரிமாணங்களை [illegible] களம் அன்று அமைக்கப்படவில்லை. அந்த வெற்றிடத்தைப் பல பெரும் தேசிய, கடும் போக்குவாத சக்திகள் தற்போது நிரப்பிக் கொண்டுள்ளன.

இவ்வாறான சக்திகள் இன்று ஆட்சியாளர்களுக்கும் ஒரு தலையிடியாக மாறி விட்டுள்ளதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எல்லா மிதவாத சக்திகளும் இன்று இவ்விடயத்தில் அடக்கி வாசிக்கும் ஒரு நிலையை நோக்கி இசைவாக்கம் அடைந்து விட்டன. இந்நிலைமை ஆபத்தானதாகும். இன்று உலகின் பல பாகங்களில் நடைபெறும் யுத்தங்களின் பின்னணியில் இனவாத மதவாத சக்திகள் மறைமுகமாக செயல்படுவது கண்கூடு. அவ்வாறான ஒரு நிலைமை தோற்றம் பெறுவதற்கு முன்னர் சகல தரப்பினரும் விழித்துக்கொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். முக்கியமாக அரசாங்கம் இந்த நாட்டிலுள்ள அரசியல் யாப்பிலுள்ள சுதந்திரமான உரிமைகளை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கேள்வி: கிழக்கில் நில ஆக்கிரமிப்பு நடப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. இதை தடுப்பதற்கு ஏதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

பதில்: நில ஆக்கிரமிப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் எல்லாவிதமான சிறுபான்மை சமூகங்களும் ஒரு பொதுவான நிலைப்பாட்டிற்கு வர வேண்டும். நிலம் சம்பந்தமான பிரச்சினைகள் பொதுவானதொன்றாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பிரதேசவாத சிந்தனையிலிருந்து விடுபட வேண்டும். பொதுவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டால் புல்மோட்டையில் அதன் வலி உணரப்பட வேண்டும். எனது நிலம் உனது நிலம் என்ற வேறுபாடுகள் களையப்பட வேண்டும். இவ்வாறான ஒரு சிந்தனை நமது தலைவர்களிடத்தில் காணப்படுவதில்லை. நிலப் பிரச்சினைகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு முகமாக முன்னெடுக்கப்படாமல் தீர்க்கப்பட முடியாது. ஏனெனில் நில ஆக்கிரமிப்பு விடயத்தில் அரசாங்கத்திலுள்ள அமைச்சர் மட்டத் தீர்வுகள் அதிகாரிகள் மட்டத்தில் புறக்கணிக்கப்படுகின்றன.

இந்த விடயத்தில் வடகிழக்குப் பிரதேசங்களில் கடமையிலுள்ள உயர்மட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பு மிகவும் குறைவானதாகும். இவ்விடயம் தொடர்பாக நிறைய ஆதாரங்கள் எமது கட்சியிடமுண்டு.

செயலற்று வெறும் கோது போன்று கிடக்கும் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு நடக்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் முடங்கிக் கிடப்பது தான் நிலைப் பிரச்சினை நிலைத்திருப்பதற்கான முக்கிய காரணமாகும்.

காணி அதிகாரங்களை மாகாண சபைகள் கையேற்குமானால் மிகவும் சுலபமாக இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். எனவேதான் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் உட்பட முழுமையான அதிகாரப் பகிர்வுடனான ஒரு அமைப்பையும் அலகையும் அஷ்ரபின் வழிகாட்டலில் நாம் வேண்டி நிற்கின்றோம். துரதிஷ்டவசமாக நாம் சிறுபான்மையினர் என்ற ஒரே காரணத்துக்காக நம்மால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளும் கூட நம்மைப் போல் நலிந்து போய்விட்டன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புறவியல்

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

கிழக்குத் தென்கோடி

(சென்ற இதழின் தொடர்)

தொழிற் பாடல்கள்

தொழிலில் ஈடுபடுவோர் அலுப்பினைப் போக்கிக் கொள்ளவும் உற்சாகமாக அதில் ஈடுபடவும் பாடல்களைப் பாடினர். இப் பாடல்களில் கேலியும் நையாண்டியும் விரவி இழையோடும் அதேவேளை, தொழிலாளரின் துயர நிலையும் வாழ்க்கைக் கோலங்களும் வெளிப்பட்டு நிற்கும்.

தென்கிழக்குப் பிரதேசத்தில் விவசாயம் பிரதான தொழிலாகக் காணப்பட்டமையினால், அது சார்ந்த பாடல்கள் அதிகமாகப் பாடப்பட்டன. விவசாயத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக வண்டிலும் மாடும் காணப்பட்டன. அதில் பயணம் செய்யும்போதும் பாடல்கள் பாடப்பட்டதாக அறிய முடிகின்றது.

கணவன் வண்டிலைக் கட்டிக் கொண்டு வயலுக்குப் போகும்போது மனையாளின் அன்பு நிறைந்த உள்ளம் கவியைப் பொழிந்து விடுகின்றது. அதில் ஒருவித பெருமிதமும் இழையோடி நிற்கின்றது. தனது வீட்டிலிருந்து வண்டி புறப்படுகின்றது என்றால் சொல்லவும் வேண்டுமா? நல்ல வசதியும் வாழ்வும் தனக்குள்ளது என்ற உணர்வும் உள்ளூறக் காணலாம்.

"வண்டிலைக் கட்டி
வளவால பொறப்படுத்தி
கட்டால போகுமட்டும் - என்ர
கண்ணு ரெண்டும் ஒன்னுலதான்."

பாயிழைக்கும் பெண்ணொருத்தியின் தொழிலை வெளிப்படுத்தி நிற்கும் பாடல் ஒன்றில் இறை நம்பிக்கை வெளிப்படும் விதத்தினை பின்வரும் பாடலில் காணலாம்:

"அல்லையில பன் புழுங்கி
ஆபரணப் பாய் எளச்சிப்
போட்டுப் படுக்க ஒரு
புள்ளையத்தா ரகுமானே..."

வயல் வேலைகளில் 'புல் பிடுங்குதல்' இடம்பெறுகின்றது. இடுப்பு வலிக்க வலிக்க புல் பிடுங்குதலோடு அக்குழுவினருக்குத் தலைமை தாங்கும் ஒருத்தியின் மனக் குமுறலாக வெளிப்படும் பாடல் தான் பின்னே காணப்படுகிறது.

"புல்லுப் புழுங்கிப்
பொறகாலதான் மேச்சி
அள்ளிச் செமக்க இந்த
ஆதி உட்ட கட்டளையோ?"

மற்றுமோர் இடத்தில், மாட்டினைக் கொண்டு சூடு மிதிக்கும் ஆண் மகன் ஒருவனின் அங்கலாய்ப்பு. சூடு மிதிக்கும் காளை மாடு நடக்க முடியாமல் மெது மெதுவாகச் சுற்றி வருகிறது. அந்திபடும் நேரமானால், காயாத அவித்த நெல்லினை தன் மனைவி அள்ளவும் சிரமப்படுவாள். விரைவாக வீடு செல்லவும் வேண்டும். உள்ளத்தில் உதித்த எண்ணம் வார்த்தைகளாக உந்திப் பாய்ந்து விடுகின்றது.

"நடவாக் கெடாவும்
நானும் இந்தப் பாடுபட்டா
காயாப் புழுங்க நெல்லும் - என்ர
கன்னியரும் எப்படியோ?"

போடியார் ஒருவனின் வயலை, வயற்காரன் ஒருவன் கூலிக்கு நின்று வேளாண்மை செய்கிறான். போடியார் வயற்பக்கமே வருவதில்லை. அவருடைய மகன்தான் வருவான். வருவதோடு நிற்பதில்லை வயற்காரனுக்கு ஏசுவது, அவன் வேலைகளில் குறை காண்பது எனப் பல தொல்லைகளைக் கொடுப்பதைப் பொறுக்க முடியாமல், பாடல் ஒன்றை வயற்காரன் பாடிவிடுகின்றான்.

"வெள்ளாமச் செய்தா
வேணுமின்டா மூணவணம் - இந்தப்
பொல்லாத பொடி மகன்
புறுபுறுப்புக் கேக்க ஒண்ணா"

வடமாகாண சபை...

(05 ஆம் பக்கத் தொடர்)

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சிந்தனையை ஒட்டி செயல்படுகிறது. அதனூடாக புலம் பெயர் புலிகளோடும் தொடர்புகளை பேணுகிறது. அதனை தடைசெய்ய வேண்டும் என மேற்படி விவாதத்தின்போது நகரசபைத் தலைவர் எஸ்.எச். அஸ்பர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கவனம் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உண்டு. கருணா, பிள்ளையான் போன்றோர் புலிகளின் தோல்வியின் பின்னால் ஜனநாயக பாதைக்கு வந்தவர்கள் அல்ல. கருணாவின் ஜனநாயக வரவுதான் பாசிஸ புலிகளுக்கு தோல்வியை தந்தது. முஸ்லிம்கள் மட்டுமல்ல, தமிழர்களும் சிங்களவர்களும் இன்று நிம்மதி பெருமூச்சு விடுவதற்கு கருணாவின் பிரிவே வழி கோலியது. அத்தோடு பிள்ளையான் கிழக்கு மாகாணத்தை ஆட்சிசெய்தபோதுதான் கடந்த மூன்று தசாப்தக் காலமாக கிழக்கு மாகாணம் தொலைத்து நின்ற இன நல்லிணக்கம் சீர்செய்யபட்டது. இன்று மட்டக்களப்பில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் எதிர்கொள்ளும் காணிப் பங்கீட்டு பிரச்சினைகளை எல்லோரும் சம அந்தஸ்தோடு இருந்து பேசி தீர்த்துக் கொண்டு வரும் வாய்ப்புகள் மகிழ்ச்சிக்குரியன. கிழக்கில் இடம்பெற்ற இன படுகொலைகளைப் பேசுவதென்பது நல்லிணக்கத்தை நோக்காகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி, மீள சீராகிவரும் இன உறவுகளில் பங்கம் ஏற்படுத்துவதாய் இருக்க கூடாது.

இவை அனைத்தையும் தாண்டி மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டவர்கள் அல்லது உண்மை தெரிந்தவர்கள் தகவல்களை ஒப்புவிக்க வேண்டுமென்பது அவசியமானது. அதை விடுத்து நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் போன்ற ஓர் அரசியல் அமைப்பு தேசத்தையே நாசம் செய்த புலிகளின் சிந்தனையில் செயல்படும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கைபொம்மையாக செயல்படக் கூடாது.

உண்மையிலேயே நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் முஸ்லிம்களின் நலன் சார்ந்துதான் காத்தான்குடி நகரசபையில் மேற்படி பிரேரணையை முன்வைத்தது என்பது உண்மையானால் 2006 இல் சமாதான காலத்தில் நடந்த முஸ்லிம்களின் மூதூர் வெளியேற்றம் பற்றியும் அதன் சூத்திரதாரியான புலித் தளபதி எழிலனின் முடிவுகள் பற்றியும் அவரது மனைவி ஆனந்தியிடம் விசாரணை கோருமாறு அடுத்த நகரசபை கூட்டத்தில் பிரேரணை கொண்டுவர வேண்டும்.

அதுமட்டுமல்ல, இலங்கையில் இடம்பெற்ற மிக பெரிய இன சுத்திகரிப்பான 1990 இல் இடம்பெற்ற யாழ் முஸ்லிம்கள் மீதான துரத்தியடிப்பு பற்றிய கண்டன தீர்மானத்தை வடமாகாண சபையில் கொண்டுவர கூட்டமைப்பினர் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்துக்கு வழங்கிய போனஸ் உறுப்பினர் ஐயூப் அஸ்மின் அவர்கள் ஊடாக முயல வேண்டும்.

புரூணையில் சில நாட்கள்...

தொடர்-20

——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

ஓர் ஏரிக்கு மேல் தூண்கள் எழுப்பி... அதில் பலகையினாலான வீடுகள் கட்டி... அந்த வீட்டுக்குள் கக்கூசும் கட்டி... அதில் நடத்தப்படும் சமாச்சாரங்களின் விளைவாக உற்பத்தியாகும் 'தங்கக் கட்டிகள்' அந்த ஏரியிலேயே விழுந்து... தண்ணீரில் கரைந்து... அதனை சாப்பிட்டு வயிறு வளர்த்த மீன்களையே பிடித்துப் பொரித்து...!

குமட்டிக் கொண்டு வருகிறதா இல்லையா?

இப்போது உங்களை அழைத்துச் செல்ல இருக்கும் இடம் குறித்து நண்பர்கள் எனக்குத் தந்த அறிமுகக் குறிப்பு குமட்டும் படியாகத்தான் இருந்தது.

ஆனால், புரூணைக்கு சென்ற ஒருவர் அங்கு செல்லாமல் திரும்பி விடுகிறார் என்றால் அவர் புரூணைக்கு செல்லவில்லை என்றுதான் நான் சொல்லுவேன்.

'கம்பொங் அயர்'.

அது என்ன மலே சாப்பாட்டின் பெயரா? என்று யோசிக்காதீர்கள்.

கம்பொங் அயரை சுற்றிப் பார்ப்பது எங்கள் பிரயாணத்தின் முக்கிய ஒரு விடயமாக இருந்தது. அதற்கு எப்படி செல்வது, யாருடன் செல்வது, எப்போது செல்வது என்றெல்லாம் ஏற்கனவே அமைச்சரவை முடிவு செய்திருந்தது.

கம்பொங் அயர் புரூணையின் பூர்வீகப் பிரதேசம். புரூணையின் தோற்றுவாய் இங்கிருந்துதான் ஆரம்பமானது.

ஏரியின் மீது தூண்கள் போடப்பட்டு அவற்றில் அமைக்கப்பட்ட பலகை வீடுகள் கொண்ட ஒரு 'கடல் ஊர்' என்று சொல்லலாம்.

கம்பொங் அயர் (Kampong Ayer) மலாய் மொழியில் Water Village 'நீர்மேல் கிராமம்' என்று பொருள்படும்.

புரூணையின் தலைநகரான பண்டார் செரி பகவான் நகரில் இது அமைந்துள்ளது. அப்பிரதேசத்தைத் தவிர ஆங்காங்கு வேறு சில இடங்களிலும் நீர்மேல் கிராமங்கள் காணப்படகின்றன. இந்நீர்க் கிராமங்களில், நீரின் மேல் பலகையால் அமைக்கப்பட்ட வீடுகளில் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இது புரூணை சனத்தொகையில் ஏறத்தாள 10 வீதமாகும். உலகில் மிகப் பெரும் நீர்மேல் கிராமமாக இதனை அடையாளப்படுத்தலாம்.

1300 வருடங்களுக்கு முந்தைய பூர்வீகக் கிராமமான இந்த கம்பொங் அயர் புரூணையின் தனித்துவமான பூர்வீக அடையாளமாகும்.

பலகை மற்றும் இரும்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த வீடுகளில் மின்சாரம் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளன. துறைமுகத்திலிருந்து படகுகள் மூலமே இந்த நீர் மேல் கிராமத்துக்குச் செல்ல வேண்டும். மிகவும் வேகம் கூடிய இயந்திரப் படகுகள் இதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கிராமத்தின் உள்ளே நீர்மேல் பலகையினாலான பாலம் போடப்பட்டிருக்கும் சுமார் 29, 140 மீற்றர் நீளமான பலகைப் பாலம் இங்கு இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

அங்கு தண்ணீரின் மேலேயே பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொலிஸ் நிலையம், தீயணைக்கும் நிலையம் உட்பட கடைகள், ஹோட்டல்கள் என்று எல்லா வசதிகளும் இருக்கும்.

கம்பொங் அயருக்கு செல்ல வேண்டுமானால் அங்குள்ள ஒருவருடன் செல்வதே நல்லது என்று கருத்துச் சொன்னார் நண்பர் ஸிஹான். அமைச்சரவை அதனை ஏற்றுக் கொண்டது. அந்த ஆளைத் தேடிப் பிடிக்கும் பொறுப்பை ஸிஹானின் தலையில் கட்டிவிட்டு விலகிக் கொண்டார் இஸ்மத் அலி.

ஹஸ்மி என்ற புரூணை நண்பரைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்தார் ஸிஹான். ஹஸ்மி- ஸிஹான் கற்கும் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியைத் தொடரும் சட்டத்துறை மாணவன் நான்கே முக்கால் அடி உயரம் இருக்கும் அவர் கொச்சிப் பழம் போல சிவப்பானவர்.

ஹஸ்மி தனது வகுப்பு நண்பர்கள் மூவருடன் துறைமுகத்துக்கு வந்திருந்தார்.

துறைமுகத்திலிருந்து இயந்திரப் படகு மூலம் கம்பொங் அயரை நோக்கிப் பறந்தோம். "வீதிகளில் கார்களில் பறந்து செல்லும் புரூணைக்காரர்கள் தண்ணீரிலும் இயந்திரப் படகில் பறந்துதான் செல்கிறார்கள் இல்லையா?" என்றேன். என் கருத்தை ஏற்றுக் கொண்ட ஸிஹான்,

"நடந்து சென்றால் மட்டும் பூரான் மாதிரி ஊர்ந்துதான் செல்வார்கள் சோம்பேறிகள்" என்றார். அதுபற்றி இன்னோர் இடத்தில் சொல்கிறேன்.

ஐந்தே நிமிடங்களில் சென்று விட்ட அந்த தூரத்துக்கு 1 1/2 புரூணை டொலர்கள் கேட்டார் அந்த படகோட்டி.

நாங்கள் இயந்திரப் படகில் தண்ணீரின் முதுகைத் தொட்டும் தொடாமலும் பறந்து கொண்டிருந்தபோது எங்களை முந்திக் கொண்டும் முன்னாலும் பின்னாலும் பலதரப்பட்ட வேகத்தில் எங்கு பார்த்தாலும் ஆட்களை ஏற்றிக் கொண்டு இயந்திரப் படகுகள் பறந்து கொண்டுதான் இருந்தன.

மரத்தினால் நீரில் மேல் அமைக்கப்பட்ட பாலத்தின் மேல் பொடி நடையாகவே சென்றோம். கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் ஹஸ்மி சிரித்த முகத்துடன் பதில் தந்து கொண்டு போனான்.

"இப்படி குறுக்கு மறுக்காக பட கோட்டிச் செல்கிறார்களே. இங்கு விபத்துக்கள் நடப்பதில்லையா?"

"நடக்குமே!"

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமையரப்பாவும் ஆட்டுக்குட்டியும்

என்டெ சின்ன வயசுக் கதெ. அப்பெ நான் படிக்கப் போகல்ல. ஆட்டுக்குட்டியக் கண்டா அதுக்குப் புறத்தால போயிருவன். மேய்ச்சலுக்கு வாற ஆட்டுல எனக்கு விருப்பமான குட்டியப் புடிச்சி, வாழ நாரால கட்டி விளையாடுவென். திடீரெண்டு நாரப் பிச்சிட்டு குட்டி ஓடிடும்.

மனசும் கூடவே ஓடும்.

இப்படித்தான் ஒரு நாள் ஆமையரப்பா ஊட்ட வந்தாரு. நான் ஊராவூட்டு ஆட்டுக்குட்டியப் புடிச்சி கட்டி விளையாடுறதப் பார்த்திட்டாரு.

ஏன் வந்தார், எதுக்கு வந்தாரு எண்டெல்லாம் ஞாபகமில்லெ.

போறப்ப, தம்பி சாய்ந்தரம் இவனக் கூட்டிட்டு வாடிக்கு வாங்க.

ஆமையரப்பா வாடிக்குப் பெய்த்தாரு.

ஆமையரப்பா அசல் ஆமையைப் போலான். மூனு முழ கொட்டான் மனுஷன். நல்ல கறுப்பு. கட்டையான பெரிய வவுறு. பழுப்புல அரக்கை வாலா மணி. வெள்ள தாடியும் தலையில தொப்பியும்.

ஆமையரப்பாட்ட ஒரு மாதிரியான உப்புத் தண்ணி வாசம் வரும். எங்க வாப்பாட்டயும் அந்த வாசந்தான். ஆத்தில, கடல்ல தொழில் செய்யிற எல்லாரிட்டயும் அந்த வாசந்தான்.

தடுமல் மூக்கோட வாப்பாவ கட்டிப் புடிச்சிக் கிட்டுப் படுத்தா நல்லாருக்கும். தலப்பாரம் குறெஞ்சிரும்.

மெய்தான், இது என்டெ கதெ மட்டுமில்லெ. ஆமையரப்பாட கதையுந்தான்.

ஐ.பி. ஆறுமுகமும் இதுக்குள்ள வருவாரு. ஆட்டுக்கள்ளன் ரமுழாரும் வந்து போவாரு. பழைய மனுசர்ர கதெ கேக்கப் புதுசா இருக்கும்.

ஆமையரப்பாக்கு ஏன் அப்படிப் பேரெண்டு இண்டைக்கும் விளங்கல்ல.

எங்கெட ஊர்ல அப்படித்தான் பேரு.

உம்மா, வாப்பா ஒரு பேரு வெப்பாங்க. பள்ளிக் கூடத்தில இன்னொரு பேரு. கூப்பிர்ர வேறொரு பேரு. பதிவுல அது வேற. கடெசில ஆரோ ஒருத்தன் வெச்ச பட்டப் பேருதான் மௌத்தாகி மண்ணுக்குள்ள போன பறவும் நிலெச்சி நிற்கும்.

ஆமையரப்பா, வாப்பாக்கு மாமா. எனெக்கி மூத்தப்பா. அந்த நாளெய போக்ள நினெச்சா புதினமா கிடக்கு.

புகையிலையெரு, வத்தக்காயெரு, கொச்சிக்காயெரு, கத்தரிக்காயெரு, புடலங்காயெரு, கால்ராத்தலெரு, ஈக்கிலெரு, அரிப்பாரு, அதக்க விழுங்கியெரு, பூலாவெரு, புறப்பட்டாரு, மாலையெரு, கிராணம் பாத்தாரு, புக்கையெரு, சோவையெரு, களட்டிக்காயெரு, பனமரத்தாரு

இத எழுதப்போனா பொழுது விடிஞ்சிடும்.

இண்டெக்கி யாரு இப்பிடி பேரு வெக்கிர, எல்லாம் அறபுப் பேரு.

அண்டெக்கி எல்லாம் மரக்கறிப் பேரு, சைவப் பேரு.

இண்டெக்கி அர்த்தம் பாத்து, கணக்குப் பாத்து வெக்கிற பேரு. முதலாம் நம்பர், அஞ்சாம் நம்பர், எட்டாம் நம்பர் எல்லாம் அரசியலுக்கு வாசான பேராம். நம்பருக்காக எழுத்தெ மாத்தினா தலெயெழுத்தும் மாறுமாம்.

பேத்தி வாராள். என்ன காலையிலேயே எழுத்துக் கிறுக்கு.

முப்பது ரூபாய்க்கு பராட்டாவும் சம்பலும் வாங்கிட்டு வாங்க.

மெய்தான், இது ஆமையரப்பாட கதெ.

என்னைக் கூட்டிவரச் சென்ன கையோட, ஆமையரப்பா ஏறு கடப்பால ஏறி புறவளவுக்க போனாரு. பிலா மரம் காய்க்கத் தொடங்கினா, ஆரையும் அந்தப் பக்கம் வாப்பா போக உடமாட்டாரு. அடி மரத்திலயும் வேர்லயும் பிலா வடுக்கள்... கழுத்தில ஆலங்கா மணிக் கோர்வ போல வரிசையாக் கிடக்கும்.

வாப்பாவும் நானும் பிலா மரத்தச் சுத்தி பன மட்டயால வேலி கட்டுவம். மர ஊசால நான் குத்திக் குடுக்க வாப்பா சும்பாக் கவுறால இறுக்கிக் கட்டுவாரு.

பிலா மரத்துக்கு பாவாட தச்சுப் போல இருக்கும்.

வாப்பாட ஒவ்வொரு காரியமும் அழகா, நுட்பமா, கறாரா இருக்கும். வாப்பாட கையெ இருக்கிற கத்தி பளபளன்னு மின்னும். என்னத் தொடவும் விடமாட்டாரு.

வேலி கட்டினா என்னெ, மீன் கூட பின்னினா என்னெ, காத்தாடிக் கம்பு கமுகு வைரத்திலெ சீவிச் சீவி...

அதுவும் ஓர் அழகுதான்.

அவங்கல்லாம் செய்ற தொழில செப்ப மெண்டாக்கள், தெய்வமெண்டாக்கள். செப்ப மெண்டாலும் தெய்வமெண்டாலும் அழகுதான.

அப்படித்தான் அந்தக் கால மனிசர்.

இவனுகளுக்கு கிழப்பிக் காட்டினாத்தான் அழகு. அவங்களுக்கு மூடிக் காட்டினாத்தான்...

அப்படித்தான் வாப்பா பிலா மரத்தெ மூடிக் காட்டினாரு.

ஆமையரப்பா, வேலிய நீக்கிப் பாத்த கையோட வானத்தெப் பாத்து மாஷா அல்லாஹ் எண்டு பிலா மரத்துக்கு துஆ கேட்டாரு.

நான் ஏறு கடப்பிலெ ஏறி நிண்டு இதெல்லாம் பாத்துக்கிட்டன்.

என்னெக் கைல புடிச்சிக் கூட்டி வந்த ஆமையரப்பா, தம்பி! இந்த முறெயும் எனக்கொரு துண்டுப் பழம் அனுப்பனும்.

கட்டாயம் மாமா.

மெய்தான், புதுசா ஏதோ நெல்லு வந்திருக் காமே, என்னெயோ போர் ண்டானுகள். உங்கட கூட்டாளி கந்தையா ஓவிசர்தான் போடிமாருக் கெல்லாம் ஆளுக்கொரு பக்கெட்டுக் குடுத்தெயாம்.

ஓம் மாமா எச்..ச்.போர்.

ஓம் தம்பி, அதான் பேரு, எனக்கும் ஒரு சுண்டு நெல்லுத் தாங்களென். புட்டிக்குள்ளெ ஒரு வரவுத் துண்டு செரிக்கட்டி வெச்சிரிக்கென். கொத்து நெல்லா கொத்துவொம்.

கட்டாயம் தாரன், தலெமழெயோடு வாங்கிட்டுப் போங்க.

மாமா, உங்களுக்கிட்டெ சீனட்டி நெல்லு இருக்கா? வாப்பா கேட்டாரு.

அதென்னத்துக்கு தம்பி, ரெண்டு மாசத்தில வெட்டனும், ரெண்டு நாள் பிந்தினாலும் வெறும் கதிர்தான் மிஞ்சும், எல்லாம் கொட்டிரும். சோத்துக்கு நல்லாருக்கும். நாம நாய் பாடா பட்டு வெள்ளத்தி லெயும் தண்ணிலெயும் அழிய உடலாமா? இளங் கலையென்ல விதைங்க. வெள்ளத்துக்கும் நிண்டு புடிக்கும், சோத்துக்கும் நல்லாருக்கும்

ஆமையரப்பா தலையெ ஆட்டி ஆட்டி வாப்பாவோட கதெச்சாரு. வாப்பாவும் தலெய ஆட்டி ஓம் போட்டாரு.

வாசல்ல, பாயும் தண்ணிக் கோப்பெயும்.

இரிங்க சாச்சா உம்மா மண்டபத்துக்குள்ள இருந்து தேயிலெ ஊத்துற சத்தத்தோடு உம்மாட சத்தமும்...

உம்மாட ஒரு கைலெ தேயிலெயும் இடது கைலெ சீனி போத்தலும்.

அப்பா, வலது உள்ளங்கைலெ சீனியக் கொட்டி, நாக்கெ நீட்டி, நக்கி நக்கி 'த்ச்' கொட்டி நாலு முடறு குடிச்சி, சீனிக்கையெ நல்லா நக்கி, வலது தொடெயிலெ தட்டி எழும்பிட்டாரு.

ஆத்துக்கு போற ஒழுங்கயிலெ ஆமையரப்பா. பொழுது பத்தெக்குள்ள இறங்கிட்டு.

விடிஞ்சா வெள்ளிக்கிழமெ. கொத்துவா நாள். வெள்ளிக்கிழமெண்டா எங்கட ஊர்ல பெருநாள்தான்.

கிழமெய்ல ஒரு நாள்தான் பகச்சோறு. அது வெள்ளிக்கிழமெய்ல. ஒவ்வொரு நாளா எண்ணி யெண்ணி இருப்பெம்.

இறெச்சிக் கறியும் புளித்தண்ணியும் வயிறு முட்டப் புடிக்கலாம்.

வாப்பாக்கு வெள்ளிக்கிழமெயும் வேலதான். ஒரு வேலெ முடிஞ்சா இன்னொரு வேலெ. அவர்ர காலடியிலெ வேலெ காத்துக்கிட்டுக் கிட்க்கும்.

போன கிழமெ தொடக்கம் கூட பின்னுற வேலெ.

கர வலெயில மீன் காலம்.

வாப்பு மாமா, மலாயரு,, மாத்தாண்டன் மாமா, சண்முகத்தாரு, கொல்லாவரு, பறங்கியரு ண்டு எல்லாருக்கும் வாப்பாதான் மீன் கூடெ பின்னிக் குடுப்பாரு.

கவுறு போட்டுப் பின்னிக் குடுக்க அஞ்சு ரூவா.

கவுத்திலெ உறியும் கூடெயும்.

எங்கட ஊர்ல மீன் கூட பின்றத்திலெ

வாப்பாவ அடிக்க வேறாள் இல்லெ. நல்லா முத்தி விளெஞ்ச பிரம்புலெ அழகழகா இளெப்பாரு.

பிரம்படித் தீவுக்குப் போய், பிரம்பு வெட்டி வருவாரு. மத்தவங்க வெட்டிவாற பிரம்பு வாப்பக்குப் புடிக்காது.

நல்லா முத்தின பிரம்பு, சுரவணியம் பழத்தெப் போலெ மினுங்கும். அடிப் பிரம்பிலெ கறுப்புக் கறுப்பா பட்ட கிளெம்பும்.

எங்கட ஓதுற பள்ளி லெவ்வெட கைலயும் அப்படிப் பிரம்புதான்.

முரட்டுக் கைகள், முத்தின பிரம்பு, மனுசனுக்கு விசரு வந்து அடிச்சாருண்டா, முதுகத் தீச்சிட்டுப் போவும்.

வாப்பாட ஒவ்வொரு காரியமும் அவர்ர கையாலெ செஞ்சாத்தான் அவருக்குப் பத்தியம்.

உம்மாவ கையுதவிக்குக் கூப்பிட்டா வாப்பா ஒண்டெச் செல்ல உம்மா வேறண்டெச் செய்வா. ஒரே சண்டெதான்.

உம்மா–வாப்பா சண்டெ எப்பான் முடியுமோ. அல்லாவுக்கு வெளிச்செம்.

இப்பெல்லாம், உம்மாவ, வாப்பா ஒண்டுக்கும் கூப்பிட மாட்டாரு. நான் பெரியாளாப் போனென். என்னெத்தான் கூப்பிடுவாரு. வாற வருசம், அரிவரி படிக்க ராத்தாவோட பள்ளிக்கூடம் போவப்போறென்.

சொண்டுக் கத்தியெ எடுத்திட்டு வா, மர ஊசியும் சணலும் கிடக்கிறெ கடவத்தக் கொண்டா, உம்மாட்ட முட்டித் தண்ணில வாங்கிட்டு வா.

பொழுது விடிஞ்சா வாப்பா ஒவ்வொண்டா செல்லுவாரு. நானும் ஓடியோடி ஒவ்வொண்டாச் செய்வென்.

வாப்பாக்கு என்னில சரியான இரக்கம்.

ஆமையாரப்பா ஊட்ட வந்து போய், விடிஞ்சா ஒரு கிழமெ.

இன்னும் அப்பாட புட்டிக்க என்னக் கூட்டிட்டுப் போகெல்ல.

ஆட்டுக்குட்டிக்கு முதல்ல கால கட்டணுண்டா மன. அதுக்குப் புறவுதான் ஆட்டக் கொண்டு வரணும். மழைல ஆடு நனெஞ்சா செத்துப் போவும்.

நாளெக்கி ராத்தாவும் நீயும் ஓடக்கரெ மாமிட்ட போய், பத்து கிடுகு மட்ட வாங்கிட்டு வரணும்.

மாமிட்ட போரெண்டா எனக்கி இல்லண்டெ கொண்டாட்டம். போற வழியெல்லாம் வாக மரக் காடுதான். நாம எண்ணிக்கிட்டு இரிக்கெம், காடுண்டா மரங்களெண்டுதான், காட்டுக்குள்ள விதம் விதமான குடும்பங்கள். மனிசரில்லாத குடும்பங்கள்.

ஒவ்வொரு மரத்திலெயும் பொன்னி வண்டுகள் அட்டக்கட்டிகளெப் போல மேஞ்சிக் கிடக்கிக் கிடக்கும். மேலெல்லாம் தங்கத் தண்ணிலெ போட்டு எடுத்தாப் போல மினுமினுக்கும்.

பெரிய ஈக்கில்ல பொன்னி வண்டுற தலெய நூலால கட்டி. ரெண்டு கையாலெயும் சுத்தச் சுத்த வண்டு சிறகெ விரிச்சி விரிச்சி மூச்சு விடாம, ஈக்கில சுத்திச் சுத்திப் பறக்கும்.

பாக்கிறதுக்கு பெருநாளைல அலிக்குட்டி ஓடாவியார்ர தொட்டி ஊஞ்சல் போல இருக்கும்.

ஓடக்கரையெல்லாம் வாக மரமும் புங்க மரமுந்தான். புங்க மரம் நல்ல கறுப்பு. வண்ணார வெட்டைல காச்சலுக்கு ஊதிப் பாக்கிற சீனியன் கட்டாடியன் போல.

வாக மரம் நல்ல வைரமெண்டு வாப்பா செல்லு வாரு. கிறுக்கூஞ்சல் செய்ய நானும் மச்சிட காக்கா உசன் மச்சானும் வாக மரத்திலெதான் அச்சுச் செய்வம்.

ஒரு மரத்த ஒரு நாளெக்கெல்லாம் கிடந்து தறிப்பெம். மரத்திலெ கத்தி ஏறாது. அப்பிடி வைரம். கசறுக் கட்டி போல.

உசன் மச்சான் படிக்கப் போகல்லெ. மாமாவோட ஆத்துக்குப் போற. மாமா வீச, மச்சான் தொடுப்பான்.

அணியத்திலெரிந்து அவன் சவளை, தோணிய அணைச்சாப்லெ திடீரென ஆத்துக்குள்ள சவளெக் குத்தி ஆறு குழிவிட்டு குழிவிட்டு சிரிக்கிறாப் போலெ இருக்கும். அழகா இருக்கும்.

கையெ ஆத்துக்குள்ள விட்டா, சிரிப்பு அகப்படாது, சிதறிப் போகும்.

ஆத்துக்குள்ள சவளெப் போட்டு சின்னச் சின்ன தண்ணி மடுவெத் தோண்டித் தோண்டி உசன் மச்சான் தோணி உடுவான். நான் தோணிட தொங்கல் அணியத்திலெரிந்து பாத்துக்கிட்டு இருப்பென்.

தலை சுத்தும்.

மச்சிக்குப் பேரு செய்னம்பு. மாமியப் போல சரியான வெள்ளெ. ராத்தாவும் வெள்ளெதான். எங்கட குடும்பத்தில நான் மட்டுந்தான் கறுப்பு. வாப்பாட வாப்பா போல எண்டு மரியெம் மாமி செல்லுவா. மச்சிக்கு நல்லா நீஞ்சத் தெரியும். உசன் மச்சான்தான் அவள நீச்சல் பழக்கின. ராத்தாக்கு மச்சிதான் நீச்சலக் காட்டிக் குடுத்தா.

ரெண்டு மூனு தரம் தண்ணிக்குள்ள தியாமுட்டி தியாமுட்டி பார்த்திருக்கக்கொள கைய நீட்டி நீட்டி ஓடைய பின்னுக்கிழுத்து பின்னங்களால் ரெண்டும் தண்ணிய உதைச்சி உதைச்சி.

ஒரு நாளைய கூத்து ராத்தாக்கும் நீஞ்சத் தெரியும் இன்னும் ரெண்டு வருசத்திலெ நானும் நீஞ்சப் பழகிருவென்.

மச்சியும் ராத்தாவும் போட்டி போட்டு நீச்சலடிப்பாங்கெ.

மாமிர ஊட்டுக் கரையிலெ சின்ன ஓடெ. ஓடைக்கு மேலால ரெண்டு தென்ன மரங்கள் கரையில் கையைக் குத்தி தண்ணிக்கு மேலால சாஞ்சி படுக்குது. இருந்தாப்போல வானத்தப் பார்த்து தலெ விரிச்சு ஆடும்.

ராத்தாவும் மச்சியும் மரத்திலெயிருந்து குதிரெ ஓடுவாங்கெ. ஓடையத் தொட்டுத் தொட்டு தென்ன மரங்கள் ஊஞ்சலாடும்.

மரவட்டுக்குள்ள மைனாக் குஞ்சுகள். பயந்து பயந்து கேவிக்கேவி சிறகடிச்சி மாயும், பாவம். மச்சிக்கும் ராத்தாக்கும் பயமேயில்லெ. ஆளுக்கொரு மரத்தில போட்டிப் போட்டு ஏறுவாங்கெ.

எஸ்.எல்.எம். ஹனிபா

தென்னெ மரத்திர உச்சிக்குப் போய் வாளெ மீனெப் போலெ தலெக்குத்தின குதிப்பாங்கெ. குதிச்சா குதிச்சதுதான்.

அப்பிடியே கொஞ்சத்தூரம் சுழியோடிப் போய், ஓடெத் தொங்கலில உடும்பப் போலெ தலெயத் தூக்கி சடாரெனத் தாண்டு போவாள் மச்சி. ராத்தாக்கு சுழியோடத் தெரியாது. நீஞ்ச மட்டுந்தான் தெரியும்.

நான் இடுப்பு மட்டுத் தண்ணிலெ சிரட்டையாலெ தண்ணிய அள்ளி அள்ளி தலெயில ஊத்திக்கிட்டு பயத்திலெ நிப்பென். அந்த நேரம் பார்த்து எனக்குத் தெரியாமெ விலாங்கு மீனப் போலெ வந்து என்ட கவட்டுக்குள்ளால பூந்து சுழியோடிப் பெய்த்திருவாள் மச்சி. நான் பயத்திலெ தண்ணிக்குள்ள தாண்டு தாண்டு தியாமுட்டுவென்.

கண்ணாலெயும் மூக்காலெயும் தண்ணி புரெயேரி சிரசிலடிக்கும். உசிரு போறாப் போலெ இருக்கும். மச்சியோடெ செரியான கோவம் வரும்.

மிகுதி அடுத்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருச்சாளி முதலைகள்

செவிட்டு தேசத்தில்
சங்கூதி சாவெழுதும்
சரித்திர சம்பவங்கள்
சாதாரண சில்லறைகள்

பஞ்சமோதும் மேட்டுக் குளம்
செங்குத்து மலைப் பாறை
செதுக்கியெடுத்ததை
பிணம் தின்னும் பூமியாக
வேட்டைக்கு வித்திட்ட
முரட்டு அதிகாரிகள்

காவல் நாய் பிடித்து
முன் செல்ல ஏவினாலும்
வெறிச்சோடும் கால்வாயை
வெறி நாய்கள்
கடப்பதற்குள்
உயிர்களைக் களவாடும்
பல்லூறு தேசமது

பசியாறும் வேட்கையில்
வட்டமிட்ட பருந்தங்கு
பரிதாப ரூபத்தில்
மண்ணோடு மாண்டதால்
பழி தீர்க்கும் வேகத்தில்
பல தூரம் முன்சென்றேன்

உயிர் வாழ வழி தேடி
குயில்கூடக் கூவாத
குரலற்ற தேசத்தில்
கூவிக் கதறியதால்
மௌனித்த மரணத்தில்
கண்ணயர்ந்து களைத்திட்டேன்

கிலி தந்த வலியோடு
வலி தந்த சுமையோடு
பணிவான புதருக்குள்
பல நேரப் பசியோடு
பதுங்கி நான் பார்த்ததில்...

அரசாள கருக் கொண்டு
பலசாலி யாரென்று
அதிகார வெறியோடு
பிணமாக பலம் சேர்த்து
பணம் கொண்டு பசியாறும்
பல நாட்டு முதலைகள்
முரணான வழி தேடி
பிணம் திண்டு வளர்ந்தாலும்

முடிவாக முடியாத
அதிகார முதலைகள்
உள்வீட்டு மோதல்கள்

மீரா எம் அஸ்ஹர்
இறக்காமம்

என்ன செய்வது...?

விடிந்ததும் விட்டம் பார்த்து
எழுந்தவுடன்
விழித்தெழும் வழமையான
வண்ணமிகு எண்ணம்
என்ன செய்வது?

வறுமை ஒரு புறம் தலைவிரித்தாட
வருமான வழி இங்கு வழியற்றுபோக
உழைப்பதற்கு உள்ள காரசாரம்
கூலிவேலைக்கும் வேலி உடைக்கும்
இளைஞர்கள் ஆரவாரம்

வாலிபனுக்கு
வயது இப்போ இருபத்தாறு
இருக்க இருக்க இல்லத்தில்
பெயர்– தண்டச்சோறு

படித்து முடித்து பட்டம்
பெற்றும்
கடைத்தெருவில்கூட ஒரு
காலி இடமில்லை
காரணம் காசு இல்லை

பதவி கொடுக்காத மதிப்பை
பணம் கொடுக்கையிலே
தான் பெற்ற தகைமைகள்
தகுதியிழந்து விட்டனவே!

உச்சி உடைந்த முருங்கை மரமும்
தளைத்துவிட்டால்தான் பெறும்
மரியாதை– தொழில் தேடும்

உயிர் மொழி

தொகையானோருக்கு
இவ்வுலகில் இல்லை – ஏன்
ஒரு வேலை இல்லை

கௌரவமான தொழில் தேடி
தகுதியிழக்க முடியுமா
விவசாயம் செய்தாலும்
வீரம் காட்ட முடியுமே...
வீம்புக்கு மண் தின்ன
வீண் பேச்சு வேண்டுமா?

பிழைப்பதற்கு உழைப்பது
நல்வழியாயின் இழிவில்லை
எவ்வழியும்...
படித்தவருக்கும் பாமரனுக்கும்
பகுப்பில்லை
பிழைக்கும் வழியில்!

எஸ். சிபானி முஹமட்
ஒலுவில்

என் மரணம்

எனக்காக நிச்சயிக்கப்பட்டிருக்கும் என் மரணம்
நூற்றிமுப்பது வோல்ட் மின்சார தீண்டலால்
நான் விசிறி எறியப்பட்டு
எனது உயிர் பெரும் கீச்சல் சப்தத்துடன்
பிரிந்து செல்லலாம் - அல்லது
நான் பேருந்தில் பயணித்துக் கொண்டிருக்கும்போது
ஏதோ ஒரு வாகனம் அடி வயிறு கூசும்படியான
வேகத்தோடு வந்து மோதி
எனது உடல் சிதறி அத்துண்டங்களில்
காகங்களும் மொய்க்கலாம்
அல்லது பயங்கர தோற்றத்தில் மேலோங்கி
வரும்
பெருத்த அலைகளில் நான் சிக்குண்டபடி
மூச்சுத்திணறி ஷஹீதாகியும் போகலாம்
இல்லையெனில்...
எவரும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் திடீரென்று
எனது உயிர் ஒரு பழுத்த இலையைப்போல
கழன்று விழலாம்
இப்படியும் இல்லையெனில் நான்
சுகயீனப்பட்டு குறுகிய நாள் எல்லைக்குள்
எண் மரணம் எவ்வித நோய்வினையும்
உணராத படி
எகமான வலியின் விரவலோடு
பிரிந்து செல்லலாம்
இவ்வாறாக என்னால் எதுவும் உறுதிப்படுத்திச்
சொல்லமுடியாத என் மரணத்தை
அல்லாஹ் ஏதோ ஒரு வடிவத்தில்
தயார்படுத்தி வைத்திருக்கிறான் என்பதில்
நான் உறுதியாக இருக்கிறேன்
என்னுடன் நெருங்கி பேசி சிரித்து
மகிழ்ந்த ஒவ்வொரு சிநேகிதர்களின்
மரணத்திற்குப் பின்னரும்
என் ஆன்மா இப்படித்தான் மிகத்
தூய்மையுடன் சொல்லிக் கொள்கிறது

– ஏ.கே. முஜாரத்

நேசத் தாய்

பல்லைக் கடித்து சுமந்த மாதங்கள் பத்து
அதுவரை உன் ஆசைகள் பலதும் பித்து
பெற்றெடுத்தாய் மகவையொன்றை
சேவகம் செய்ய

ஊட்டினாயே பிறந்ததும்
உன் உதிரத்தையே பாலாக
உண்ண மறந்தாலும்
நொடியும் எனை முத்தமிட
மறக்கமாட்டாய்

சுடும் வெயிலென்ன
கடும் வெயிலென்ன
குளிர் காற்றென்ன
பொறுத்தாயே சகலதும்

ஆசை ஆசையாய்
அணிவித்தாய் ஆடை பல
நின் அழகு பார்த்துப் பார்த்து
மெழுகாக்கினாய் உன்னையே

அற்ப வாழ்வுக்கு அர்த்தம் சொன்னாய்
என் எதிர்காலத்துக்கும்
நல்வழி காட்டினாய்
பல கதைகளும் பல சரிதைகளும்
பஞ்சமின்றி தினமும் கூறினாய்

வாழ்வின் எளிமையை உணர்த்தித் தந்தாய்
அன்பு வாழ்வினில் ஆசையும் ஊட்டினாய்
என் தாயே உனைப் பிரிந்த ஜீவன்
வாழுது என்றென்றும்
உன் நினைவுகளுடன்

எம். பாரிக்
ஜாமிஆ நளிமிய்யா வளாகம்

துயர் களைவோம்

நிமிடமுள் நகர்ந்து
வாழ்க்கையை புசிக்கின்றது
சுயம் பற்றிய சுரண்டல்

என்ன தவம் செய்தோம்
என்னதான் தவறு செய்தோம்
இந்துமா சமுத்திரத்தின் கண்மணித் தீவு
கண்ணீர் தீவாய் ஓலமிடுகிறது
குடியரசுக் கழுத்தை நெறித்தவர் யார்?
குடியானோர் அலறலில்
அயல் வியாபாரிகள் கதவுகளைத் தட்டுகின்றனர்
கண்ணீரை துடைப்பதில் கடும்போட்டி
முடிவாக...
கண்களை அகற்றல்
தீர்வென்று நிச்சயித்திருக்கிறார்கள்

மேய்ப்போனே
மந்தைகளை வறுத்து உண்ணுகையில்
இனந்தெரியாதோர் இலக்கு இடுகாடுதான்
இரத்தத்தால் எழுதிய தீர்வுகள்
இமயமளவு இருந்ததில்லை

சாய்வு நாற்காலிகள்
சற்றேனும் சரித்திரத்தை மீட்டவில்லை
சுடுகனையால் பேசியளவு
இதயங்களால் பேசவில்லை
எல்லைக்கோட்டை நகர்த்துவதை விட்டு
இதயங்களை நகர்த்துவோம்-
இருக்கும் தேசக்கொடிக்கு நூல் சேர்ப்போம்
தேசிய கீதத்திற்கு வாயசைப்போம்
துயர் களைவோம்!

மு.ஹ. நிஹால் பாரிஸ்
சம்மாந்துறை 04

இறை அற்புதம்

அருவியின் நளினம்
அது அரங்கேற்றும் ஓசை
தென்றலின் பேச்சு
மழையின் உரையாடல்
வாடைக் காற்றின் இனம்
நீரின் சலங்கை சத்தம்
பூ விரியும் அதிசயம்
இலையின் கும்மி நடனம்
இத்தனையும் சேர்த்து
சங்கீதம் செய்து பார்
அப்போது தெரியும்
இறைவன் தீட்டிய அற்புதம்!

எப். சன்பரா சாலிஹீன்
கல்லூரி

சுகந்தம்

எமது உரிமைகள் கெட்டால்
வெட்கம் வராத
நமது தலைவர்களுக்கு
பதவி கூடக் குறைய
கிடைக்காவிட்டால்
சீற்றப் புயலானார்கள்

– மூதூர் றிஸ்வின்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Conquer the world with Global Qualifications!

சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

Computing | Civil Engineering | Construction
Telecommunication Engineering | Biomedical Science
Law | Business Management | Software Engineering
Computer Networking

இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்களில்
முதற்தர நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள
BCAS campus உடன் இணைந்து
நாளைய உலகை நீங்களும் வெற்றி கொள்ளலாம்.

from Degree Foundations to Masters..

15 YEARS of Trust & Excellence in Higher Education

International Collabortions

edexcel — advancing learning, changing lives

UNIVERSITY OF WOLVERHAMPTON

LONDON SOUTH BANK UNIVERSITY

Awards & Recognitions

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector) - Survey by **LMD**

BCAS Awarded **"Performance Excellence"** for the years 2010 & 2011 by Edexcel - UK

ISO 9001:2008 CERTIFIED

Degree Foundations
IEF - Engineering Foundation
ACCESS - IT Foundation with English
BMAC - Business Management Foundation

BTEC HNDs
Telecommunication Engineering | Quantity Surveying
Civil Engineering | Computing & Systems Development
Marketing | HR Management | Business Management
Hospitality Management | Biomedical Science | Law

Top-Up Degrees
BSc (Hons) in Quantity Surveying | LLB (Hons) in Law
BA (Hons) in Business Management
BSc (Hons) in Computing

Masters Degrees
MBA | LLM | MSc in IT

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Corporate Office	**32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. T : 011 255 9255**
Kandy Campus	344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731
Batti Campus	294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451
Wayamba Campus	103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339
Jaffna Campus	16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910
Qatar Centre	36, Al-Ain St, Hilal, Doha-Qatar. T: +974 44366572

www.bcas.lk Hotline : 011 255 9255

Colombo | Dehiwala | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Doha - Qatar *Building Careers - Transforming Lives*

LONDON COLLEGE

தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறிகள்
LONDON COLLEGE
OF HIGHER STUDIES (PVT) LTD

52, Davidson Road, Colombo- 04

- பயிற்சி நெறியின் பின் கூடுதலான சம்பளம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு. மடிக்கணனியை பயன்படுத்தி வீட்டிலிருந்தவாறே உலக நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களை வழங்குவதற்கான தகைமையைப் பெற்றுக் கொண்டு கூடிய இலாபம் அடைந்து கொள்ளவும் முடியும்.
- சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகியகால பயிற்சி நெறி
- விரைவில் தொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள்.
- சுய தொழில் வாய்ப்புக்கான தகைமைகள்.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு கூடிய சம்பளத்தில் தொழில்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள்.
- Uk, USA, Canada, Australia, Swiss போன்ற நாடுகளில் படித்துக்கொண்டே ஹோடல்களில் தொழில் வாய்ப்புக்கு ஏற்ப நடைபெறும்.

Kurunegala ▶ 077 99 65 000
077 50 96 000
Hot Line 0711 60 10 40

London Hotel School

10 சர்வதேச தரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும்

5 ★★★★★ - 5 நட்சத்திர ஹோட்டல்களில் பயிற்சிகள்.

மேலும் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக 5 நட்சத்திர ஹோட்டல்களில் பயிற்சி, சம்பளம், டிப்ஸ், உணவு உட்பட சீருடை என்பன வழங்கப்படும்.

Cookery • Front Office & Reception • House Keeping • Vegetable & Fruit Carving • Food & Beverage • Pastry & Bakery
Tourism • Cake Making • English • Italian Cookery

Airline Ticketing Course

- CERTIFICATE IN AIRLINE TICKETING
  3 MONTHS COURSE, 5 CERTIFICATES
- DIPLOMA IN AIRLINE TICKETING
  6 MONTHS COURSE, 7 CERTIFICATES

ENGLISH & IT

Diploma in English Diploma in IT

- Speaking
- Reading
- Listening
- Writing

8 Certificates

சாதாரண தரம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகிய கால பயிற்சி நெறி

- MS Office
- Graphics
- Basic Programming
- Internet & E-mail

40% கழிவு

Diploma in Montessori (AMI)

AMI Internationally Recognised Diploma program is designed for aspiring pre-school Teachers and Parents

- Child Psychology
- Sensorial Education
- Practical Life Exercises
- Language Education
- Mathematical Concept
- Hand Work

- 3 Months Teacher Training Course
- Training Method in 3 Languages
- Excellent Local & Foreign Career Prospective
- Get self employed with your own Montessori
- You can obtain 60 points for your Skill Migration Application

Email: info@lchs.edu.lk **Web: www.lchs.edu.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.